# ஈழத்துத் தமிழ்ப் பெண் ஆளுமைகள்

பத்மா சோமகாந்தன்



குமரன் புத்தக இல்லம்

# முக்கிய அறிவித்தல்

## பொது நூலகம்
## வலிகாமம் வடக்கு பிரதேச சபை

நீங்கள் எடுத்துச் செல்லும் புத்தகத்தில் கீறுதல், வெட்டுதல், கிழித்தல், அழித்தல், அழுக்குப்படியவிடல் மற்றும் ஊறுபாடுதல்களைச் செய்ய வேண்டாமெனக் கேட்டுக் கொள்கின்றோம். புத்தகங்களை நீங்கள் எடுக்கும்பொழுது இப்படியான குறைபாடுகளைக் கண்டால் நூலகப் பொறுப்பாளருக்கு உடன் தெரிவிக்கவும். அல்லாவிடின் நீங்கள் எடுத்துச் சென்ற புத்தகம் நல்ல நிலையில் இருந்ததெனக் கருதப்படுவதுடன், ஊறுபாடுகளுக்கு நூலகப் பொறுப்பாளரினால் விதிக்கப்படும் தண்டத்தை நீங்கள் ஏற்கவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படும்.

ஈழத்துத் தமிழ்ப் பெண் ஆளுமைகள்

பொது நூலகம்
வலி. வடக்கு பிரதேச சபை
தெல்லிப்பளை

# ஈழத்துத் தமிழ்ப் பெண் ஆளுமைகள்

கலை, இலக்கிய, கல்வித் துறைகளில் தடம் பதித்த
பதினான்கு பெண்கள் பற்றிய தொகுப்பு

பத்மா சோமகாந்தன்

| | |
|---|---|
| வரவுப்பதிவு எண் | 4457 |
| பகுப்பு எண் | 920 |

குமரன் புத்தக இல்லம்
கொழும்பு - சென்னை
2012

ஈழத்துத் தமிழ்ப் பெண் ஆளுமைகள்
பத்மா சோமகாந்தன் எழுதியது

பதிப்புரிமை © 2012, பத்மா சோமகாந்தன்

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6, தொ.பே. 0112 364550, மி. அஞ்சல்: kumbhlk @gmail.com
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை - 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6

Iḷattut Tamiḻ Peṇ Āḷumaikaḷ
by Pathma Somakanthan

© 2012, Pathma Somakanthan

Published by Kumaran Book House
39, 36th Lane, Colombo -6, Tel. - 0112 364550, E.mail : kumbhlk@gmail.com
3 Meigai vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

Printed by Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo -6

வெளியீட்டு எண்: 517

ISBN 978-955-659-331-0

**சமர்ப்பணம்**

என் வாழ்வின் மறுபாதியாயிருந்து
என் இலக்கிய முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கிய
என் கணவர்
**காலஞ்சென்ற என். சோமகாந்தன்**
அவர்களுக்கு

# அணிந்துரை

‘பெண் எழுதும் காலம்’ என்ற தொடர் பால்நிலை நோக்கிலே முக்கிய மானதாகக் கருதப்படுகின்றது. பெண்கள் பற்றிய ஆண்களின் புலக் காட்சியிலிருந்து விடுபட்டு பெண்களே பெண்களை நோக்கல் முகிழ்த் தெழத் தொடங்குதலின் தொடராக அந்த அறி தலைப்பு அமை கின்றது.

அறியப்படாத நிலையிலும், அறிந்தும் ஆவண வெளிக்குக் கொண்டுவரப்படாத நிலையிலுமுள்ள ஆளுமைகள் இந்நூலிற் பதி வுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. சமூகத்தின் பன்முகத்தளங்களில் இயங்கியோர் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர். அதிபரிலிருந்து சமய ஆற்றுனர் வரை தெரிவு நீண்டுள்ளது.

‘‘பொருண்மையற்ற மற்றவர்’’ (Nonsignificant Other) என்ற பெண்கள் பற்றிய எண்ணக் கோலத்தை மாற்றியமைப்பதற்குரிய எழுத்துப் பங்களிப்பை மேற்கொண்டு வரும் இந்நூலாசிரியரின் பணியின் நீட்சியாக இந்நூல் அமைந்துள்ளது. ஆன்மீகம், சமூகம், கல்வி, சமூக சேவை முதலாம் துறைகளிலே ஊறியெழுந்த ஆளுமை களின் எழுத்துக்கு வராத பரிமாணங்கள் இந்நூல் வழியாக எழுகோலம் பெறுகின்றன.

கல்வியும் அதன்வழி பெறப்பட்ட வாண்மை நிலையும் பெண்களின் வாழ்விலே நிலைக்குத்துச் சமூகப் பெயர்ச்சியை ஏற்படுத்தின. ஆயினும் அந்த அசைவியம் சமூக அடுக்கமைவின் அனைத்துப் பிரிவினருக்கும் கிடைத்திலது. அதாவது சமூக அடுக்கின் அடித்தளத்தினர் மேல் நோக்கிய சமூகப் பெயர்ச்சியிற் பங்கேற்க முடியா இடைவெளி நூலின் மறைமுகச் சுட்டாக அல்லது கட்புலனாகா வெளியாக இருத்தல் வாசிப்பின்போது எழும் சமூக அறிகை அனுபவமாகவுள்ளது.

தனித்தனி ஆளுமைகளின் உருவாக்கமும் செயலாற்றுகையும் இந்நூலிலே குறிப்பிடப்பட்டிருந்தாலும் அவற்றினூடாகப் பெண்கள் தொடர்பான ஒரு ‘கூட்டு அடையாளத்தைக்’ காணமுடிகிறது. அந்த அடையாளம் ஆண்களின் நோக்கிலிருந்து விடுபட்ட அடையாள மாகின்றது. ‘முழுமையடையாத ஆண்களின் ஆளுமையே பெண்கள்’

என்ற ஆண்வழிச் சமூகத்தின் மனக்கட்டுமையைத் தகர்க்கும் நூலாக்க வரிசையில் இந்நூலும் இடம் பெற்றுக் கொள்கின்றது.

மரபு வழியாக உருவாக்கப்பட்டு வந்த பெண்கள் தொடர்பான 'ஏகவகைக் கட்டுமை'யைத் தகர்ப்பதில் இந்நூலும் பங்களிப்புக் கொள் கின்றது.

பெண்கள் பற்றிய சித்திரிப்பில் நான்கு வகையான பரிமாணங்கள் இந்நூலாசிரியரின் கவன ஈர்ப்பைக் கொண்டுள்ளன. அவையாவன

1) பெண்கள் தொடர்பான படிமவாக்கம்.
2) பெண் மொழி.
3) கட்டுமானம் செய்யப்பட்ட பண்பாட்டுச் சட்டகத்திற் பெண்கள்.
4) மாற்று உளவியல்.

ஒவ்வோர் ஆளுமையையும் கல்விமாற்றங்களினூடே வளர்ந்து வரும் புதிய பெண் படிமவாக்கத்தை உருவாக்கித் தரும் வேளை 'மென் மொழிப் பயன்பாடே' நூலாசிரியரின் எடுத்தாள்கையாகவுள்ளது. 'கட்டுமானம் செய்யப்பட்ட' சமூகப் பண்பாட்டுச் சட்டகத்தில் நின்று இயங்கிய பெண்களே சித்திரிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

பெண்கள் தொடர்பான உளவியலில் உடைப்பு ஏற்படல் வேண்டு மென்ற கருத்தின் நகர்வை 'மென்போக்கு நிலையில்' ஆசிரியர் முன் னெடுத்துள்ளார்.

கடந்த நூற்றாண்டின் தொடக்க காலத்திலிருந்து பெண்கல்வி விரிவாக்கம் இடம் பெற்று வந்தாலும் கல்வி வழி உருவாக்கம் பெற்ற பெண்கள் சமூகத்தின் ஆண்வழிக் கட்டுமைக்கு (Construct) உட்பட்ட நிலையிலே தான் தமது சமூகம் மற்றும் கல்விப் பணிகளை முன்னெ டுத்து வந்துள்ளனர். பெண் தொடர்பான சமூகக் கட்டுமைக்குள் அடங்கி அமைந்து செயலாற்றிய நிலையில் அவர்கள் 'முரணுறாத்' பாத்திரங்களாகவே இருந்தமை புலனாகின்றது.

குடும்பத்திலே பெண்கள் வகித்த வகிபாகங்களின் 'நீட்சி'யாகவே அவர்களின் சமூக வகிபாகங்கள் இருந்தமை முக்கியமான அவதானிப்புக் குரியது. அந்த நீட்சி சமூக விழுமியங்களோடு பொருத்தப்பாடு கொண்டு இசைவுறும் நீட்சியாகவே இருந்துள்ளது. இன்று வரை அதன்

தொடர்ச்சி பெருமளவில் முரணுறாத தொடர்ச்சியாகவே இருந்து வருகின்றது. நூலில் எழுதப் பெற்றுள்ள ஆளுமையினர் தத்தமது தனிநிலையில் நின்று சமூகத்துக்குச் செய்தியை விடுத்துள்ள வேளை, பெண்களுக்குரிய ஒரு 'மாதிரிகை' உருவாக்கத்துக்குரிய வடிவின ராகவும் அமைந்திருந்தனர். எமது சமூகத்திலே பெண்களின் கல்வி ஈடுபாட்டுக்குரிய விசை ஓங்கலில் அந்த ஆளுமைகளின் பங்களிப்பு முக்கியமானது.

கல்வியை முக்கியப்படுத்தும் செய்தியை அவர்கள் சமூகத்துக்கு வழங்கிய வேளை கல்விப் பரவலை முன்னெடுக்கும் வினைஞராகவும் (Activist) தொழிற்பட்டனர். சமூகக் கட்டுப்பாடு மற்றும் மட்டுப் பாடுகளுக்குள் இயங்கிய வேளை அவர்களது வினைப்பாடுகள், அதிக விதந்துரைப்பின் பாற்படாத செயல்களாக சமூக மதிப்பீட்டு அளவுத் திட்டத்தில் அமைந்திருந்தமை ஊன்றிய கவன ஈர்ப்பைப் பெறுகின்றது.

மேற்கூறிய விடயத்தை மேலும் கருத்தூன்றிச் சொல்வதானால், ஆண்களின் சமூக சேவைப் பணிகளையும், பெண்களின் சமூக சேவைப் பணிகளையும் ஒரே தராதர நிலையிலே சமூகம் கணிப்பீடு செய்ததா என்ற அறிகை நோக்கு மேலெழுகின்றது.

நூலை வாசிக்கும் பொழுது மேற்கூறியவாறு பல கருத்துக்களும் வினாக்களும் துளாவி எழுதலைக் குறிப்பிட வேண்டியுள்ளது. அவ் வாறான அருட்டல்களைத் தூண்டும் எழுத்தையும், தொகுப்பையும் மேற்கொண்ட நூலாசிரியரது முயற்சி பெண்ணிய நோக்கிலே வினை யூட்டும் பதிவுக்குரியது.

நீண்ட எழுத்தாக்க அனுபவங்களூடே இயங்கி வந்த நூலாசிரியரின் 'எடுத்தியம்பல்' முறை சாதாரண வாசகரின் அறிகை வீச்சினுள் சங்கம மாகக் கூடிய செம்பரவலாகவுள்ளது.

பேராசிரியர் சபா. ஜெயராசா

# முகவுரை

நம்நாட்டில் ஒவ்வொரு துறையிலும் முன்னிலை வகித்து வாழ்ந்து கொண்டிருந்த பெண்கள் சிலரைப் பற்றி ''ஈழத்து மாண்புறு மகளிர்'' என்ற தலைப்பில் ஒரு நூலைச் சில வருடங்களுக்கு முன்னர் வெளியிட்டிருந்தேன். முதன்முதலாகப் பெண்களைப் பற்றிய கட்டுரைத் தொகுதியாக நம்நாட்டில் வெளிவந்த நூல் என்ற பெருமையை இந்நூல் எனக்குத் தேடித்தந்தது.

இம்முறை வாழ்ந்து மறைந்த சில பெண் ஆளுமைகள் பற்றி பேசும் இந்நூலை உங்கள் கரங்களில் தவழவிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். எல்லோரும் இதனை ஆதரித்து வரவேற்பீர்கள் என நம்புகிறேன்.

பெண்கல்வி மறுக்கப்பட்டிருந்த காலமொன்றும் இருந்தது. கடந்த நூற்றாண்டிலே சகலரும் முறை சார்ந்த கல்வியைப் பெறாவிட்டாலும் மேல்மட்டத்தினைச் சார்ந்த சில பெண்கள் அறிவில் மேம்பட்டவர்களாகவும் அங்கொன்றும் இங்கொன்றுமாக முறைசார்ந்த நூலறிவைத் திண்ணைக்கல்வி மூலம் பெற்றவர்களாகவும் விளங்கினர். இவையெல்லாம் இப்பெண்களுக்கு இலகுவாகக் கிட்டிய வசதிகளோ வாய்ப்புக்களோ அல்ல. பல முரண்பாடுகளின் மத்தியில் மிகுந்த பிரயத்தனத்தினாலும் முயற்சியினாலும் இடையறாத உழைப்பினாலுமே இவர்கள் தமது நிலைகளை எட்டவேண்டிய துரதிஷ்டம் இவர்களைத் துரத்தியபடியே இருந்தது.

அவ்வளவு தூரம் சமுதாயத்தின் கட்டமைப்புக்கள், மரபினுடைய இறுக்கம் ஆகியன பெண்கள் வெளியுலகை எட்டிப்பார்க்கவோ உலகியல் அறிவினைத் தொட்டுச் சுவைக்கவே முடியாதபடி தடை விதித்தன. எனினும், இவர்கள் தமது சொந்த ஆர்வத்தினாலும் முயற்சியினாலும் ஆற்றல்மிக்க பெரியார் சிலரின் அரவணைப்பினாலும் தமது எண்ணங்களைச் சாதிக்கத் துணிந்ததன் வடிவமே இத்தனை ஆளுமைகளையும் நாம் சமூகத்தின் முன் நிறுத்தக்கூடியதாக அமைந்தது.

இருள்மயமான சூழலையே சுவாசித்துக் கொண்டிருந்தாலும் வல்லமையுடன் பல உதாசீனங்களையும் தூக்கியெறிந்து ''எம்மாலும்

சாதிக்க முடியும்!'' என்ற இலட்சியத்தை வெகு அடக்கமாகவும் பொறுமையாகவும் மென்மையாகவும் இலகுவாகவும் கடந்து வந்த ஏராளமான பெண்களில் ஒரு சிலருடைய ஆளுமைகளையாவது பதிவுசெய்வது காலத்தின் தேவையெனக் கருதி இவற்றை வெளிக் கொணர்ந்துள்ளேன்.

நம்நாட்டில் பல ஆண்டுகளைக் கபளீகரம்செய்த யுத்தம், வன் செயல்கள், இடப்பெயர்வுகள், குண்டுவீச்சுகள், அழிவுகள் காரணமாக இவ்வாளுமைகளின் விபரமான வரலாறுகள் இவர்கள் வாழ்ந்த, ஊடாடிய, பணிசெய்த இடங்கள், பற்றியெல்லாம் எதனையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கவில்லை. சிலருடைய பிறப்பு இறப்புக்களே சரியான முறையில் அத்தாட்சிப்படுத்த முடியாத நிலையில் மண் ணோடு மண்ணாகிவிட்டன.

பெண்கள் பேனாவைக் கையில் எடுத்துக் கொண்டாலன்றி எம்மவரின் ஆளுமையைப் பதிவுசெய்ய யாராவது முன்வரமாட் டார்களா? என்ற ஏக்கம் மனதைக்குடையவே படபடவென்று பந்திகள் கட்டுரைகளாக உருவமெடுத்தன. ஒவ்வொரு பெண்மணியைப் பற்றியும் அலைந்து தேடி தரவுகள் திரட்டி எழுதுவதென்பதும் பெரும் பகீரதப்பிரயத்தனம்தான். எனினும் இது ஒரு மகிழ்ச்சித்தரும் பணியே.

எனது எழுத்துக்களுக்கு ஊக்கம் தரும் வகையில் அரிய கருத்து பொதிந்த அணிந்துரையை வழங்கியுள்ள சிறந்த கல்விமானான பேராசிரியர் சபா.ஜெயராசா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி.

இக்கட்டுரைகள் வாரந்தோறும் ஞாயிறு தினக்குரலில் வெளி வந்தன. இவற்றைச் சிறப்பாக வெளியிட்டு உதவிய தினக்குரல் ஞாயிறு இதழாசிரியர் திரு.இராசநாயகம் பாரதி அவர்களுக்கும் தினக்குரல் ஆசிரியபீடத்தினருக்கும் என் மனம் கனிந்த நன்றி.

இந்நூலை அழகாக அச்சிட்டு உதவிய திரு.கணேசலிங்கம் குமரன் அவர்களுக்கும் குமரன் புத்தக இல்லத்தினருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

215 G 1/1 அன்டேசன் தொடர்மாடி
பார்க் வீதி, கொழும்பு - 05.

அன்புடன்
பத்மா சோமகாந்தன்

# பொருளடக்கம்


| | |
|---|---|
| அணிந்துரை | vii |
| முகவுரை | x |
| 1. சுன்னாகம் செல்லாச்சி அம்மையார் (1863 - 1929) | 1 |
| 2. மங்களம்மாள் மாசிலாமணி (1884 - ) | 6 |
| 3. கலாநிதி முத்தம்மா தில்லையம்பலம் (1885 - 1976) | 17 |
| 4. மீனாட்சியம்மாள் நடேசையர் | 25 |
| 5. செல்லம்மா நாகேந்திரர் (1900 - 1989) | 34 |
| 6. பண்டிதை பத்மாசனி அம்மாள் (1903 - 1978) | 43 |
| 7. இராசம்மா கனகசபை (1904 - 1992) | 48 |
| 8. கண்மணி ஸ்ரீஸ்கந்தராஜா (1909-) | 53 |
| 9. இரத்தினா நவரத்தினம் (1910 - 1993) | 59 |
| 10. சௌந்தரம் சந்தனநங்கை கந்தப்பு (1912- 1978) | 68 |
| 11. பண்டிதை கங்கேஸ்வரி கந்தையா (1917 - 1993) | 73 |
| 12. பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் (1922 - 1986) | 78 |
| 13. தங்கம்மா அப்பாக்குட்டி (1925 - 2008) | 84 |
| 14. பத்மா இராமநாதன் (1926 - 1987) | 95 |
| பின்னிணைப்பு | |
| டாக்டர் மேரி ரட்ணம் (1873- 1962) | 106 |

பொது நூலகம்
வலி. வடக்கு பிரதேச சபை
தெல்லிப்பளை

1

# சுன்னாகம் செல்லாச்சி அம்மையார்
## [1863 – 1929]

ஈழத்தைப் பொறுத்தளவில் நாவலர் பெருமான் காலத்திலும் அதன் பின்னரும் கூட, பெண்கள் பாடசாலைக் கல்வியை அதிகம் மேற்கொள்ளாவிடினும் வீட்டிலிருந்தே ஆன்மீகத் தேடலுக் கான கற்றலை மேற்கொண்டிருந்தனர். புராணங்கள், சாஸ்திரங்கள், சமய சம்பந்தமான விடயங்களைக் கற்றறிந்தோர் வாயிலாகக் கேட்டும் படித்தவர்கள் வாசிக்கும்போது அவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்தும் சமயப் பழக்க வழக்கங்களைக் கடுமையாகக் கடைப்பிடித்தும் கோவில்களுக்குச் சென்று வழிபட்டு அங்கு நிகழும் கிரியைகளையும் சடங்கு சம்பிரதாயங்களையும் பார்த்து விளங்கிக் கொண்டும் தமது அறிவைப் பெருக்கிக் கொண்டனர். குடும்பப் பெண்களுக்கு அவர்களது நாளாந்த விடயங்களோடு கணவன், குழந்தை, பெற்றோர் ஆகியோருடனான மிக நெருங்கிய தொடர்புள்ள வேறு விடயங்களும் அமைந்திருப்பதால் ஒன்றோடொன்று இணைந்து பெண் களுக்கு இவை மிக நெருக்கமாகிவிட்டன. அதனால்போலும் அநேகமான பெண்கள் அடக்கமாக, வெகு அமைதியாக இருந்தாலும் ஆன்மீகத் தேடல்மிக்கவர்களாகவும் ஆன்மீக ஈர்ப்பு மிக்கவர்களாகவும் வாழ்ந்தனர். இத்தகையோருள் உச்சநிலையில் அநுபூதி பெற்ற அருட் செல்வியாக வாழ்ந்து மறைந்தவர்தான் சுன்னாகம் செல்லாச்சி அம்மையார்.

செல்லாச்சி அம்மையார் யாழ்ப்பாணத்தின் வடபகுதியிலேயுள்ள சுன்னாகம் என்ற இடத்திலே 1863 ஆம் ஆண்டு பிறந்தார். சுன்னாகம்

என்ற ஊரில் பிறந்ததனால் அங்கேயே வளர்ந்து வாழ்ந்த இவரை மக்கள் அன்போடு ‘சுன்னாகத்தம்மா’ என்று செல்லமாக அழைத்து மகிழ்வர். வேளாண் மரபிலே கல்வி ஒழுக்கங்களில் தலைசிறந்த முத்துக்குமார கவிராயர் என்ற பெரியாரொருவர் சுன்னாகத்திலே வாழ்ந்தார். அவருக்கு ஒரு பேரன். அவரது பெயர் கணக்கர் முத்துக் குமாரு. இவருக்கு மூன்று ஆண்குழந்தைகளும் இரு பெண்குழந்தை களும் இருந்தனர். இவரது மூத்த மகளே செல்லாச்சி அம்மையார்.

செல்லாச்சி அம்மையார் சிறுமியாக இருந்தபோது, தம்வீட்டிற்கு அருகாமையிலேயுள்ள ஒரு சிறிய பாடசாலையில் சிலகாலம் கல்வி பயின்றார். பின் வீடே பாடசாலையானது. வீட்டிலிருந்துகொண்டே தேவார திருவாசகங்களையும் பயின்றதுடன் நாவலருடைய இரண்டாம் பால பாடம், நாலாம் பாலபாடம், முதலாம் வினாவிடை, இரண்டாம் வினாவிடை என்பவற்றை பாடநூல்களாக ஏற்றுக் கொண்டு பக்திப் பயிரை வளர்க்கத் தொடங்கி விட்டார்.

ஆன்மீகத்தில் ஈடுபடும் ஆற்றலும் திறமையும் ஆண்களுக்கு மட்டும்தான் உரியது என்ற நிலையைப் பொய்மையாக்கி, எந்த நிலையிலும் முயற்சியும் ஆர்வமும் இயல்பான ஈடுபாடும் கொண்டி ருந்தால் யாருமே எந்த உயர்நிலையையும் அடையமுடியும் என்பதை அம்மையாரின் வாழ்வைக் கூர்ந்து அவதானித்தால் புரிந்து கொள்ளலாம்.

இறையருளை நேரடியாகப் பெற்றுக் கொண்ட அநுபூதி மான்களான செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் போன்றோ ருடைய ஆசிகளைப் பெறும் பேறும்பெற்ற யாழ்மண் செல்லாச்சி அம்மையார் போன்ற அநுபூதியாளர்கள் தோன்றிய மகிமையையும் கொண்டி லங்கியது.

‘இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்’ என்ற நாவலர் பெருமானின் மகாவாக்கியத்தை என்று கற்றாரோ அன்றிலிருந்தே அதன் பொருளில் தன் உள்ளத்தை ஆழப்பதித்து, ஐம்புலங்களையும் அடக்கியாண்டு அருள்நிலைக்குத் தன்னை ஆளாக்கிக் கொண்டவர் செல்லாச்சி அம்மையார்.

இவர் தமது இருபத்தாறாவது வயதிலே சுகாதார வைத்தியப் பகுதியில் அப்போதிக்கரியாகப் பணியாற்றிக் கொண்டிருந்த முதலியார்

தம்பு என்பவரைத் திருமணம் செய்தார். குடும்பப் பணிகளோடு ஆலயப்பணிகளிலும் அக்கறை கொண்டு திருக்கோவில்களைச் சுத்தம் செய்வதிலும் திருமெழுகிடுதல், திருவலகிடுதல் போன்ற திருத் தொண்டுகளிலும் தன்னை ஈடுபடுத்தினார். அக்காலத்திலே அநேகமாக யாழ்ப்பாணத்தில் பிரசித்திபெற்ற ஆலயங்களில் புராண படனங்கள் என்றொரு சிறப்பு நிகழ்ச்சி இடம்பெறுவது வழக்கம். இவை படித்த வர்க்கு மட்டுமன்றிப் பாமர மக்களுக்கும் ஆன்மீக அறிவை வளர்ப் பதோடு பக்திச்சுவையையும் சிறந்த முறையான பொழுதுபோக்கிற்கான வழிகாட்டியாகவும் அமையும். அக்காலங்களிலே இன்றுபோல் வானொலி, தொலைக்காட்சி போன்ற பொழுதுபோக்குக்கருத்தை விளக்கும் ஊடகங்கள் இருக்கவில்லை. எனவே, பண்டைய மக்கள் இறைவனுடைய திருவிளையாடல்களையும் புராணக் கதைகளையும் சம்பவங்களையும் இப்புராண படனங்கள் மூலமே செவியுற்று இன் புற்றனர். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்த செல்லாச்சி அம்மையார் தாம் வாழும் சூழலில் இருந்த சுன்னாகம் பிள்ளையார் கோவிலிலும் சுன்னாகம் மயிலணிச் சிவன் கோவிலிலும் இப்புராண படனங்கள் ஒழுங்காகத் தொடர்ந்து நடைபெறுவதற்கான ஒழுங்குகளை மேற் கொண்டு சிறப்புற நடத்திவந்தார். இவர் தான் மாத்திரம் ஆன்மீக ரீதியில் ஊறித்திளைத்ததோடு தன் சூழலில் உள்ளவர்களையும் ஊக்கு வித்தாரேயன்றி, அமைப்பு ரீதியாக ஆன்மீகத்தை முன்னெடுத்துச் சென்றவர் எனக் குறிப்பிட முடியாது. இறைபக்தியோடு சுற்றாடலில் சுத்தம் பேணுவதிலும் அம்மையார் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். ஆறுமுகநாவலரின் நூல்களில் குறிப்பிட்டுள்ள கற்பு, வீட்டுவேலை, வீட்டுக்கொல்லை என்பன இவரைமிகவும் கவர்ந்திருந்தன. அதனால் தனது வீட்டின் சுற்றுப்புறங்களையெல்லாம் சுத்தப்படுத்துவதோடு, சாணிபோட்டு மெழுகியும் துப்புரவாக வைத்திருந்தாரென அறி கிறோம்.

ஒரு ஆணும் ஒரு பெண்ணுமாக இரு குழந்தைகளைப் பெற் றெடுத்த அம்மையார், உயர்ந்த சிந்தனைகளும் எவ்வித படாடோப மற்ற எளிய வாழ்க்கை முறையையுமே மேற்கொண்டு வாழ்ந்தார். 1905 ஆம் ஆண்டு இவரது கணவர் முதலியார் தம்பு இறைபதம் சேர்ந்தார். கணவனது மரணத்தோடு தொடர்பான அந்திமக்கிரியை களையெல்லாம் அணுவும் பிசகாது ஒழுங்காக நிறைவு செய்த

அம்மையார் பண்டைய நூல்களில் குறிப்பிட்டபடி அணிகலன்களை மங்கலப் பொருட்களையெல்லாம் துறந்தார்.

பூஜையும் வழிபாடும் தியானமூலமே வாழ்வாக ஏற்றுக் கொண்டார். நீண்ட நேரம் மௌனத்திலும் தியானத்திலும் தன்னை மறந்து ஆழ்ந் திருப்பார். இதனால் அடிக்கடி சமாதி நிலைக்கு ஆளானார்.

கடவுளின் அருள் கைவரப் பெற்றமையால், பல அமானுஷ்யமான சித்திகளை அவரிடமிருந்து மக்கள் பெறக்கூடியதான வாய்ப்பும் கிடைத்தது.

இதனால் நோயாளர்கள், உடல் ஊனமுற்றோர், இன்னல்களுக் காளானோர் எனப் பலரும் அம்மையாரைத் தரிசித்துத் தம் குறை பாடுகளை நிறைவுசெய்து கொள்வர். அம்மையாரின் ஸ்பரிசம், ஆசீர்வாத வார்த்தைகள், அவர் வாழ்த்திக் கொடுக்கும் திருநீறு, அவர் வீட்டுக் கிணற்றிலிருந்து எடுக்கும் குளிர்ந்த நீரான தீர்த்தம் யாவுமே பெருந்தொகையான மக்களின் நோய்களையும் இன்னல்களையும் மற்றும் பிணிகளையும் போக்கடிக்கும் மருந்தாகவும் மந்திரமாகவும் ஆகின. அநேகமான நோயாளிகளெல்லாம் அவரைச் சுற்றிச் சுற்றியே திரண்டனர். ஆனால், அம்மையார் மக்களைத் துன்பநிலையிலிருந்து விடுபட உதவினாலும் இவற்றில் தன்னுடைய சக்தியோ ஆற்றலோ கொஞ்சமும் இல்லையென்றும் இவையெல்லாம் திருவருள் ஆணையால் நிறைவேறுகிறது என்றே பணிவாக உரைத்து இறைவனின் அருளை எண்ணி எண்ணி வியப்பார்.

இறைவன் திருவடி நிழலையே அடைய வேண்டுமென்ற பக்தி வைராக்கியத்துடன் விபூதி பூண்ட பிரகாசமான தோற்றத்துடன் அருட் பாக்களையெல்லாம் உரத்த குரலில் இடையறாது பாடி இசைத்தபடியே இருப்பார். சிறிதுநேரத்தில் யாவும் அடங்கிச் சமாதிநிலையெய்தி விடுவார்.

இவருடைய பக்திவைராக்கியத்தையும் ஆன்ம ஈடேற்றத்தையும் அறிந்த கொழும்புத்துறை யோகர் சுவாமியாரவர்கள் சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் இவருடைய இருப்பிடத்திற்குச் சென்று ஆன்மீக விடயங்களைப் பற்றி ஆராய்வதும் கலந்துரையாடுவதும் உண்டு.

திருவாசகமே தனது ஞானகுரு எனக் கூறும் அம்மையார் யோக சுவாமிகளுடன் சேர்ந்து தோத்திரப் பாடல்களையும் பாடிமகிழ்வார்.

இவ்விரு பெரும் அநுபூதியாளர்களுடைய சந்திப்பும் சந்திர சூரிய சக்திகளை ஒன்றாகக் காண்பது போன்ற அரும் சந்தர்ப்பமாகவும் அற்புதக் காட்சியாகவுமே மக்கள் கண்டனர்.

அம்மையார் யோகர் சுவாமிகள் மீது பெரும்பக்தியும் மதிப்பும் கொண்டிருந்ததைப் போலவே சுவாமிகளும் அம்மையார் மீது கொண் டிருந்த மதிப்பால், "செல்லாச்சிப் பிள்ளையைப் போல் ஒரு கெட்டிக் காரியை நான் கண்டதில்லை" என்று கூறியிருந்தார். அதேபோல் அம்மையாரும் சுவாமிகளைப் பற்றிக் குறிப்பிடுகையில், தம்மிடம் வந்துபோகும் பல பரதேசிகளில் உண்மையான துறவி யோகர் சுவாமிகளே எனச் சொல்லியதாக அறிகிறோம்.

செல்லாச்சி அம்மையாரின் மிக நீளமான கேசத்தின் முறுக்கு சடையை ஆண்கள் அணியும் முண்டா தலைப்பாகைபோல அவர் தலையைச் சுற்றி அணிந்திருக்கும் தோற்றம், சாந்த ஒளி தவழும் திவ்ய வதனம், மென்மை சேர்ந்த மிருதுவான சரீரம், கேரளப் பெண்கள் பாணியில் குறுக்குக்கட்டாகக் கட்டப்பட்ட வெள்ளைச் சேலை. இவையே செல்லாச்சி அம்மையாரின் திருத்தோற்றப்பொலிவு என 1919 இல் அவரைச் சந்தித்த அளவெட்டியைச் சேர்ந்த செ.மயில்வாகனம் என்ற பெரியார் குறிப்பிட்டுள்ளார்.

இவருடைய புகைப்படம் கிடையாது. யாருமே எடுக்கவில்லை. ஆன்மீகத்திற்கு விளம்பரம் தேவையில்லையே என்ற கருத்தில் அம்மையார் புகைப்படம் எடுக்க என்றுமே இணங்கிய தில்லை.

பிற உயிர்கள் மீதெல்லாம் அன்பு பொழிந்து வெகு அமைதி யாகவும் அடக்கமாகவும் ஆன்மீக வைராக்கியத்திலிருந்து இம்மியும் பிசகாது அருள் வேண்டிப் பணிந்து அநுபூதிச் சீலத்தை எய்திய சுன்னாகத்தம்மா- சுன்னாகம் செல்லாச்சி அம்மையார் 18.01.1929 ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

2

## மங்களம்மாள் மாசிலாமணி

## (1884 – ? )

யாழ்நகரின் மையமான வண்ணார் பண்ணையில் கல்வி, கலாசாரம், பண்பாடு எனத் தமிழ் மக்களின் மேன்மையான இலட்சியங்களைத் தமது வாழ்வாகக் கொண்டு சகல துறைகளிலும் பெருமையுடன் விளங்கிய பெரியோர் பலர் வாழ்ந்தனர். அறிஞர்களை உருவாக்கும் பல கல்லூரிகள், அருள் மிகுந்த ஆலயங்கள், மேன்மைமிகு ஆன்றோர்கள், தர்மஸ்தாபனங்கள், அச்சகங்கள் எனப் பல விடயங்கள் இவற்றிற்குப் பக்கபலமாக அமைந்திருந்தன. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஸ்தாபித்த நாவலர் பாடசாலை, வேதாகம பாடசாலை, நாவலர் அச்சுக்கூடம், நாவலர் பெருமான் முதன் முதலும் இறுதியாகவும் தனது பிரசங்கத்தை நிகழ்த்திய வண்ணார்பண்ணைச் சிவன் கோவில் எனப் பல வரலாற்று முக்கியத்துவம் பொதிந்தவற்றின் இடம் வண்ணார் பண்ணை. இங்கே காங்கேசன்துறை வீதியில்தான் யோகர் சுவாமிகள் ஆரம்பித்து வைத்த சிவதொண்டன் நிலையமும் அமைந்துள்ளது. சிவத்தொண்டன் நிலையத்திலிருந்து சுமார் நூறுயார் தொலைவில்தான் பி.ஏ.தம்பி ஒழுங்கை உள்ளது. அங்கே வாழ்ந்தவர்தான் பெண்கள் தொடர்பான பல நல்ல விடயங்களுக்கெல்லாம் வித்திட்ட சமூகசேவகியும் பெண் எழுச்சி கொள்ளப் புரட்சிகரமான கருத்துக்களை முன்னெடுத்தவருமான மங்களம்மாள் மாசிலாமணி, என்ற வரலாறு படைத்த அம்மையார்.

அம்மையார் எமது வீட்டிற்கு அடிக்கடி வருவார். எமது வீட்டின் அயலிலேதான் இவரது இருப்பும். எமது பெற்றோருடன் இவர்



மங்களம்மாள் மாசிலாமணி

நெருங்கிப் பழகியதன் காரணமாக நான் பத்துப்பன்னிரெண்டு வயதுச் சிறுமியாயிருந்த போது இவரோடு பேசி பழகி முன்னும் பின்னும் திரிந்து இவருடைய கூட்டங்களில் தேவாரம் பாடிய நினைவுகள் என்மனதில் நன்கு பதிந்துள்ளன. அம்மையார் பற்றிய சில விடயங்களை என்னால் பகிர்ந்து கொள்ள முடிகிறது. பொதுநிறமும் வயது முதிர்ந்த சராசரி உயரமுமான மெலிந்த தோற்றத்தைக் கொண்ட அம்மையார் நான் காணும் போதெல்லாம் வெள்ளைச் சேலையில் மறுதலைப்பால் மார்பைச் சுற்றிப் போர்த்திச் சொருகியபடி காட்சிதருவார். நடுவகி ரெடுத்துத் தளரவிட்டு முடிந்த மிகச்சிறிய கொட்டைப்பாக்கு குடுமி. எந்நேரமும் வெற்றிலை பாக்கு வாயில் குதப்பியபடி, வெற்றிலைக் காவி படிந்த பற்களுடன் அவர் நகைக்கும் போது இடை வெளிமிக்க பல்வரிசையுடன் முகம் பொலிந்து மங்களமாகவே இருக்கும். காந்தி மகானின் இலட்சியங்களில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தாரென்பதை நான் வளர்ந்து பெரியவளான பின்தான் விளங்கிக் கொண்டேன். கால்களில் செருப்பும் கையிலே ஒரு சீலைப்பையும் அதனுள்ளே துண்டுப் பிரசுரங்கள், 'தமிழ்மகள்' பத்திரிகை, அதற்கான கட்டுரைகள் என்பவை அவர் கரங்களில் தொங்கியபடி இருக்கும். 'தமிழ் மகள்' பத்திரிகையை அவர்தானே வீடுவீடாக எடுத்துச் சென்று விநியோகிப்பார்.

எங்கள் வீடு அவர் போய் வரும் பாதையில் அமைந்திருப்பதால் அடிக்கடி வருவார். தமிழ் மகளையும் தருவார். பின்னர் தான் அப் பத்திரிகையின் ஆசிரியர் தான் இவர் என்பதை நான் புரிந்து கொண் டேன். அவருடைய வெள்ளைச் சேலையும் கதராடையாகவே இருந்தது. அகிம்சை, சத்தியம், தீண்டாமை என்ற காந்தீயக் கொள்கையைப் பரப்புவதில் ஈடுபாடு கொண்டிருந்த அம்மையார் வண்ணார் பண்ணை இந்துக் கல்லூரித் தமிழ்ப்பாடசாலை மண்டபத்திலே கூட்டங்களை நடாத்துவார். என்னையும் என் பெற்றோரிடம் உத்தரவு பெற்று அழைத்துச் செல்வார். இக்கூட்டங்களில் ஆண்கள் கலந்து கொண்டதாக இல்லை. 10,15 பெண்களே கூடியிருப்பர். என்னைத் தேவாரம், பாரதிபாடல், மூதுரை, காந்திமகானின் கதர்ப்பாட்டு ஆகியவற்றைப் பற்றிப் பாடவைப்பார். இத்தகைய தலைப்புக்களில் அப்பெண்கள் மத்தியில் உரையாற்றியவர்களுக்கு ஊக்கம் கொடுத்து விழிப்புணர்ச் சியை ஏற்படுத்துவதோடு என்னையும் ஏதாவது சொல்லும்படி கேட்பார். எனக்கென்று சில கருத் துக்களோ, அல்லது சில நூல்களை ஆழமாக வாசித்து உள்வாங்கிக் கொண்ட அனுபவமோ சிறிதும் இல்லாத அந்த இளம் வயதில் பாரதியாரைப் பற்றி மகாத்மா காந்தி பற்றி ஏதாவது சொல்ல முற்பட்டாலும் சில விடயங்களை வசனங்களை அவரே பேசும்படி சொல்லித்தருவார். பெண்களுக்கும் பல கருத்துகள் உண்டு. பகிர்தல் மூலம் அறிவைப் பெருக்க வேண்டும். அச்சமின்றித் தம் எண்ணங் களை வெளியிட வேண்டும். பெண்களின் முன்னேற்றத்திற்கும் அறிவு வளர்ச்சிக்கும் இவையெல்லாம் சாதகமாக அமையுமென்ற அம்மையாரின் எண்ணத்தை அன்றைய நிலையில் என்னால் ஊகித்துக் கொள்ள முடியவில்லை. இன்று இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும் போது ஒரு தனிமனிஷியாக நின்று அவர் முன்னெடுத்த செயற்பாடுகளை வியக்காமலே இருக்க முடியவில்லை.

அக்காலச் சூழல் உயர்குடிப்பிறப்பினருக்கே கல்வி உரித்தான தாகவும் மரபுவழி சாதிப்பாகுபாடு இறுக்கமாகப் பேணப்பட்டும் வரும் பாங்கே குடாநாடு முழுவதும் நிலவியது. அதனால் கல்விச் செல்வமும் பொருட்செல்வமும் உயர்ந்தோர் மாட்டே அடைக்கல மாகியது.

சேர்.பொன். இராமநாதன், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் போன்றோரும் அவர்களது வழிவந்தோருமே பெருமையும் புலமையும் மிக்க கல்வி

யாளர்களாக விளங்கினர். அத்தகைய குடும்பமொன்றைச் சார்ந்தவர் தான் இந்திய நாட்டின் திருவிதாங்கூர் மாநிலத்தில் உயர்நீதிபதியாகக் கடமையாற்றிய செல்லப்பாபிள்ளை அவர்கள். இவருடைய இரு தம்பிமாரில் ஒருவர் அங்கேயே மதுவரி ஆணையாளராகக் கடமை புரிந்த பொன்னம்பலம்பிள்ளை. மற்றையவர் பெருந்தோட்ட முதலாளியாக இருந்த சின்னப்பாபிள்ளை. இம்மூவருக்கும் ஒரே ஒரு சகோதரி மீனாட்சிப்பிள்ளை. இவர் வீரவாகர் கதிரவேற்பிள்ளை என்பவரைத் திருமணம் செய்தார். இத்தம்பதியின் குழந்தைதான் மங்களம்மாள். இவர் 1884 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 10 ஆந் திகதி பிறந்தார். இவரோடு உடன்பிறந்த ஆண் குழந்தைகளில் வேதநாயகம், பரமநாயகம் ஆகியவரோடு இன்னும் இரண்டொருவர் இருந்ததாக அறியமுடிகிறது.

மங்களம்மாள் பாடசாலை சென்று வரன்முறையான கல்வி கற்றார் என்பதற்கான சான்றுகளெதுவும் கிடைக்கவில்லை. ஆனால், அவர் தமிழ்மொழியிலும் ஆங்கிலத்திலும் வல்லமை பெற்றிருந்தரென்பதை அவரின் உரைகள் மூலமும் எழுத்துக்கள் மூலமும் நாம் அறியக் கிடக்கின்றது.

மங்களம்மாள் 1900 ஆம் ஆண்டு தனது தாய்மாமனான பொன்னம்பலபிள்ளையின் மகன் மாசிலாமணிபிள்ளையைக் கரம் பற்றினார்.

யாழ் வண்ணார்பண்ணையிலே முதன் முதல் பி.ஏ.பட்டதாரிப் பரீட்சை எழுதிச் சித்தியடைந்தவர் மங்களம்மாளின் தந்தையார் கதிரவேற்பிள்ளை அக்காலத்தில் வெகு சிலரே இத்தகைய உயர் கல்வியை மேற்கொள்வர். அப்படி முயற்சித்து அவர்கள் படித்தாலும் அக்காலக் கல்விமுறையின் கடுமைகாரணமாகச் சித்தியடைவோர் மிகமிகச் சிலரே. எனவே தான் கதிரைவேற்பிள்ளை பி. ஏ. பட்டதாரியாகச் சித்தியடைந்ததும், அவரை எல்லோரும் அவரது உயர்படிப்பை அடையாளங் காட்ட பி.ஏ.தம்பி என்றே சுருக்க மாகச் செல்லமாக அழைப்பர். அவர் வாழ்ந்த இடமான அந்த ஒழுங்கையும் நாளடைவில் பி.ஏ.தம்பி ஒழுங்கை என்ற பெயர் பெற்று இன்று வரை அப்பெயரே வழங்கி வருகிறது. ஓட்டு மடம் வீதியையும் பிரப்பங்குளம் வீதியையும் ஒன்றிணைக்கும் இவ்வொழுங்கையில் பல உயர் குடிப்புலமைமிக்க கல்விமான்களும் புகழ்மிக்கோருமான சான்டோ முத்துச்சாமிப்பிள்ளை சட்டத்தரணி, சிவத்தொண்டன் ஆசிரியர் வித்துவான் க.கி.நடராஜன்,

கலைப்புலவர் நவரத்தினம், ஈழநாடு ஸ்தாபன நிர்வாக அதிபர் தங்கராஜா, டாக்டர் சண்முகரத்தினம், நீதிவான் காசிப்பிள்ளை எனப்பல பெரியோர்கள் வாழ்ந்தனர்.

மாசிலாமணிப்பிள்ளை சமூக நோக்குள்ளவராக அதன் மேம் பாட்டில் அக்கறை கொண்டவராக இருந்தமையால் 'தேசாபிமானி' என்றொரு பத்திரிகையைத் தமிழில் யாழ்ப்பாணத்திலும் 'மக்கள் சஞ்சிகை' என்றொரு சஞ்சிகையைக் கொழும்பில் ஆங்கிலத்திலும் நடாத்தி வந்தார். இந்திய நாடு சுதந்திரப் போராட்டத்திற்கான ஏற் பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தமையால் மக்கள் விழிப்புணர்ச்சி பெறத் தேசப்பற்று, காந்தீயம், ஒற்றுமை, தியாகம், பெண் சமத்துவம், அரசியல் என பல கருத்துக்கள் பரவலாக்கப்பட்டன. பெரும்பாலும் பத்திரிகைகளின் பாடுபொருளாக இவையே முக்கியத்துவம் பெற்றன.

இந்திய நாட்டின் தலைவர்களான மகாத்மா காந்தி போன்றோர் சிறப்பாகப் பெண்களை வீட்டிற்கு வெளியே வந்து பொதுசேவையில் பங்கு கொள்ளவும் சுதேசிகளாக வாழவேண்டுமெனவும் உற்சாகப் படுத்தினர். இவற்றின் எதிரொலி இலங்கையையும் வெகுவாகப் பாதித்தது. இலங்கை இந்திய உறவு அன்று தாய் பிள்ளை உறவாகத் தொடர்ந்தது.

அதனால் இலங்கையில் வாழ்ந்த பலரும் மகாத்மாவின் கொள்கை யையும் காங்கிரஸின் போக்கையும் ஆதரித்தனர். நெருங்கிய இந்தியத் தொடர்பும் பத்திரிகை சஞ்சிகைகளோடு நன்கு பரிச்சயம் இருந்ததன் காரணமாக காந்திமகானின் செயற்பாடுகளை அனைவரும் அறிந்திருந்தனர். இவற்றில் மிகுந்த ஈடுபாடும் கொண்டிருந்தனர். காந்தி மகானின் எளிமை, அடக்கம், பொறுமை, உண்மை, தேசப்பற்று என்பன எல்லோரையுமே கவர்ந்தன.

பரந்த மனப்பான்மையும், தேசியப்பற்றும், கல்வியறிவும், சமூக அக்கறையும் மிக்க குடும்பச் சூழலில் வளர்ந்த மங்களம்மாள் அன்று வாழ்ந்த உயர் குடிப்பெண்களின் வாழ்க்கைப் போக்கிலிருந்து முற்று முழுதாக வேறுபட்டே காணப்பட்டார். பொருட் செல்வத்தாலும் குடிப்பெருமையாலும் காட்டும்மிடுக்கு, அதனால் உடல் முழுவதும் சோடனையாக்கும் தங்கநகைகள், தாமுண்டு தம் இல்லக் கடமை களுண்டு எனத் தமது வாழ்நாள் முழுவதையும் குடும்பச் சிறைக்குள்

கழிக்கும் பெருமிதம், ஆன்மீக ஈடுபாடு என்ற வட்டத்துள்ளேயே பெண்கள் வாழையடி வாழையாகத் தம்மை நிலை நிறுத்தி வாழ்ந்து வந்த பாதையை மாற்றியமைக்கத் தூண்டியவராக அம்மையார் இயங்கினார். யாழ்ப்பாணப் பெண்மணிகள் என்றுமே தொட்டுப்பார்க்காத பத்திரிகைத்துறை, எழுத்துத்துறை, அரசியல், சொற்பொழிவு, சமூகத்தொடர்பு எனப் பலபுதிய துறைகளைத் தொடங்கிவைத்த பெருமையும் சிறப்பும் அம்மையாருக்கே உரிய தனித்துவமான ஆளுமை என்பதை நாம் போற்றிக் கொண்டாடலாம். இவற்றிற்கெல்லாம் ஆணிவேராக அமைந்திருந்தது அம்மையாரின் 'தமிழ் மகள்' என்ற பத்திரிகையே ஆகும்.

ஆங்கிலேயருடைய ஆட்சியின் கீழ் இலங்கை இருந்த போது ஆங்கிலமே ஆட்சிமொழியாகவும் கல்விமொழியாகவும் இருந்து கோலோச்சிய போது எங்கும் ஆங்கிலம், எதிலும் ஆங்கிலம் என ஆங்கில மோகம் மக்களைப் பிடித்தாட்டியது. அத்தகைய ஒரு நிலையில் சமுதாயம் சீரழிவை நோக்கிப் போய்க் கொண்டிருந்த வேளையிலேயே சமஸ் கிருதமும் தமிழோடு இணைந்து மணிப்பிரவாள நடையில் பயணித்துக் கொண்டிருந்த போது 'தமிழ் மகள்' என்று தூயதமிழிலே பெயரிட்டுப் பெண்களுக்கு முக்கியத்துவமளிக்கும் வகையில் அருமையான பத்திரிகையொன்றை ஆரம்பித்து வெளிக்கொணர்ந்தார். இப்பத்திரிகைக்காக அவர்பட்ட கஷ்டமும் உழைப்பும் சொல்லுந் தரமன்று. சமூக அக்கறையோடு அதன் எழுச்சிக்கான பல எண்ணங்களைச் சிறந்த கட்டுரைகளாக ஆசிரியர் தமிழ் மகளில் எழுதி வெளியிட்டார்.

'கழுதை அறியுமோ கற்பூர வாசனையை' என்பது போல் அன்றைய பெண்கள் மத்தியிலே இப்பத்திரிகை பெரும் வரவேற்பையோ பரபரப்பையோ ஏற்படுத்தியதாகக் குறிப்பிட்டுக் கூறமுடியாது. ஆனாலும், அம்மையார் பெண்களை முன்னேற்ற வேண்டும்; இச்சமூகத்திற்குப் பல சீர்திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும்; பெண்கள் சமூக சேவையிலும் அரசியலிலும் ஈடுபட வேண்டும்; அதற்கு வாய்ப்பாகக் கல்வியறிவாலும் ஏனைய ஆற்றல்களாலும் தம்மை வளம்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதை காந்திமகான் போன்ற பெரியவர்களின் கொள்கைகளை அடிப்படையாக வைத்துத் தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியிலும் காந்தீயக் கருத்துக்களிலும் மிக்க ஈடுபாடு கொண்டு அவற்றின் வளர்ச்சிக்காகவும் உழைத்தார்.

இவருடைய தன்னம்பிக்கை, துணிச்சல், உழைப்பு, முற்போக்கான சிந்தனைகள் என்பதற்கெல்லாம் உரமூட்டுவது போல அம்மையாருடைய கணவர் பொ.மாசிலாமணிப்பிள்ளை உதவியதோடு இவர்களது இல்லறவாழ்வும் வள்ளுவனின் கூற்றுப் போல், “அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது” எனச் சிறப்புற்றுப் பொலிவுற்றது.

இவர்களது இனிய இல்லறவாழ்விலே இரு பெண் குழந்தைகளும் ஒரு ஆணுமாக மூன்று பிள்ளைகள் பிறந்தனர். மூத்தவர் மகேஸ்வரி. இவர் உருத்திரவீணைக் கலைஞர். இந்தியாவிலே பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்களிடம் இசை கற்றவர். யாழ்ப்பாணத்தில் பல கச்சேரிகளை நிகழ்த்தியவர். அயலண்டைப் பிள்ளைகளுக்கு இலவசமாக இசை கற்பித்தவர். எனது சகோதரிகளும் இவரிடம் கற்றனர். இவர் கல்விமானும் சமூக சேவையாளருமான கலைப்புலவர் நவரத்தினம் அவர்களைத் திருமணம் செய்து பி.ஏ.தம்பி ஒழுங்கையிலுள்ள வீட்டிலேயே வாழ்ந்தவர். அடுத்ததாக ஆண் குழந்தை தாமோதர பாஸ்கரன். இவர் நேசம்மா என்ற பெயருடைய பெண்ணைத் திருமணம் செய்து இரு பெண்களையும் ஒரு ஆணையும் பெற்றெடுத்தார். கடைசிப் பிள்ளையாகப் பிறந்தார் புவனேஸ்வரி. இவர் தில்லையம்பலம் என்பவரைத் திருமணம் செய்து வண்ணார்பண்ணையிலேயே வாழ்ந்தார். இத் தம்பதிக்கும் குழந்தைகள் இல்லை. புவனேஸ்வரி யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆரம்பித்த நாள் தொடக்கம் அங்கே நீண்டகாலம் எழுது வினைஞராகப் பணிபுரிந்தார். பிள்ளைகள் யாருமே தாய் தந்தையரின் இடத்தை நிரப்புவோராக முயற்சி எடுக்கவில்லை.

மங்களம்மாள் கணவருடன் இந்தியாவில் தங்கியிருந்த காலங்களில் இருவருமாகப் பல காங்கிரஸ் கூட்டங்களுக்கும் காந்தீயப் பிரசார மன்றங்களுக்கும் பல நாடுகளுக்கும் பார்வையாளராகச் சென்றிருந்ததோடு பங்கு பற்றி உரையாற்றிய அனுபவத்தையும் பெற்றுள்ளனர். அத்தோடு காங்கிரஸ் கட்சியின் அங்கத்துவத்தையும் இருவரும் பெற்றிருந்தனர். மகாத்மா காந்தி கலந்து கொண்ட சென்னையில் இடம்பெற்ற அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் இருவரும்

பங்குபற்றியிருந்ததோடு அதன் பெண்களுக்கான அரங்கில் மங்களம் மாள் உரையாற்றி பலருடைய பாராட்டுதல்களையும் வாழ்த்துக் களையும் பெற்றுக் கொண்டார். இலங்கையிலிருந்து இந்தியா சென்று முதல் முதல் உரையாற்றிய பெண்மணி என்ற பெருமையும் அம்மை யாரையே சாரும்.

காந்தீயக் கொள்கைகளினாலும் இந்திய காங்கிரஸ் கட்சியின் விடுதலைப் போராட்ட அரசியல் வேட்கையினாலும் உந்துதல் பெற்ற அம்மையார் இலங்கையிலும் இத்தகைய கொள்கைப் பிரசாரங்களில் முற்றுமுழுதாக ஈடுபட்டார். இதற்கு ஆதாரமான ஆயுதமாகத் தமிழ் மகள் பத்திரிகையைப் பயன்படுத்தியதுடன் மாதர் முன்னேற்றச் சங்கங்களை அமைத்து அவற்றின் உதவியையும் பயன்படுத்திக் கொண்டார். இவர் இளமையிலே ஆரம்பித்து வைத்த பெண்கள் சேவா சங்கம் என்ற மகளிர் சங்கம், சில அங்கத்தவர்களுடன் தீண்டாமை, மதுஒழிப்பு, மேல்நாட்டு மோகம் போன்றவற்றை ஒழிக்கும் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பிப் பெண்களை விழிப்புணர்வு கொள்ளச் செய்தது. பெண்கள் பெரிதாகத் தமது ஒத்துழைப்பை அவருக்கு நல்காவிடினும் கூட சோர்ந்து போகாமல் இவர் தான் முன்னெ டுத்த அடிகளைப் பின்வாங்காது தொடர்ந்து தன்பாதையில் பயணித்துக் கொண்டே இருந்தார்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரித்தானிய இலங்கை போன்ற பல நாடுகளிலும் பெண்களுக்கான வாக்குரிமையளிக்கப்பட வேண்டுமென்ற எண்ணம் எழுச்சி பெற்றிருந்தது. பெண்கள் அரசியல் பிரவேசத்திற்கான முதல் அடியாக அவர்களுக்கு வாக்குரிமை வழங் கப்பட வேண்டுமென்ற கருத்தில் இலங்கையில் திருமதிகள் நல்லம்மா சத்தியவாகீஸ்வரர், டெய்சி, பண்டாரநாயக்கா, டபிள்யு.ஏ.டி.சில்வா, வி.ஆர்.முத்துத்தம்பி, ஏ.சி.ஜி.விஜயக்கோன், டி.எம்.குணசேகரா, எஸ்.டபிள்யூ. இலங்கைக்கோன், பி.எச்.வேதவனம், கொலிபி, வயலெட்பாவா, எம்.ஏ.அருளானந்தம், செல்வி.ஐ.கோன்பி. ஈ.எஸ். பெல்சிங்கோ ஆகியோர் ஒன்றுகூடிப் பெண்களின் வாக்கு உரிமைக் காகக் குரல் எழுப்பினர். இவ்வலை நாட்டின் நாலாபக்கங்களிலும் வீசவே செய்தது. இத்தகைய பின்னணியிலேயே மங்களம்மாவும், யாழ்ப்பாணத்தில் பெண்களை ஒருங்கிணைத்து ஒரு மாநாட்டைக் கூட்டி அதிலே 'தமிழ்ப் பெண்களின் இன்றைய நிலை'என்ற தலைப்பில்

உரையாற்றிப் பெண்களை முன்னேற்றுவதற்காகப் பல கருத்துக்களை வெளியிட்டார். இலங்கையில் திருகோணமலை உட்பட பல இடங்களிலும் கூட்டங்களை ஒழுங்கு செய்தார். பெண்கள் மத்தியில் உரை யாற்றினார். இப்படிப் பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் சமூக சீர்த்திருத்தத்திற்காகவும் தனது வாழ்வை அர்ப்பணித்த அம்மையார் 1927 ஆம் ஆண்டளவில் சென்னை எழும்பூர்த் தொகுதியிலே மாநகர சபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டார். இலங்கையில் பிறந்த எந்தவொரு பெண்ணுமே அரசியலையோ, தேர்தலையோ எட்டியும் பாராத அக்காலத்தில் அம்மையாருடைய இத்தகைய செயற்பாடு பெண்ணினத்திற்கே ஒரு விடிவெள்ளியாக ஒளியூட்டியது. இவரோடு தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சியின் தலைவரான நாயுடு அவர்களே போட்டி போட்டதுடன் வெற்றியையும் பெற்றுக் கொண்டார். தோல்வியே வெற்றியின் முதற்படி என்பதை அம்மையார் பொறுமையுடன் ஏற்றுக் கொண்டார்.

தோல்வியைக் கண்டு துவண்டுவிடாத அம்மையார் இன்னும் முழு மூச்சுடன் செயற்பட்டார். இலங்கை அரசியல் நிலை பற்றி டொனமூர் கமிஷன் கவனிப்பை ஏற்படுத்தியபோது பல இலங்கையர் தமது ஆலோசனைகளை முன்வைத்தனர். ஆனால், அவற்றில் இலங்கைப் பெண்களின் அபிப்பிராயங்களோ கருத்துக்களோ உள்ளடக்கப் படவில்லை. இதை அறிந்ததும் பெண்கள் புறக்கணிக்கப்பட்டதை யிட்டுப் பெருஞ் சீற்ற முற்ற அம்மையார் இலங்கையிலிருந்து வெளியான 'இந்து சாசனம்' என்ற பத்திரிகையிலே அட்டகாசமாகத் தனது கோபத்தைப் பின்வருமாறு சாடியுள்ளார்:

> 'சீ! எமக்கு வெட்கம்! ஒரு சின்ன விரலைத்தானும் நாம் அரசியலை நோக்கித் திருப்பவில்லை. எமது பிறப்புரிமைக்காகப் போராடாத எம்மைப்பற்றி அவர்கள் என்ன நினைப்பார்கள். எமது ஆண் சகோதரர்கள் எமது சீதனத்தினால் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றதோடு பலர் பிரதிநிதித்துவ அமைப்பில் அமர்ந்து கொண்டு, நம்மைப்பற்றி ஒரு சொல்தானும் தமது மனுக்களில் கூறவில்லையே சகோதரிகளே! பால் வேற்றுமை யினால் காட்டப்பட்ட தகைமையீனங்கள் அகற்றப்பட்டு அரசியலில் சமஉரிமை அளிக்கப்பட வேண்டும்'
>
> (Hindu organ 3.10.1927, நன்றி நிவேதினி)

எனப் பெண்களின் சமத்துவமான உரிமைக்காகவும் சிறப்பாக அரசியல் பிரவேசத்துக்கான போராட்டத்திற்காகவும் தனது பேனாவைப் பயன்படுத்தினார்.

‘அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்’ என்று கிராமப்புறத்தில் சொல்வது போல் சமுதாய மேம்பாட்டிற்காகவும் பெண்களின் விழிப் புணர்வுக்காகவும் பல முற்போக்கான விடயங்களை அம்மையார் ‘தமிழ்மகள்’ மூலம் எழுதினார். பல குழுக்களை அமைத்துக் கூட்டங் களை ஏற்படுத்தி சொற்பொழிவாற்றியும் சீர்திருத்தத்தை முன் எடுக்கப் பாடுபட்டு உழைத்தார். சமுதாயத்தின் ஆணிவேராகத் திகழ்பவர் பெண்களே என்பதால் பெண்களுடைய மனதில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமென பெண்களைக் குறிவைத்தே அநேகமான அவருடைய பேச்சுக்களும் எழுத்துக்களும் அமைந்திருந்தன. ஆகை யால் தான் தமிழ் மகளின் மகுட வாசகமும்,

**பெண்ணுக்குப் பெருமை சேர்த்து விளங்கவும்.**
**பெண்கள் நல்லறங்கள் மேலோங்கவும்**
**பெண்களின் சத்தியானது இப்பூதலத்தைப் பலமுறச் செய்யவும்**
**பெண்ணின் கருணை வெள்ளத்துட் படிந்த ஆண்பாசம்**
**ஆண்மை சிறந்து பொலியவும் அன்னை பராசக்தி அருள் புரிவாளாக!”**

என அமைந்ததுடன் பெண்ணின் நலத்தையே தன் நலமாகக் கொண்டு வெளிவந்தது.

பெண்களின் எதிர்காலமாவது ஒளிவிட்டுப் பிரகாசித்தால் தான் எமது வாழ்க்கை சிக்கலின்றிச் சமத்துவமான பூங்காவாக உருமாறும் என்ற உண்மையை உணர்ந்த மங்களம்மாளின் தீர்க்கதரிசனம் மிக்க போராட்டச் சிந்தனையின் உச்சத்தின் அளவைப் பின்வரும் பத்திரிகைக் குறிப்பிலிருந்து நாம் ஒப்பிட்டு நோக்கலாம்:

> அரசியல் திருத்தங்களுள் சட்ட நிருபண சபை போன்ற சபை கட்கு பிரதிநிதிகளைத் தெரிவு செய்து அனுப்பும் விடயத்தில் பெண்களுடைய சம்மதத்தைப் பெறலும் ஒன்றெனக் கூறி விட்டனர். ஆனால், விசாரணைச்சபையார் தாமாக இதனைக் கூறினாரல்லர். கொழும்பிலேயுள்ள ஆண் தன்மை பூண்ட தன்னிஸ்டப் பெண் ஜென்மங்கள் சிலர் கேள்விக் கிசைந்தே விசாரணைச் சபையாரும் ‘பெண்ணென்றால் பேயுமிரங்கு மென்னும்’ பழமொழிப்படி உடன்பட்டுவிட்டார்கள். இத்

> திருத்தம் எங்கள் சமயம், ஜாதி, தேசம், பழக்கவழக்கம், கொள்கைகள் என்று சொல்லப்படுவன எல்லாவற்றிற்கும் முழுமாறானதாகும். பெண் தன்னெண்ணத்திற்கு நடந்து கொள்ளுதல் சைவ நன்மக்களுள் எக்காலத்திலுமில்லை...... கற்பெனப்படுவது சொற்றிறம்பாவையென்ற பிரகாரம் நாயக னுடைய சொற்படி ஒழுக வேண்டிய பெண் அவன் சொல்லை மீறி இருமனப்படுவளேல் அவள் செல்வத்தோடு கூடிய வளாயினு மென் அவள் பொதுமகளாவாள்..... அந்நிய சமயத்தினர் இந்த இலங்கையைப் பரிபாலித்த போது சமய நிஷ்டூரம் செய்தனரேயன்றி எங்கள் சாதிக்கட்டுப்பாட்டையழித்து இங்குள்ள பெண்களைப் பொதுக் கருமங்களில் பிரவேசிக்கச் செய்து பொது மகளிராக்கிவிடவில்லை. பெண்களுக்கும் ஆண்களுக்குமிடையே பேதமில்லையென்ற கொள்கை பூண்ட மேலைத் தேசத்தவர்களாகிய விசாரணைச் சங்கத்தார் தங்கள் பெண்களைப் போல எங்கள் பெண்களையும் மதித்து தீமைக்கும் கலகத்திற்கும், சாதி சமய மகத்துவங்களையும் கெடுத்து இந்தப் போலிச் சுவாதீனத்தை ஏற்றுக் கொள்ளச் சொன்னால் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டுமா?
>
> (இந்து சாதனம் 08.11.1928 நன்றி நிவேதினி)

என்றெல்லாம் கேள்வியெழுப்பியுள்ளது. இந்து சாதனம் என்ற பத்திரிகை. இப்பத்திரிகை மங்களம்மாள் வீட்டின் அயலிலிருந்த யாழ்.வண்ணார் பண்ணை சைவப்பிரகாச அச்சுயந்திரசாலையில் அச்சேற்றப்பட்டு வெளிவந்தது.

ஊடகங்கள் சமுதாயத்தின் உயிர்நாடி. அவை சமுதாயத்தினை நாடி பிடித்துப் பார்த்தே தமது கருத்துக்களை முன்வைக்கின்றன. மேற்கண்ட பந்தி அன்றைய மக்களின் மனநிலையையே வெளிப் படுத்தியுள்ளது. இத்தகைய கருத்துக்களே ஊறிப் புரையோடிப் போய்க் கிடக்கும் மக்கள் மத்தியில் மங்களம்மாள் தனியே நின்று சமுதாயத்தையும் குறிப்பாகப் பெண்களையும் விழிப்படையச் செய்ய அரும்பாடு பட்டதற்குச் சான்றாகும். இத்தனை இருளான சூழ்நிலையிலும் பெண் எழுச்சிக்காக அர்ப்பணிப்போடு உழைத்த மங்களம்மாளின் சாதனை என்றென் றென்றும் போற்றிப் பேசப்பட வேண்டியதொன்றே.

3

# கலாநிதி முத்தம்மா தில்லையம்பலம்

## (1855–1976)

"துருதுருக்கும் கண்கள், படபடக்கும் நெஞ்சம், எதையும் துருவித் துருவிப் பார்த்துவிட வேண்டுமெனத் துடிக்கும் கரங்களும் கால்களும். தந்தையாரை விட்டு விலகி மெல்ல மெல்ல ஊர்ந்து நடந்துவந்து முன்புறம் இருக்கும் மேசைமீது சாய்ந்து கொண்டு கதிரையில் ஆஜான பாகுவாக வீற்றிருக்கும் அழகும், ஆளுமையும் மிக்க அந்த ஆங்கி லேய மாதுவை உற்றுநோக்குகிறாள் அந்தச் சிறுமி. அந்நிய மானாலும் அப்பெண்ணின் அறிவாற்றல் வீசும் உரைகளையெல்லாம் தான் விளங்கி உணர்ந்தவள் போல் இந்த அதிபரின் இருக்கையில் ஒரு நாளாவது தானும் உட்கார முடியுமா? என்றொரு ஏக்கப்பார்வையோ! இல்லை தீர்க்க தரிசனப் பார்வையோ! அந்த ஆறுவயதுச் சிறுமியிடம். அப்பா தில்லையம்பலத்தின் கரங்களைப் பற்றிக் கொள்ளுகிறாள்." இது, அப்பாடசாலையிலான இச்சிறுமியின் முதல் நாள் அனுபவம்.

யாழ்ப்பாணத்தில் அல்லைப்பிட்டி என்ற கிராமத்தில் வசித்தவரே தில்லையம்பலம் என்ற பெரியார். பெண்கல்வி மறுக்கப்பட்டு பெண் ணினம் வீட்டுவேலை செய்யவும் குசினியில் அடைந்து கிடந்து உணவு சமைக்கவும் குழந்தைகளைப் பெற்று வளர்க்கவுமே உரித்து டையது என்ற கருத்தியல் சமுதாயத்தில் இறுக்கமாகப் படிந்து கிடந்த காலம். பலபேருடைய அல்லல்களுக்கும் தொல்லைகளுக்கும் உதவி செய்து ஆறுதல் கொடுப்பவரான கிராம விதானையாராகத் தொழில் புரிந்த தில்லையம்பலத்தாரின் மனதிலே தனது மகள் கல்வி வாசனை வீசி ஒளிரவேண்டுமென்ற ஆவலின் உந்துதலினாலே சுண்டிக்குளிப்

பாடசாலையில் அதிபராக அப்போது கடமையாற்றிய 'மிஸ் பேஜ்' என்ற ஆங்கில மாதுவிடம் கல்வி கற்கத் தன் மகள் முத்தம்மாவை ஒப்படைத்தார்.

நற்குடிப்பிறப்பாயினும் முற்றுமுழுதாக இந்துசமயச் சூழலிலும் இயற்கையின் எழில் கொஞ்சும் கிராமப்புறச் சுற்றாடலிலுமான அல்லைப்பிட்டியில் பிறந்து வளர்ந்த முத்தம்மா முற்றும் வேறுபாடான இப்புதிய சூழலுக்குத் தன்னை இலகுவில் இசைவாக்கிக் கொண்ட மையே அவளுடைய எதிர்கால வெற்றிக்கும் யாழ்ப்பாணப் பெண் சமூகத்தின் கல்வி வரலாற்றில் அவள் வைரமாக ஒளிவீசித் திகழ் வதற்கும் கட்டியம் கூறி நின்றது.

பாடநூற் கல்வி இன்றிப் புறக்கணிக்கப்பட்டு இருண்டு கிடந்த பெண்ணுலகில், கல்வி விதை விதைத்துப் பல அறிவு விருட்சங்கள் ஓங்கி வளரச் செய்த கிறிஸ்தவ திருச்சபையாரின் பணிகளை நாம் வியந்து பாராட்டி நிற்கும் இவ்வேளையிலே முத்தம்மாவும் குருவுக் கேற்ற சிஷ்யையாக செல்வி பேஜ் அம்மையாரின் வழிகாட்டு தல்களைக், 'கீதோபதேசமாக' ஏற்றுத் தன் கல்வியையும் அறிவையும் நேர்த்தியாக வளர்த்துக் கொண்டார். பாடநூல் கல்வியை மட்டுமே தன் மூளையில் ஏற்றிக்கொள்ளாமல் தான் பெற்றுக் கொண்ட கல்வியறிவை அத்திவாரமாக அமைத்துக் கொண்டு தன் சிந்தனைக் கிளைகளை நான்கு பக்கமும் வியாபித்துப் படரவிட்டாள். வழிகாட்டி யாக அமைந்திருக்கும் ஆசிரியர்களின் ஒழுங்குகள், கட்டுப்பாடுகள், நேரம் தவறாமை கற்பித்தல் நுட்பங்கள் என்பவற்றையெல்லாம் கூர்மையாக அவதானித்துத் தன் மனதில் ஆழமாகப் பதித்துக் கொண்டாள் சிறுமி முத்தம்மா. கிறிஸ்தவ சபையாரின் விருப்பப்படி சிறுமியும் அவர்களது சமயத்தில் இணைந்து கொண்டு இவாஞ்சலின் என்ற பெயரையும் சூட்டிக் கொண்டாள்.

தலைசிறந்த பொன்வினைஞருடைய கையில் அகப்பட்ட தங்கப் பாளம் போல சுண்டிக்குளிப் பாடசாலையிலே அடிப்படைக் கல்வி யையும், இரண்டாந்தரக் கல்வியையும் நன்மாணாக்கருக்குரிய நற் பண்பு ஒழுக்கங்களையும் கற்றுத் தேறிக்கொண்ட முத்தம்மா எதிர் காலத்தில் பெண்ணுலகிற்கே ஒளியூட்டக்கூடிய வகையில் தன்னைப் புடம் போட்டுக் கொண்டாள்.



முத்தம்மா தில்லையம்பலம்

'விளையும் பயிரை முளையிலே தெரியும்' என்பது போல சகல பாடங்களிலும் திறமைசாலியாகவும் கீழ்ப்படிவும் தன்னார்வமும் மிக்க மாணவியாகவும் விளங்கிய முத்தம்மா 'மற்றிக்குலேஷன்' வகுப்பை நிறைவுசெய்து கொண்டு இன்னும் உயர் கல்வி பெறுவதற் காக இந்தியா சென்றார். அங்கேயுள்ள அலகபாத் பல்கலைக்கழகத்திலே கற்று பி.எஸ்.சி, எம்.எஸ்.சி. பட்டங்களைப் பெற்றார். இப்பட்டங்களோடு அங்கிருந்து அமெரிக்கா சென்றார். அங்குள்ள கொலம்பியா சர்வகலா சாலையிலே மேற்கொண்டு தனது கல்வியைத் தொடர்ந்து எம்.ஏ., எம்.எஸ்.சி., பி.எச்.டி. ஆகிய பட்டங்களையும் பெற்று உயர் கல்வியின் உச்சங்களைத் தொட்டார். 'இந்தியக் கடல்களில் சுறாமீன்' என்ற பொருளில் இவர் தனது கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வினைச் செய்து அதிவிசேட சித்தியினைப் பெற்றுக் கொண்டார். நூல் வடிவிலும் வெளியான இக்கட்டுரை தமிழ், இந்தி எனப் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுப் பல பல்கலைக்கழகங்களில் பாட நூலாகவும் ஏற்கப்பட்ட பெருமையைக் கொண்டது. விலங்கியல் பாடத்தில் மிகுந்த ஆற்றலும் ஈடுபாடும் கொண்டிருந்த இவர் விலங்கியல் சஞ்சிகை யொன்றின் உதவியாசிரியராகவும் பணிபுரிந்துள்ளதோடு 'உயர்நிலைப் பாடசாலைகளுக்கான உயிரியல்' என்னும் நூலையும் ஆக்கி வெளி

யிட்டிருந்தார். இந்நூலும் பல கல்லூரிகளில் பாடநூலாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இலங்கையின் கல்வித் துறையில் பாடநூற் கல்விக்காக 1944 களில் அமைக்கப்பட்டிருந்த ஒழுங்கின்படி எஸ்.எஸ்.சி வகுப்பிற்கான பொது விஞ்ஞான பாடத்திட்டத்தினையும் 'சிலபஸ்' போன்றவற்றையும் திட்டமிட்டு வடிவமைத்ததில் இவருடைய பங்கு கணிசமானது எனப் பலரும் குறிப்பிடுவர்.

லக்னோவிலுள்ள இஸபெல்லா தோபேர்ன் கல்லூரியில் பேராசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையிலே 'பேராசிரியர்களைப் பரிமாற்றம் செய்தல்' என்ற கல்வி விரிவடைவதற்கான திட்டத்தின் அடிப்படையில் செல்வி இவாஞ்சலின் முத்தம்மா அமெரிக்காவின் மசாதசெற்ஸ்சிலுள்ள வெஸ்லி கல்லூரிக்கும் அங்கிருந்த ஒரு பேராசியரியர் இவருடைய இடத்திற்குமாக ஒரு வருட காலத்திற்கு இடமாற்றலாயினர். பின்னர் இக் கற்பித்தல் அனுபவங்களோடு திரும்பிவந்து மதுரை லேடி டோக் கல்லூரியின் அதிபர் பதவியில் அமர்ந்தார்.

இவாஞ்சலின் முத்தம்மா அம்மையார் உயர்கல்விச் சிறப்பால் பெற்றுக் கொண்ட இரு முதன்மை நிலைகளை இங்கு விசேடமாகக் குறிப்பிடலாம். ஒன்று அவர் வாழ்ந்த அக்காலகட்டத்திலே விஞ்ஞானத் துறையில் விசேட சித்திபெற்றுக் கலாநிதிப்பட்டம் பெற்ற இலங்கையைச் சேர்ந்த முதற் பெண்மணியாவார். அடுத்தது, ஆசியாவிலேயே பேராசிரியர் பரிமாற்றம் செய்யப்பட்டு வெளிநாட்டில் பணியில் அமர்ந்த பெருமையைச் சூடிய முதற்பெண்மணி என்ற முன்னிலையைப் பெற்றமை இப்பெண்மணியைப் பெற்றெடுத்த பெற்றோரும் கல்வியூட்டி வளர்த்த கல்லூரியும் பெண் சமுதாயமும் ஏன் இலங்கை மக்கள் அனைவருமே மகிழ்ச்சியால் சிலிர்த்தெழக்கூடிய பெருமையை ஈட்டித்தந்த அம்மை யாரை நாம் என்றுமே நினைவிலிருத்திப் பாராட்ட வேண்டும்.

சுண்டிக்குளி பெண்கள் பாடசாலையின் அதிபர் செல்வி நோர்த்வே திருச்சபையினால் இடமாற்றம் பெற்றுவெளியே செல்லவும் வெற்றிடமான அதிபர் பணிக்கு இவர் தன்னை அர்ப்பணித்துக் கொண்டதே இவருடைய நாட்டுப்பற்றைத் தெரியப்படுத்துகிறது. பெரிய பல்கலைக் கழகமொன்றில் பல நூற்றுக்கணக்கான பட்டதாரிகளுக்குப் பேராசிரியராக இருந்து அறிவுபூர்வமான வழிகாட்டல்களுக்குத் தூண்டுகோலாக

இருந்த இந்த மாபெரும் கல்வியாளர் அவ்வுயர்ந்த பதவியைத் துச்சமென உதறிவிட்டுத் தன்நாட்டுமக்களின் - சிறப்பாகப் பெண் குழந்தைகளின் உயர் கல்வியைக் கண்காணிப்பதற்கும் நெறிப்படுத்துவதற்குமெனத் தன் தாய் நாட்டிற்கே திரும்பிவந்து தான் கற்ற பாடசாலையின் நிர்வாகப் பணியை அணிசெய்யத் தொடங்கினார்.

உதவி அதிபராகச் சுண்டிக்குளிப் பாடசாலையில் சேவையைத் தொடங்கிய இவர் தம் பணியின் திறமையாலும் அர்ப்பணிப்பாலும் சுண்டிக்குளிப் பாடசாலையின் தரத்தை யாழ்ப்பாணத்தின் முதல் தரமான கல்விக் கூடமாக ஆக்கினார். கம்பீரமான தோற்றத்துடனும் தற்துணிபுடனும் அம்மையார் யாழ்.நகரின் மத்தியிலிருந்த சுண்டிக்குளி பழைய பூங்கா வீதியில் அமைந்திருந்த 'சாந்த வில்லா' என்ற இல்லத்திலே வாழ்ந்து வந்தனர். தனது வீட்டு வேலைக்கான உதவியாளராக இராமப்பிள்ளை (Ramappillai) என்பவரை அமர்த்தியிருந்ததாகவும் அம்மையார் அவரை அழைக்கும் போது 'ரா' என்ற எழுத்து மறைந்து 'மாப்பிள்ளே' என்பது போன்றே ஒலிக்கும் எனவும் வேடிக்கையாகவும் குறிப்பிடுவர். இவர் தனது வேலைகளைக் கச்சிதமாக நிறைவேற்றுவதற்கு வசதியாக அம்மையார் நாற்பதுகளின் ஆரம்ப ஆண்டுகளிலே 'ஒஸ்ரின்' மோட்டார்வாகனமொன்றைத்தானே சாரதியாக அமர்ந்து ஓட்டி உலாவருவார். தனது பள்ளி மாணவிகளுக்கு மாத்திரமன்றி அருகாமையிலிருந்த சென்.ஜோன்ஸ் பாடசாலையில் கற்ற கற்பித்த ஆசிரிய மாணவர்களோடெல்லாம் பரஸ்பரம், அன்பும் நல்லெண்ணமும் கொண்டவராக விளங்கியதுடன் அவர்கள் உயர்கல்வியை மேற்கொள்ள மிகுந்த உதவியாகவும் ஆதரவாகவும் இருந்தார். கற்றலில் நுட்பமான பகுதிகளை மாணவர்கள் சரியாகத் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டுமென்ற அக்கறை மிகுதியால், அவருடைய சிறப்புப் பாடமான விலங்கியல் பாடம் தொடர்பான சுறாமீனை உடற்பாக உள் அமைப்புப் பற்றியும் விளக்குவார். அவற்றை அறுவை செய்து சிறு கூறுகளாகப் பிரித்து விளக்கம் கொடுக்கும் போதெல்லாம் மாணவர் மனதில் நன்கு பதியக் கூடிய வகையில் இலகுவாக்கியும் எளிமையாக்கியும் சொல்லிக் கொடுப்பார். தான் சொல்லுவதை மாணவர் விளங்கிக் கொள்ள வேண்டுமென்பதில் அவருக்கிருந்த எதிர்பார்ப்போ அபாரம். அவ்வேளைகளிலே சந்தர்ப்பம் சூழ்நிலைக்கு வாய்ப்பாக இடது கையில் பிளவுஸ்சின், கை முடிவில் புயத்தைப் புரட்டாமல்

நேரடியாகவே பார்க்கக் கூடிய வகையில் மணிக்கூட்டை அணித் திருப்பாரெனவும் அன்புப் பிரவாகம் பெருக மாணவரோடு இனிமையாகப் பழகுவாரெனவும் மிக நன்றியோடு அம்மையாரின் மாணவராகவும் அன்பராகவும் இருந்த டாக்டர் ஈ.எஸ்.தேவசகாயம், அம்மையார் பற்றிய 'எனது குருவும் வழி காட்டியும்' என்ற கட்டுரை யிலே நன்றி ததும்பக் குறிப்பிட்டுள்ளமையையும் நாம் இங்கு கவனத் தில் கொள்ள வேண்டும்.

இவருடைய பெருமைகளைப் பல கல்விமான்களும் அறிவாளி களும் கூடப் பழகியவர்களும் பலவாறு குறிப்பிட்டிருப்பினும் 'எம்மை வாழ வைத்தவர்கள்' என்ற தலைப்பிலே கல்லூரி அதிபர்களைப் பற்றித் தொடர் கட்டுரையை எழுதிவரும் கல்விமானும் ஓய்வுபெற்ற மகாஜனக் கல்லூரியின் சிறப்புப் பெற்ற அதிபருமான பொ.கனகச பாபதி, அவர்கள் 'சுண்டிக்குளியின் செல்வம் கலாநிதி செல்வி தில்லை யம்பலம்' என்ற அம்மையார் பற்றிய கட்டுரையிலே அவரது ஆளுமை யால் கவரப்பட்ட பழைய மாணவிகள் பலருள் ஒருவரான திருமதி வலிதா புறாடி கூறும் கூற்றாக,

> "சிறந்த ஆளுமை ததும்பும் எடுப்பான தோற்றம், கறுப்பு முகத்தில் பளீரென மின்னும் புன்னகை, ஊடுருவும் கூரிய பார்வை, அலைபாயும் கூந்தலைச் செவிகள் மூடிவாரி முடித்த சிறிய கொண்டை, வித்தியாசமான மாதிரி யாகச் சேலைத் தலைப்பை இடம்வலம் இரு தோள்களிலும் இணைத்து ஒரு அரசிபோல வரும் மிடுக்கான நடை, சற்றுத் குதி உயர்ந்த பாதரட்சைகளின் டக், டக் ஓசை கட்டியங்கூற கல்லூரி முகப்பில் தனது பங்களாவிலிருந்து முனைவர் தில்லையம்பலம் காலை பாடசாலை புறப்பட்டுவரும் பொழுது, நாம் பயபக்கதியுடன் சொல்லும் காலை வணக்கத்தினை ஏற்று, தனது வேகத்தினைக் குறைக்காது கல்லூரி அலுவலகத்திற்குச் செல்வதும் இப்போது என் மனக்கண்ணில் விரிகிறது"

எனக் கூறியதாகக் குறிப்பிட்டுள்ளார். இவையெல்லாம் செயற்கரிய செயலைச் செய்தவருடைய பெருமை எத்தனை ஆண்டுகள் மறைந் தாலும் நாடுவிட்டு நாடுமாறி வாழ்ந்தாலும் பேசப்பட்டும் நினைவு கூரப்பட்டும் கொண்டே இருக்குமென்பதற்கு இவை நல்ல சாட்சிகளாக அமைந்துள்ளன.

இன்னும் எனது அன்புத் தோழியும் பிரபல எழுத்தாளருமான வள்ளிநாயகி 'யாழ்ப்பாணச் சமூகத்திற் பெண்கல்வி' என்ற தனது ஆய்வு நூலில் பெண் பாடசாலைகளின் அதிபர்கள் என்ற அதிகாரத்தில் இவரைப்பற்றிய கட்டுரையில்..... முத்தம்மா சுண்டுக்குளி பெண்கள் விடுதிப் பாடசாலைக்கு வந்து அதிபராகப் பொறுப்பேற்றார். பாட சாலைக் கல்வியில் கீழைத்தேய நாகரிகம், பண்பாடு முதலியன முக்கி யத்துவம் பெறத் தொடங்கிவிட்டன. முதலாவது சுதேசிய அதிபராகச் செல்வி தில்லையம்பலம் வந்ததோடு சுண்டுக்குளிக்கும் ஒரு புதிய சகாப்தம் தொடங்கிவிட்டது. எல்லாப் பக்கத்தாலும் அறிவு விருத்தி யடைந்தது.

பேச்சுவல்லமையுள்ள, ஒளிவீசும் நுண்ணறிவுடைய, எல்லோரை யும் ஈர்க்கும் தன்மைவாய்ந்த ஆளுமையை உடையவராக இருந்தார். பிள்ளைகளின் ஒவ்வொரு சிறிய ஆற்றல்களையும் உணர்ந்து அவர வர்க்கேற்ப விளையாட்டு, நாடகம், மன்றங்கள் முதலியவற்றை யெல்லாம் ஒவ்வோர் ஆசிரியர் மேற்பார்வையிலும் அவர்களே நடத்தும்படி பொறுப்புக் கொடுத்தார். இளமைதான் இதற்கு வாய்ப்பான தென்பது அவர் எண்ணம். ஒவ்வொரு ஒத்திகையின் போதும் நேரே வந்திருந்து பார்வையிட்டு அறிவுரை வழங்குவார் எனக் குறிப் பிட்டுள்ளார்.

இப்படிப்பல கல்வியாளர்கள், அறிஞர்கள், அக்கல்லூரி ஆசிரி யர்கள், மாணவர்கள், சமகாலத்தவர் எனப் பலராலும் செல்வி முத்தம்மா தில்லையம்பலத்தின் ஆளுமையும் வாழ்வின் சிறப்புகளும் வரலாறு களும் போற்றி ஏற்றப்பட்டுள்ளமை சாலச் சிறந்தது.!

இவர் உயர் கல்வியைக் கற்று உன்னதமான பட்டங்களையெல்லாம் பெற்றுக் கல்வித்துறையில் மாபெரும் அறிவாளியாகத் திகழ்ந்தது மாத்திரமன்றிச் சிறந்த நிர்வாகியாகவும் அடிமட்ட மக்களையும் குறிப் பாக பெண்களது முன்னேற்றம் கருதியும் பல சமூகவேலைகளைச் செய்வதில் ஈடுபாடு கொண்ட சேவகியாகவும் திகழ்ந்தார்.

சுண்டிக்குளியின் அருகாமையிலுள்ள அரியாலை சனசமூக நிலை யத்தில் ஞாயிறு வாரந்தோறும் கிறிஸ்தவ சமயத்தவரல்லாத ஏனைய மாணவருக்கும் கல்வி புகட்டியும் வழிகாட்டியும் வந்ததோடு மருதனார் மடத்திலே 'செல்வி புக்வாட்ட' என்ற ஆங்கிலேயமாதினால் ஆரம் பிக்கப்பட்ட மகளிர் அமைப்பிற்குத் தன்னாலியன்ற பல உதவிகளை

முன்னின்று நல்கியதோடு அதன் நிர்வாக சபையின் முகாமைத்துவ அங்கத்தவராக அவ்வமைப்பு ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடங்கி 1970 ஆம் ஆண்டு வரை பணியாற்றிய பெருமையும் இவருக்கேயுரிய தாகும்.

இப்படிக் கல்விச் சிந்தனையில் திளைத்தவராக மட்டு மன்றிப் பல சமூக நிறுவனங்களின் மேம்பாட்டையும் வளர்த்தெடுக்கும் சமூகச் சிந்தனையாளராகவும் சமூகத்தை நேசிப்பவராகவும் வாழ்ந்த பெருமை பற்றிப் பேசுவதற்குப் பல நாட்கள் தேவை. ஒரு ஆண் கல்வி கற்பதை விட ஒரு பெண் கல்வி கற்றால் ஒரு குடும்பம் மட்டு மல்ல ஒரு சமுதாயமே கற்ற சமுதாயமாக எழுச்சிபெறும் என்பதற்கு அம்மை யாரின் சேவை நற்சான்றாக அமைகிறது. இத்தகைய பெண்களின் பெருமை பேசப்பட வேண்டும். எழுதப்படவேண்டும். இவையெல்லாம் கல்லூரி வளாகத்துள் மாத்திரம் பேசியும் கொண்டாடியும் புகழாரம் சூட்டுவதில் பயனில்லை. இவரைப்பற்றியும் இவரது குடும்பச் சூழல் இளமைப்பருவம் என்பன பற்றியும் ஆய்வுகள் மேன்மேலும் செய்யப் பெற்று அவையெல்லாம் நூலுருப் பெற்று மக்கள் கரங்களில் தவழ வேண்டும்.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் மாத்திரமல்ல, யாழ்ப்பாணத்தில் இராமநாதன் கல்லூரி, யாழ் இந்து மகளிர் கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி எனப் பல பெண்கள் கல்லூரிகளில் ஆளுமைமிக்க பெண் அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் யாழ் பெண்கள் மத்தியில் கல்விச் செல்வத்தை அள்ளியள்ளி ஊட்டிய பெருமையை நன்றியுடன் நாம் என்றென்றும் நினைவுகூரவேண்டும். ஆசிரியத் தொழிலே பெண்களுக்கு மிகப்பொருத்தமானது என்ற கருத்துநிலை இன்று மாறிப் பெண்கள் பல்வேறு துறைகளிலும் காலூன்றித் தமது திறமை யைப் பதிவுசெய்துவருவது வரவேற்கக்கூடியது. அறிவுத்துறையில் பெண்ணினத்தின் இத்தகைய மாபெரும் பாய்ச்சலுக்கெல்லாம் பெரும் பாலும் வித்திட்டவர்கள், வழிகாட்டிகளாக அமைந்தவர்கள், பாரிய துணிச்சலை எம்முள் புகட்டியவர்கள் செல்வி. முத்தம்மா தில்லையம் பலம் போன்ற முன்னுதாரணங்களே என்பதை நாம் என்றென்றும் நினைவுகூர வேண்டும்.

பொது நூலகம்
வலி. வடக்கு பிரதேச சபை
தெல்லிப்பளை

4457

4

# மீனாட்சியம்மாள் நடேசையர்

1815 இல் இந்தியாவிலிருந்து இலங்கையிலுள்ள தேயிலை, இறப்பர் தோட்டங்களில் கூலித்தொழில் செய்விப்பதற்காக ஏழை மக்கள் தோட்டத்து வெள்ளைக்கார முதலாளிகளால் அழைத்துவரப்பட்டனர். வறுமையால் பாதிக்கப்பட்ட அம்மக்கள் நாடு கடந்து நாடு சென்று உழைத்துத் தம் வறுமையை விரட்டலாம், பணம், பொருள் தேடலாம், வாழ்வில் உயரலாம் என்ற நம்பிக்கையுடனே நம் நாட்டை நோக்கிப் பயணமாகினர். அக்காலத்திலே இலங்கை தேயிலை, இறப்பர், தென்னை என்பவற்றால் பெருந்தொகையான அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தன் திறைசேரியை நிறைவு செய்து கொண்டது.

இங்குள்ள மலைநாட்டுத் தோட்டங்களில் கூலிவேலைக்காக வந்த மக்கள் பயணக்கரைச்சலினாலும் வறுமையும் பலவீனமும் வருத்த உடல் நலிந்தும் மலேரியா போன்ற கொடிய நோய்களுக்கு ஆளாகியும் பலர் வருந்தச் சிலர் மரணித்தும்விட்ட செய்திகளுமுண்டு. கல்வி வாசனையே அறியாத இம்மக்கள் மூடப்பழக்கவழக்கங்களில் ஊறி யிருந்தனர். மலைநாட்டின் சீரற்ற செங்குத்துப்பாதைகளில் அட்டைக் கடியினால் வருந்தியும் தாங்கமாட்டாத குளிரினாலும் பெருந்துன் பத்தை அடைந்தனர். இவர்களுடைய நிலைமையை அறிந்து, கஷ்ட முறும் மக்களுக்கு உதவத் தலைப்பட்டவர்களாக சீர்த்திருத்தவாதியும், எழுத்தாளரும், பத்திரிகையாளரும், பொதுச்சேவையாளரும், இலங்கை சட்டமன்ற உறுப்பினரும் ஆகிய கோ.நடேசையர், அவருடைய அருமைத் துணை தேவியார் மீனாட்சியம்மாள் ஆகிய இருவரையும் குறிப்பிடலாம்.

தேயிலைத் தோட்டக் கூலித் தொழிலாளரின் கடமைகள், உரிமைகள் ஆகியவற்றை விளக்கி அவர்களுடைய நலன்காக்கும் பணிக்கு ஐயர் தன்நேரத்தைச் செலவிட்டது போலவே அவரது மனைவி மீனாட்சி யம்மாளும் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் அம்மக்களுக்கு தானும் சில பணிகளைச் செய்து உதவவேண்டுமெனத் துணிந்தார். இத்தம்பதியினர் இத்தொழிலாளர்களின் நன்மைக்காகவும் உரிமைகளை வென்றெடுக்கவும் அவர்களுக்கான தொழிற் சங்க மொன்றையும் அமைத்தனர்.

ஒரு குடும்பத்தின் ஆணிவேராக விளங்குபவள் பெண். எனவே, அக்குடும்பச் சுமையைத் தாங்கும் பெண் அன்பானவளாகவும் திட காத்திரமுள்ளவளாகவும் சிக்கனத்தையும் சுகாதாரத்தையும் சுத்தத் தையும் பேணுபவளாகவும் குடும்ப நலனில் அக்கறையுள்ளவளா கவும் இருக்கவேண்டுமென்ற அவசியத்தை மீனாட்சியம்மாள் தோட் டத்துக் கூலிப்பெண்களுக்கு அவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் விளக்கிக் கூறினார். ஒவ்வொரு குடும்பமும் முன்னேறினால்தான் அச்சமூகமே முன்னேறும் என்ற கருத்தைத் திடமாக மனதிலிருத்திய மீனாட்சியம்மாள் அறியாமையில் மூழ்கி அல்லல்பட்டுக் கொண்டி ருக்கும் அம்மக்களின் நன்மைக்காக, மேன்மைக்காகப், பலவழிகளிலும் உதவமுன்வந்தார்.

அக்காலத்தில் இந்தியா வெள்ளையரின் ஆட்சியில் அடிமைப் பட்டுக் கிடந்தது. மகாத்மா காந்தி, நேருஜி, ராஜாஜி, பாரதி, வல்ல பாய்பட்டேல் எனப் பல பெருந்தலைவர்கள் இந்திய நாட்டு விடுத லைக்காகப் போராடினர். சுதந்திரத்தின் அவசியம் இலங்கையிலும் உணரப்பட்டது. விடுதலை, சுதந்திரம் எனப் பல பெயர்களில் பத்திரி கைகள், சஞ்சிகைகள் அங்கு வெளிவருவது போலவே சுதந்திரப் போர்’ என்ற பத்திரிகை மீனாட்சியம்மாளின் கணவரே ஆசிரியராக இருந்து வெளியிட்டதால் அன்றாடச் செய்திகளை உடனுக்குடன் அறியவும் அரசியல்நிலையை அவதானிக்கவும் கூடியவாய்ப்பு அம்மையாருக்கும் கிடைத்தது. அன்றாடம் பத்திரிகைச் செய்திகளை வாசித்துத் தானே மனநிறைவடைவதோடு மட்டுமன்றி, தன் சுற்றாட லிலும் சூழலிலுமுள்ள ஏழைத்தொழிலாள மக்களுக்கும் நாட்டு நடப்புக் களைத் தெரிவித்து அவர்களுடைய அறிவை வளர்க்கவும் விடயங் களைத் தெரிவித்து மனநிறைவடைந்தார் அம்மையார். எழுதப் படிக்கத்



மீனாட்சியம்மாள் நடேசைய்யர்

தெரியாத மக்களை வழிப்படுத்தும் நல்லுபாயமாகத் தனது பிரசாரத்தை மேற்கொண்டார். 'சுதந்திரப்போர்' என்ற பத்திரிகையை நடேசையர் தமிழ்வாரப் பத்திரிகையாக நடத்திவந்தார். ஆசிரியருக்கு நேரமில்லாத போது, ஈவேரா பெரியார் சிறையிலிருந்தபோது பத்திரிகைத் துறை பற்றி எதுவுமே தெரியாத நாகம்மையார் ஈ.வே.ரா. நடத்திய 'விடுதலை' என்ற பத்திரிகையை மிகத் திறம்பட நடாத்தியதுபோல மீனாட்சி யம்மாளும் பத்திரிகை ஒப்புநோக்குதல், பக்கம் அமைத்தல் போன்ற வேலைகளையும் ஐயருக்கு உதவியாகச் செய்து ஊக்கம் கொடுப்பர். பத்திரிகை விநியோகத்திலும் உதவுவார்.

மீனாட்சியம்மாள் நடேசையரோடு இணைந்து தோட்டமக்களுக்குப் பல சீர்த்திருத்தங்களைச் செய்து வழிகாட்டிவந்தார். தொழிலாளர் களுடைய வளர்ச்சியில், உரிமைகளைப் பேணுவதில் அக்கறையில்லாத முதலாளிவர்க்கம் இவர்கள் முயற்சியில் தவறு கண்டது. தோட்ட மக்களோடு இவர்கள் உரையாடுவதையோ பிரசாரக் கூட்டங்கள் நடத்துவதையோ அனுமதிக்காது தடைசெய்தது. தோட்டங்களுக்கு இவர்கள் செல்வதையும் தடைசெய்தது.

தாங்கொணாத இக்கஷ்டங்களிலிருந்து மக்களைக் காப்பாற்றி வழிநடத்தவேண்டுமென்ற நல்ல நோக்கில் தோட்டங்களுக்கு உள்ளே

செல்ல முடியாததால் இருவரும் புடைவை விற்பனை செய்யும் வியாபாரிகள் போல, பொருள் விற்பனையார்கள்போல நடித்து மாறுவேடம் பூண்டு மக்களிடம் சென்று தமது கருத்துக்களைத் தெரி வித்ததாக அறியக்கிடக்கிறது. தாம் இன்னல்பட்டாலும் துன்பத்தில் உழலும் மக்களை ஈடேற்ற இவ்விருவரும் பெரும்பாடுபட்டனர்.

அறியாமை காரணமாக இத்தொழிலாளிகள் தாம்பாடுபட்டு உழைத்த பணத்தையே ஒழுங்காகக் கணக்குப் பார்த்துப் பெற்றுக் கொள்ளக்கூடிய அறிவைக் கூடப் புரிந்து கொண்டவர்களென்று கூற முடியாது. சுயபுத்தியற்ற நுட்பமான அறிவும் குறைந்த மக்களாகையால் இலகுவில் ஏமாற்றுப்பட்டுவிடக் கூடியவர்களாகவும் அப்பிராணித் தனம் மிக்கவர்களாகவும் இவர்கள் வாழ்வதை அவதானித்த அம்மை யார் பல்வேறு துறைகளிலும் இவர்களை முன்னேற்றத் தன்னால் முடிந்தளவு பாடுபட்டு உழைத்தார். மீனாட்சியம்மாளின் கணவரால் ஆரம்பிக்கப்பட்ட டெமி 8 பக்கங்கள் கொண்டதும் தனிப்பிரதியின் விலை 5 சதமெனக் குறிப்பிடப்பட்டதுமான 'சுதந்திரப்போர்' என்ற தமிழ் வாரப்பத்திரிகை, இலங்கை வாழ் இந்தியத் தொழிலாளர்களுடைய சுதந்திரத்திற்காக உழைக்கும் பத்திரிகை (யென்றும்) தோட்டங்களிலும் தொழிற்சாலைகளிலும் நகரப்பகுதிகளிலுமுள்ள கடைமுதலிய இடங் களிலும் வேலைசெய்யும் தொழிலாளர் உரிமைக்காகப் போராடும் பத்திரிகையாக விளங்கியது.

"இந்தியாவைவிட்டு அந்நிய நாடு சென்றுள்ள இந்தியர் விடயங்கள் மற்றும் அரசியல் பொருளாதாரம் கைத்தொழில் முதலியவற்றைப் பற்றிய வியாசங்களும்.... " இடம்பெறும் என்ற மகுடவாசகங்களுடன் அட்டன் டிம்புல வீதியிலிருந்த கணேஷ் பிறெஸ்ஸில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. இப்பத்திரிகை எவ்வளவுதூரம் இந்தியத் தொழி லாளர்களுக்காக, அவர்கள் நலன்கருதி வெளியிடப்பட்டாலும் கூட அத்தொழிலாளர்கள் அப்பத்திரிகைகளைப் பெற்றுக் கொள்ளவோ அவற்றிலுள்ள விடயங்களைப் படித்து விளங்கிக் கொள்ளவோ கூடியளவில் அவர்களது கல்வியறிவு இருக்கவில்லை. ஆனால், அப்பத்திரிகையை அதிலுள்ள விடயங்களை மக்கள் அறிந்திருக்க வேண்டுமென்பதில் அம்மையாருக்கு ஒரே ஆவேசம். எனவே, பத்திரிகையைக் கையில் சுமந்தபடி, இலங்கையின் வடக்கிலே 'தமிழ் மகள்' என்ற பத்திரிகையைத் தானே பொறுப்பேற்று அச்சிட்டு வெளி

யிட்டதோடு ஒரு சீலைப் பையினுள் போட்டுச் சுமந்தபடி வீடு வீடாகச் சென்று விநியோகித்த பத்திரிகை ஆசிரியர் மங்களம்மாளைப் போலவே மீனாட்சி அம்மையாரும் தோட்ட மக்களிடம் சென்று பத்திரிகைச் செய்திகளை வாசித்து விளக்கிக் காண்பித்துச் செய்திகளை அறியச் செய்தார். அம்மக்களோடு இவர் நெருங்கிப் பழகியதால் அவர்களுடைய உடனடியான துன்ப துயரங்கள் அறிந்து அவற்றை நீக்கப் பெரிதும் பாடுபட்டார்.

மீனாட்சியம்மாள் இத்தகைய சமூகப்பணிக்குத் தன்னை அர்ப் பணித்திருந்த வேளையில் சமூக அமைப்பு மிக மிகப் பிற்போக்கான நிலைமையால் பீடித்திருந்தது. தீண்டாமை எனும் சாதிவேறுபாடு, பிற்பட்டவகுப்பினரை மிருகங்கள் போல் நடத்துதல், மது அரக்கனின் ஆக்கிரமிப்பு, சீதனக் கொடுமை, பாலியல் திருமணம், விதவா விவாக மறுப்பு, பெண்கல்வி மறுப்பு, பெண் அடக்குமுறை, கற்புக்கலாசாரம் போன்ற மிகப் பிற்போக்கான கொள்கைகளின் மாயையில் சமூகம் இறுக்கமாகக் கட்டுண்டிருந்த காலம். பெண் வீட்டை விட்டு வெளியே வந்தாலே கற்பு பறிபோய்விடும் என்ற கொள்கை கடைப்பிடிக்கப் பட்டிருந்த காலம். இந்திய தேசத்தின் விடுதலைக்காக இத்தகைய மூடக்கொள்கைகளெல்லாம் களைந்தெறியப்பட வேண்டுமென மகாத்மா காந்தி உட்பட தேசபக்திமிக்க தலைவர்களெல்லாம் முழக்க மிட்ட காலம். மக்கள் சுதந்திரமாகத் தமக்கான உரிமைகளைப் பெற்று ஆனந்தமாக வாழவேண்டுமென ஆர்ப்பரித்தகாலம். அதன் எதிரொலி இலங்கையையும் பாதிக்கவே செய்தது.

சுதந்திரக் காற்றை மக்கள் சுவாசிக்க வேண்டுமெனச் சிந்தித்த மீனாட்சி அம்மாள் மிக மிக இறுக்கமான வைதீக ஆசாரங்களை யெல்லாம் மேற்கொண்டொழுகும் உயர்ந்த சமூகத்தைச் சேர்ந்தவர் தஞ்சாவூர் வாசியான இவர் இங்கே இலங்கையில் தன்னைச் சுற்றியுள்ள வைதீகம், சாதி, பெண்ணடிமை, அடக்குமுறை, அறியாமை என்ற தளைகளையெல்லாம் தகர்த்தெறிந்து தனது கணவரின் துணையோடும் அனுசரணையோடும் மக்கள் பணிசெய்யத் துணிந்தமை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய அத்தியாயமே யாகும். தஞ்சாவூரிலிருந்து வந்து இங்கு குடியேறிய இவர் எப்போ பிறந்தாரென்றும் அவருடைய பெற்றோர் யாவர் என்பதும் அறிய முடியாத விபரங்களாக இருப்பினும் பெரும் மேற்படிப்புப் படிக்காத

தொழில்துறையில் ஈடுபடாத, சாதாரண குடும்பத் தலைவியான, அதுவும் உயர் சாதியெனப் பக்குவமாக ஒதுக்கிவைக்கப்பட்ட ஒரு சமூகத்திலிருந்து வந்தவர். இத்தகைய பின்னணியில் பிற்படுத்தப்பட்ட மக்களை தன் சிந்தையில் இருத்தி அவர்கள் வாழ்வு வளம்பெற எடுத்த முயற்சிகள் மிக மிகப் பாராட்டப்பட வேண்டி யவையே. 'நோய் நாடி, நோயின் குணம் நாடுதல்?' என்பது போலக் குளிராலும் பட்டினியாலும் அட்டைக் கடியாலும் வேதனைப்பட்டுத் திசைதெரியாது திகைத்து நிற்கும் மக்களுக்கு உதவுவதே மாபெரும் சேவை. அத்தகைய அரிய பணிக்கே தன்னை அர்ப்பணித்த மீனாட்சி யம்மாளைப் பற்றிய விபரங்களோ வரலாறுகளோ கூட அவர் ஒரு பெண் என்பதால் - இரண்டாம் பட்ச நிலையிலுள்ளவர்தானே என்ற எண்ணத்தில் கவனம் பெறாமலிருப்பதும் பதிவுகளெதுவுமின்றியிருப்பதும் பெண்ணாய்ப் பிறந்ததின் துரதிர்ஷடம் என்று கொள்ளலாம்.

எது எப்படியாயினும் நல்லெண்ணம் கொண்ட உணர்வு பூர்வ மானவர்களின் மனம் ஏதாவது சாதிக்க வேண்டுமெனக் கிளர்ந்து கொண்டும் மேற்கிளம்பியபடியுமே இருக்கும். தன் எண்ணங்களை ஏனையோரும் உணரச்செய்து நல்ல வழிவகைகளுக்கான தீர்வுகளைப் பெற்று நிறைவாக வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டு மென்ற உந்துதல் அம்மையாருக்கு நிறையவே இருந்துள்ளது. இந் நோக்கதினைத் தாம் அமைத்துள்ள தொழிற்சங்கம் மூலம் நிறைவுகாண விழைந்தனர்.

தோட்டங்களின் உள்ளே சென்று தொழிலாள மக்களுக்குப் பல அறிவுரைகளையும் சீர்திருத்தக் கருத்துக்களையும் பிரசாரம் செய்த அம்மையார், இலங்கை வாழ் இந்தியரை அவர்கள் தாய்நாட்டிற்கே விரட்டியனுப்ப வேண்டுமென்ற கருத்து இலங்கையரிடையே நிலவிய போது மிகச் சினங்கொண்டார். பத்திரிகைகளைப் படித்தும் சில துண்டுப் பிரசுரங்களை விளக்கியும் மக்களின் வாழ்நிலையை அவர் களுக்கு விளங்கப்படுத்தினார். சிலர் இவற்றில் அலட்சியமாயிருக் கவே, அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும் என்ற யுத்தியைக் கையாண்டு தனது கருத்துக்களை அம்மக்கள் இலகுவில் புரிந்து கொள்ளக் கூடிய விதமாகச் சிறுசிறு சொற்களால் எளிமையான பாடல் களை ஆக்கினார். அப்பாடல்களுக்கு இலகுவான மெட்டுக்களைப் போட்டுப் பாடக்கூடிய முறையில் அவற்றைத் தயார் செய்தார். பாடல்

அடிகளைத் திருப்பித் திருப்பி பாடிக் காண்பித்தார். அவை மக்கள் மனதில் தங்கக் கூடியதாகவும் அவர்கள் விரும்பிப் பாடக்கூடியதாகவும் அமைந்திருந்தன. அவற்றுள் சில:

'லங்கா மாதா நம்ம தாய்தான் - இந்த நாட்டினி லெல்லோரும் அவளுக்குச் சேய்தான்' என்று தோட்டத்து மக்களுக்கும் இலங்கை தாய் நாடுதான் என்று உணர்த்தியதோடு அது அவர்கள் உரிமை யென்றதையும் தொட்டுக் காட்டியுள்ளார்.

> புலிகள் தான் வாழ்ந்திட்ட நாடு – அது இப்போ
> பொழில் சூழும் அழகிய சிங்கார நாடு,
> பல்லாயிரம் பேர்கள் உயிரிதற்கீடு

எனக் காடாகித் கிடந்த தோட்டங்களை வெட்டிச் சீர்படுத்திப் பண படுத்திப் பொழிலாக்கிய உழைப்பு இந்தியருடையதென்றும் இப் பணிக்காக எத்தனையோ இந்திய மக்கள் உயிரிழந்துள்ளனரென்ற உண்மையையெல்லாம் தனது பாடல்களின் உள்ளீடாக்கிப் பல உயிர்ப்பும் உணர்வும் மிக்க பாடல்களை எழுதியுள்ளார். இப்பாடல் களால் அம்மக்கள் நிச்சயம் எழுச்சிகொண்டிருப்பவர் என்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை.

அடக்கியொடுக்கப்பட்ட சமூகத்துள்ளிருந்து மேலெழுந்த பெண்ணான மீனாட்சி அம்மாள் மேற்படி பாடல்களை, இலங்கை யர்கள் இந்தியர்களை இந்தியாவிற்கு விரட்ட வேண்டுமென்று சொன்ன தற்காக எதிர்த்துப் பாடிய பாடல்கள் என்று தலைப்பில் 'இந்தியர்களது இலங்கை வாழ்க்கையின் நிலைமை' என்ற நூலின் மறுபிரசுரத்தில் இடம்பெற்றுள்ளன.

எத்தகைய சீர்திருத்தக் கருத்துக்களை கோ.நடேசையர் எழுதி னாலும் பேசினாலும் அத்தகைய கருத்துக்களை நேரடியாக மக்களிடம் எடுத்துச் சென்ற பெருமை அம்மையாரையே சாரும். ஆனால், தற் போது பலரும் இவரை நன்கு தெரிந்து கொள்ளக்கூடியதாக தகவல்கள் போதியளவு இல்லாமலிருப்பது பெருங்குறையென்பது நாம் மனங் கொள்ள வேண்டும். இவரது நேரடியான குரலாக மேற்படி நூலின் முகவுரையில்,

''இலங்கை வாழ் இந்தியர்களின் நிலைமை வரவர மிகவும் மோச மாகிக்கொண்டே வருகிறது. இலங்கைவாழ் இந்திய மக்கள் அனை

வரும் ஒன்றுசேர்ந்து உழைக்கும் காலம் ஏற்பட்டுவிட்டது. இந்திய மக்களுக்கு எதிர் காலத்தில் வரவிருக்கும் ஆபத்தை உணர்த்தி அவர் களிடையே அதிலும் முக்கியமாக இந்தியத் தோட்டத் தொழிலாளர் களிடையே பிரசாரம் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். அத்தகைய பிரசாரம் பாட்டுகள் மூலமாகச் செய்யப்படின் அதிக பயனளிக்கும். இதை முன்னிட்டே இன்று இலங்கை வாழ் இந்தியர் களின் நிலைமையைப் பாட்டுக்களின் மூலம் எடுத்துக்கூற முன் வந்துள்ளேன்.''

"இந்தியர்கள் தூக்கத்தில் ஆழ்ந்து விடாது தங்களது உரிமைகளை நிலை நாட்டுவதற்கு தீவிரமாகப் போராடும்படி அவர்களை இப் பாட்டுக்கள் தட்டியெழுப்ப வேண்டுமென்பதே எனது அவா", என 23.05.1940 திகதியிடப் பெற்று அட்டனிலுள்ள மல்லியப்பூ என்ற முகவரியிலிருந்தபோது இந்நூலைப் பதித்து அதற்கான முகவுரையில் தனது நோக்கத்தை நன்கு விளக்கியுள்ளார்.

இத்தகைய தீவிரமான சிந்தனையும் ஆவேசமும் இனப்பற்றும் போராட்ட உணர்வும் மிக்க இப்பெண்மணி எட்டுப் பக்கம்கொண்ட இந்நூலை மட்டுமல்ல இதுபோல இன்னும் பல நூல்களை வெளிக் கொணர்ந்திருப்பாரென எண்ணத்தோன்றுகிறது.

'உடல் பொருள் ஆவியை உலகுக் களிப்பதே
உண்மையான தியாகம்
நடைமுறையாமே நாமறிந்திடுவோம்
நமது காந்தி பாகம்'

"தேசவிடுதலை சேவை புரிவதே
திடமெனக் கொள்ளுவோமே"

என்றெல்லாம் பொது சேவை பற்றி மிக உணர்வாகவும் திடமாகவும் பேசிய அம்மையாரின் பணிகளை இன்னும் ஆழமாகவும் அகலமாக வும் நாம் அறிந்து கொள்ளமுடியாமலிருப்பது நமது துரதிர்ஷ்டமாகும்.

நாட்டில் அடிக்கடி நடைபெற்ற வன்முறைகளால், வெள்ளம், நிலச்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களால், இடப்பெயர்வுகளால் அவற்றைப் பேணிக் கட்டிக்காக்கக்கூடிய வாரிசுகள் இன்மையால் இவர்களுடைய எழுத்துகள், பதிவுகள் சிதைவுற்று அழிந்தி ருக்கலாம்.

இந்நூலை மறுபதிப்புச் செய்த 'பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத் தின்' பணிப்பாளர் செல்வி திருச்சந்திரன் இந்நூலின் மறுபதிப்பின் முன்னுரையில் குறிப்பிட்டிருப்பதுபோல,

"நடேசையரைத் தெரிந்த அளவுக்கு அவரது மனைவியை எம்மில் பலருக்குத் தெரியாது. வரலாற்றின் ஏடுகளில் பல பெண்கள் இனங் காணாமல் புதைக்கப்பட்டிருக்கிறார்கள்.History எழுதிய ஆண் வர லாற்று ஆசிரியர்கள் பலர் தெரிந்தோ தெரியாமலோ வரலாற்றில் பெண்களது பங்கினை மறைத்துவிட்டார்கள். பெண் விடுதலைவாதிகள் பலர் தற்போது வரலாற்றுப் பெண்களை அகழ்வு எடுத்துக் கொண்டி ருக்கிறார்கள்" என்பது முற்றுமுழுதான சத்தியவார்த்தையென்றே கொள்ளலாம்.

டாக்டர் செல்வி திருச்சந்திரன் குறிப்பிடுவது போல "மீனாட்சி யம்மாள் ஒரு பெண்தானே" என்ற இரண்டாம் பட்ச எண்ணத்தால் அவருடைய வேலைகள் கணக்கெடுக்கப்படாமல் அசட்டையாக மறந்தேவிட்டிருக்கலாம் அல்லது அழிக்கப்பட்டிருக்கலாம். இந்நிலை அவருக்கு மாத்திரமல்ல பெண்ணுலகிற்கே இழைக்கப்பட்ட பெரும் கொடுமையாகும். எனினும் எமது கைக்கு எட்டும் வகையில் இச்சிறு நூலின் பழைய பிரதியொன்றை எமக்களித்த குமாரி ஜெயவர்த்னாவுக்கும் இந்நூலை மறுபிரசாரம் செய்த பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத் திற்கும் பெண்ணுலகமே தன் நன்றியைத் தெரிவிக்க வேண்டியது அவசியம்.

மீனாட்சியம்மாளின் ஒரு சிறு நூல்தான் எம் கைக்கு எட்டியிருப் பினும் அந்நூலில் அவரது பாடல்களிலும் முகவுரையிலுமுள்ள கருத்துக்கள் அவரின் உள்ளத்தின் ஆழத்தையும் நாட்டு மக்களிட முள்ள சிரத்தையையும் வேண்டிநிற்கும் இலட்சியத்தையும் பளிங்கு போலத் தெளிவாக்கி நமக்கு அறைகூவி நிற்கிறது.

5

# செல்லம்மா நாகேந்திரர்

## [1900 – 1989]

‘பெண் என்பவள் ஒரு தரம். அவள் ஒரு கலைப்பொருளாக மாற ஆண் என்ற அளவு தேவைப்படுகிறது. ஆண் என்பவன் வேறொன்றின் பாதியாக இருக்கிறான். வலுவான, அழகான, திறமையான பாதியாய், தன்னைவிட அதிக வலுவும், அழகும், திறமையும் கூடிய வேறொரு பாதியின் மறுபதியாய் இருக்கிறான். அப்படியெனில் அவன் ஆழங் காண முடியாததும், மிக உன்னதமானதுமான ஒன்றின் அற்புதத்தின் பாதி. அவள் முழுநிறைவான முழுமை. ஒரு சிறிய தெளிவில்லாததும், அதிக வலுவில்லாததும், ஒத்திசைவில்லாததுமான முழுமை. என்றாலும் முழுமைதான்” எனப் பெண்ணைப்பற்றி, இவ்வுலகின் நாலாபக்கங் களிலும் சுமார் ஐம்பது லட்சம் வாசகர்களைக் கொண்டவரும், நான்கு முறை எழுத்துப் பணியின் சிறப்புக்காக நோபல் பரிசுக்கு சிபார்சு செய்யப்பட்டவரும், செர்பிய இனக்குழுக்களின் சரித்திரத்தையும் கலாசாரத்தின் நுண்மையையும் முன்னிலைப்படுத்தி எழுதும் பிரபல செர்பிய நாவலாசிரியருமான ‘‘மிலோராட் பாவிக்’’ எனும் எழுத்தாளர் குறிப்பிடுகின்றார்.

பெண் பூரணத்துவமான முழுமை நிறைந்தவளாகவே சங்க காலத்திலும் காணப்பட்டுள்ளாள்.

இடைக்காலத்தில் பல்வேறு வகையான சூழ்நிலைகளால் அவள் வஞ்சிக்கப்பட்டுக் கொச்சைப்படுத்தப்பட்டுள்ளதையும் நாம் அவ தானிக்கலாம். அதன் பின்னரே பெண்ணுக்கான அடக்குமுறையும் பெண்ணென்றால் பேயென்றும் மாயப்பிசாசென்றும் தப்பிதமான



செல்லம்மா நாகேந்திரர்

கருத்துகளும் பரவத் தொடங்கின. இவற்றையெல்லாம் கூடச் சிறிதும் பொருட்படுத்தாமல் தான், தான் வாழும் சூழல், நாடு, எனத் தன்னைச் சூழவுள்ள நிலைமை என்பவற்றைக் கண்ணோட்டமிட்டு அவற்றை மேம்படுத்துவதில் மிகுந்த அக்கறை கொண்டு வாழ்ந்தவர் தான் செல்லம்மா எனும் பெண்மணி. 'தொட்டிலை ஆட்டும் கையே உலகினை ஆளும் கையாம்' என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையை இளமை யிலிருந்தே வளர்த்துக் கொண்ட இப்பெண்மணி பல விடயங்களை வென்றெடுக்கத் தன்மீதே சரியான நம்பிக்கை கொண்டவராக விளங்கினார்.

ஒரு சிறு துரும்பையே பாரிய பொருளாகவும் கொள்ளலாம். பிரமாண்டமான பெரும் விடயத்தை ஒரு சிறுதுரும்பாகவும் எடுத்துக் கொள்ளலாம். இவையெல்லாம் நாம் பார்க்கும் பார்வையிலேதான் பெரிதும் தங்கியுள்ளதென்பதற்கிணங்கவே செல்லம்மாவும் சிறு பராயத்திலிருந்தே எந்த ஒரு விடயத்தையும் அணுகும் முறையிலேயே வெற்றிக்கனியைக் கையிலேந்தலாமென்ற நம்பிக்கை மிக்கவராகத் தொழிற்பட்டமையால் அன்றைய சூழலில் பெண்கள் யாருமே சிந்தித்துப்பார்க்கவே முன்வராத பொதுநல விடயத்தில் சிறப்பாக அரசியல் நாட்டு நிர்வாகமென்பவற்றில் அக்கறை கொண்டிருந்தார்.

பொதுவாக அரசியலென்பது 'சேற்றை வாரி வீசுவது' போன்றது என்ற சொல்லடையே வலுத்திருந்த வேளையில் ஆண்களே பிரவேசிக்கப் பின்வாங்கும் துறையாக அரசியல் இருந்தது. இலங்கையைப் பொறுத் தளவில் அரசியல் எண்ணத்தால் பெண்கள் உந்தப்பட்டு அரசியலுள் பிரவேசித்தோர் என்பதைவிட, தந்தையாரோ, கணவரோ, சகோதரனோ அரசியலிலீடுபட்டிருந்த வேளை உயிரிழந்தபோது அவர்களது அனு தாபத்தைத் தாங்கி அவர்களின் பிரதிநிதியாகப் பல நிர்ப்பந்தங்களின் பேரில் உருவெடுத்து அரசியலில் நுழைந்த பெண்களே அநேகர் எனக் குறிப்பிடலாம். இத்தகைய மனநிலையிலிருந்து பெரிதும் வேறுபட்ட வராகவே செல்லம்மா அவர்களின் அரசியல் பிரவேசம் நிகழ்ந் துள்ளது.

முன்வாசல் தொடக்கம் பின்வளவு ஈறாக ஒரு வீட்டின் நிர்வாகம் முழுவதும் எப்படி ஒரு பெண்ணின் கட்டுப்பாட்டினுள் தினமும் நடைபெறுகின்றதோ அதேபோல ஒரு சமுதாயத்தையும் இன்னும் குறிப்பிடுவதென்றால் ஒரு தேசம் முழுவதையுமே தன்னலமற்ற பொது நலம் நாடும் நல்ல துடிப்புள்ள சேவை மனப்பாங்கு கொண்ட குழுவினர் ஒன்று சேர்ந்து தம் நாட்டை வளம்பெற நடத்த முடியாதா? பொது மக்களுடைய அடிப்படைத் தேவைகள் நலன்கள், கல்விவளர்ச்சி, சுகாதாரம் போன்றவற்றில் மிகுந்த அக்கறைக் கொண்டோர் அரசியலில் குதித்தால் நிச்சயம் அந்தச் சூழல் முன்னேற்றமடைந்து வளர்ச்சி காணுமென்பதில் வேறு கருத்துக்கு இடமேயில்லை. இத்தகைய ஒரு மனப்பான்மை கொண்டவராகச் செல்லம்மா திகழ்ந்தபடியினால் அவருடைய கணவர் திரு நாகேந்திரர் அவர்களும் அம்மையாருக்கும் அவருடைய பணிகளுக்கும் முட்டுக்கட்டை இடாமல் மனைவியாரின் குணநலத்தை நன்கு புரிந்து கொண்டு துணையாக இருந்தமையால்தான் குடும்பவாழ்வில் இணைந்திருந்த செல்லம்மாவால் இத்தகைய சேவை களைத் துரிதமாக முன்னெடுக்க முடிந்தது என்பதையும் நாம் கவனத் தில் கொள்ள வேண்டும். நாம் அறிந்தளவில் திரு.நாகேந்திரர் என்ற பெருமகனும் தமது மனைவியாரைப் போலவே நற்குண நற்செயல் களோடு பொதுநல நோக்கமுள்ளவராகவே வாழ்ந்தவராவார்.

1900 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 26 ஆந் திகதி பிறந்த செல்லம்மா அம்மையாரின் தந்தையார் பெயர் வைத்தியநாதர் கணபதிப்

பிள்ளை தாயார் பெயர் நாகமுத்து. இவரை அண்டை அயலார் ‘தங்க உடைச்சி’ எனச் செல்லமாக அழைப்பதாகவும் அறிகிறோம்.

உரிய பருவ வயதில் செல்லம்மா நாகேந்திரர் என்ற பண்புசால் மனிதரை தனது மணாளனாக ஏற்றுக் கொண்டார். அன்பும் அறனும் பொலிந்த இத்தம்பதிகளின் குடும்பவாழ்விலே குழந்தைகள் எண்மர். ஆண்பிள்ளைகள் ஆறும் இரு பெண் குழந்தைகளுமாக இல்லறம் இனிய நல்லறமாகி விளங்கியது. கருத்தொருமித்த இத்தம்பதி ஒருவருக் கொருவர் அன்பாகவும் ஆதரவாகவும் வாழ்ந்ததன் காரணமாகவே அம்மையாரின் கனவுகள் பல நனவாகின.

இலங்கையின் வடபால், அதன் உச்சியின் அருகே குட்டிகுட்டியாக ஏழு தீவுகள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்றுதான் நெடுந்தீவு. இத் தீவுகளுக்கெல்லாமே சிறப்பான பண்புகள் உண்டு. இங்கு வாழும் மக்கள் பொதுவாக அனைவருமே உடம்பை வருத்தி உழைக்கும் கடும் உழைப் பாளிகளாக, பிறரிடத்தில் மிகுந்த அன்பும் வாத்சல்யமும் மிக்க வர்களாக மிகுந்த பணிவும் பண்பும் மிக்கவர்களாக, விருந்தோம் பலிலும் பிறருக்கு உதவுவதிலும் மிகுந்த ஆர்வமுள்ளவர்களாக, திகழ்ந்தனர் என தீவு மக்களின் சிறப்புகளை அடுக்கிக் கொண்டே போகலாம். அத்தகைய சிறப்புகளெல்லாம் மலிந்த ஊரான நெடுந்தீவு தான் செல்லம்மா அம்மையாரின் பிறப்பு வளர்ப்பு வாழ்வு எல்லாம் பொருந்திய ஊர்.

நெடுந்தீவு பெரிதாக முன்னேறிவிட்ட கிராமமெனக்கூற முடியா விட்டாலும் 1912 தொடக்கம் அங்கே கிராமச் சங்கம் என ஒரு நல்ல சங்கம் இருந்ததாலும், 1934 தொடக்கமே அது மெல்ல மெல்ல இயங்கத் தொடங்கியதெனவும் அறிகிறோம். இச்சங்கம் மக்கள் பிரதி நிதிகளைக் கொண்டதாகவே அமைக்கப்பட்டது.

1941 இல் நடைபெற்ற கிராம சபை சங்கத்திற்கான தேர்தலில் திருமதி செல்லம்மா நாகேந்திரரே தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இத்தெரிவு தான் இலங்கை அரசியல் வரலாற்றில் பொன் எழுத்துக் களால் பொறிக்கப்படவேண்டிய செய்தி. இலங்கையின் கிராமசபைச் சங்கத்தேர்தலில் ஒரு பெண் தலைமைப் பதவி ஏற்றமை இன்னொரு வருக்காக இருக்கையை நிரப்புபவராக அல்லாமல் உண்மையாகவே மக்கள் விருப்பத்துடன் அம்மையாரும் தமது மக்களின் நலனுக்காக

பாடுபட்டு ஏதாவது சேவை செய்ய வேண்டுமென மனப்பூர்வமாக அப்பதவியை விரும்பி ஏற்றுக் கொண்டு செயலாற்றத் துணிந்தார். இவரது சேவையின் பயனை உணர்ந்த மக்கள் 2 ஆம் தடவையாகவும் 1946 இலும் இவரைத் தலைவியாகத் தெரிவு செய்தனர்.

இயல்பாகவே எளிமையையும் தூய்மையையும் இறைபக்தி யையும் விரும்பிநிற்கும் செல்லம்மா தம் ஊரில் அமைந்துள்ள பெருக்கடி விநாயகர் ஆலயத்தின் பூசைகள் வழிபாட்டு முறைகள் என்பவற்றை யெல்லாம் ஒழுங்குசெய்து மக்கள் வழிபட்டு அமைதி பெற வழி வகுத்தார். விநாயகப் பெருமானின் உற்சவங்கள், விசேட தினங்கள், விழாக்கள் என்பவற்றையெல்லாம் தனது சொந்தச் செலவில் நடத்தி மக்கள் மன ஒருமைப்பாட்டையும் சமயப் பற்றையும் வளர்க்க உதவினார். ஆலயங்கள் சமுதாயப் பண்பாட்டின் மையங்கள் என்ற உண்மையை அவர் உணர்ந்திருந்தமையால் இவ்வாலய நிர்வாகம் மூலம் சில ஒழுங்குகள், கட்டுப்பாடுகள், தொண்டுமனப்பான்மை, ஒற்றுமை போன்ற உணர்வுகள் மக்களிடையே நிலவக் காரண ரானார்.

ஒரு சமூகத்தின் எதிர்காலப் பிரஜைகளான இன்றைய குழந்தைகள் திடகாத்திரமான உடலும் சிறந்த மனப்பண்புகளும் பொருந்தியவர் களாக வளரவேண்டுமென்பதைக் கருத்தில் கொண்ட அம்மையார் குழந்தைகள் இலவசமாகப் பால் அருந்தும் திட்டத்தை மேற்கொண்டார். வெளிநாடுகளிலிருந்து பால்மாவை இறக்குமதி செய்து அவற்றைக் கரைத்துக் குழந்தைகளுக்குக் கொடுக்கவென நெடுந்தீவிலே 3 பால் நிலையங்களை அமைப்பித்தார். தினமும் குழந்தைகளுக்கு இப்பால் இலவசமாகவே விநியோகிக்கப்பட்டது. இவ்வேற்பாட்டினால் குழந்தை களும் பெற்றோரும் மிக்க மகிழ்ச்சியடைந்தனர்.

அப்படியே கல்வியிலும் பிள்ளைகள் கருத்தூன்ற வேண்டுமென்ற நோக்கில், பெருக்கடி விநாயகர் ஆலயத்தின் அருகாமையில் ஒரு பாடசாலையையும் ஆரம்பித்தார். அதன் பெயர் செல்லம்மா வித்தியா சாலை. பிற்காலத்தில் இப்பாடசாலை நெடுந்தீவு இந்து மத்திய மகா வித்தியாலயத்துடன் இணைந்து கொண்டது. இவர் ஆரம்பித்த பாட சாலை பாலர் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை கொண்டிருந்தது. சிறுவர்கள் 'எண்ணும் எழுத்தையுமாவது குறைந்த பட்சம் அறிந் திருப்பதோடு தாய்மொழிக்கல்வி, சமயம் என்வற்றை இளமையிலிருந்தே

குழந்தைகளுக்கு ஊட்டவேண்டும் என்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்து தொழிற்பட்டார். இறைதொண்டு, சுத்தம், சுகாதாரம், நல்ல சமயப் பழக்கவழக்கங்களையெல்லாம் இளம்வயதிலேயே தெரிந்து கற்றுக் கொள்ள வாய்ப்பாக விநாயகர் கோவிலின் அருகாமையிலேயே பாடசாலையும் அமைக்கப்பட்டிருந்தது. செல்லம்மா அம்மையாரின் முகாமைத்துவத்தில் கல்விப்புலமையும் சேவைமனப்பான்மையும் கொண்ட ஆ. வைத்தியநாதர், க.இரத்தினராசா என்போர் இப்பாட சாலையின் தலைமையாசிரியப் பொறுப்பை ஏற்றிருந்த காலை மாணவரின் கல்வி, ஒழுக்கம், பழக்கவழக்கங்கள் என்பவற்றிலும் மாணவருடைய வளர்ச்சியிலும் மிகுந்த கண்டிப்பும் கவனமும் மிக்கோராக இருந்துள்ளார். இவர்களது தலைமையில் ஏனைய ஆசிரியர்களும் தமது பணிகளைச் செவ்வனே ஆற்றியதனால் இங்கு கற்ற மாணவர்கள் பலர் அரசு நடத்தும் 5 ஆம் ஆண்டுப் புலமைப்பரீட்சை களில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றதன் விளைவாக முதல்தரமான கல்லூரிகளில் இணைந்து உயர்கல்விகற்க வாய்ப்பாக அமைந்தது.

மக்களுடைய குடிநீர்த்தேவை, போக்குவரத்து, ஓய்வுநேரவேலை, கைத்தொழில் எனப் பலவிடயங்களிலும் கண்ணோட்டம் செலுத்திய செல்லம்மா மக்களுடைய ஒத்துழைப்போடும் கணவருடைய அனு சரணையோடும் இவற்றை முன்னெடுப்பதில் உற்சாகம் காண்பித்தார். மக்கள் மத்தியில் ஒற்றுமையும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ளும் நிலைமையுமிருந்தால் குழுக்களாக இணைந்து பல வேலைகளை நிறைவேற்றலாமென எண்ணிப் பெண்களை ஒன்று சேர்த்து மாதர் சங்கங்களை அமைத்தார். சுகாதாரம், சிக்கனம், வீட்டுத் தோட்டம், கால்நடை, கோழிவளர்ப்பு என்பன போன்ற விடயங்களைக் கலந்துரையாடி யாவரும் பயனுறும் வகையில் வழிகாட்டினார்.

பனைகள் நிறைந்த ஊராக நெடுந்தீவு அமைந்திருந்ததால் பனையின் பயன்பாடுகளை எங்கும் பரவச் செய்யக்கூடிய வகையில் பனை ஓலையில் பெட்டி, கடகம், சுளகு, மூடல் பெட்டி, உமல், பாய், இளைப்பாய், நீற்றுப்பெட்டி என்பனவற்றையெல்லாம் இழைக்கப் பழக்கவும், இழைக்கவும் இம்மாதர் சங்க உறுப்பினர்களைப் பயன் படுத்தினார். ஓய்வான வேளைகளில் பனை ஓலைகளைச் சிறுசிறு கீற்றுகளாகக் கிழித்து பசுக்களுக்கு இரையாகப் போட்டால் கூடுதலாகப்

பால் கிடைக்குமென்பதால் பெண்கள் ஓய்வான நேரங்களில் இத்தகைய பயனுள்ள வேலைகளிலே ஈடுபடுத்தப்பட்டனர்.

பனை ஓலையின் ஈர்க்குகளிலே வெங்காயக்கூடை பின்னுவர். இக்கூடைகளைப் பின்னுவதற்கான பயிற்சிகளையும் கொடுத்துக் கூடைகளைப் பின்னும் படியான எண்ணங்களையும் தூண்டிவிட்ட பெருமை இவ்வம்மையாரையே சாரும். அச்சூழலில் வாழ்ந்த பெண்கள் பெரிதாகக் கல்விகற்றோ பள்ளிக்கூடப் புத்தகக் கல்வியைத் தன்னும் பயின்றோ இல்லாதிருந்தமையால், ஓய்வு நேரங்களை வெட்டிப் பொழுதாக்கி வீணாக்காமல், தத்தம் சூழலிலுள்ள பொருட்களைப் பயன்படுத்திப் பின்னவும், இழைக்கவும் ஆக்கபூர்வமாகத் தொழிற் படவும் பழகிக் கொண்டனர்.

ஓரளவு வசதிவாய்ப்புள்ள, நல்ல பெருமையும் புகழும் பூத்த குடும்பத்தில் தான் தோன்றியிருந்தும், தனது சொந்த வாழ்க்கையையோ அல்லது குடும்பத்தையோ மட்டும் கருத்தில் கொண்டு உழைக்காமல், நெடுந்தீவைச் சார்ந்த மக்களனைவருமே ஒட்டுமொத்தமாக வாழ்வில் உயரவேண்டுமென்ற உன்னதநோக்கோடு பொதுப்பணியில் ஈடுபட்ட சிறப்பு அம்மையாரின் பெருமைக்கு மேலும் மெருகேற்றுவதாகும்.

'சிறுதுளி பெருவெள்ளம்' என்பதற்கமைய ஒவ்வொரு கிராம சபையும் தத்தமது வட்டாரச் சூழலிலுள்ள குறைகளை நீக்கி, பொருளா தாரத்தில் முன்னேறக்கூடிய வகையில் வசதியான கைத்தொழில்கள், வீட்டுத்தோட்டம், காய்கறித் தோட்டமென்பவற்றைச் செய்து ஓரளவு தமது தேவைகளைப் பூர்த்தி செய்தால் நாட்டின் பொருளாதாரமே விரைவில் மேன்நிலை எய்திவிடுமென்ற உண்மையை உணர்ந்த அம்மையார் அகில இலங்கைக் கிராமச் சங்கங்களின் 25 ஆம் வருட மாநாட்டிற்கு ஒரு செய்தி அனுப்பியிருந்தார். அச்செய்தியிலே நாட்டின் பொருளாதார நிலைமையை மேல்நிலைப்படுத்த இத்தகைய கிராமச் சங்கங்களின் சேவை மிகப் பயன்படுமென்பதைத் தனது வாழ் நாளனுபவத்தில் நெடுந்தீவு கிராம சங்கத் தலைமைப் பதவியை இருதடவைகள் வகித்ததினூடாகப் பெற்றுக்கொண்ட அனுபவத்தைக் கொண்டே தான் இச்செய்தியை வெளியிடுவதாகக் கூறியுள்ள செ ல்லம்மா, ஏனைய பெண்களையும் பொதுவாழ்வில் இணைத்துக் கொண்டு தீவிரமாகப் பொதுநலவாழ்விற்கு அதிகநேரம் செலவழிக்கு

மாறும் பகிரங்கமாகப் பெண்களுக்கு ஒரு செய்தியை வெளிப் படுத்தியுள்ளார்.

பெண்கள் எப்படி ஒரு தாயாக, மனைவியாக, சகோதரியாக, மகளாகப் பல நிலைகளிலிருந்து ஒரு குடும்பத்தின் அமைதிக்கும் ஆனந்தத் திற்கும் மேன்நிலைக்கும் பாடுபடுகிறார்களோ அதேபோல ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் உரிய பங்களிப்பினை அவர்களால் நன்கு நிறைவேற்ற முடியும் என்ற திடநம்பிக்கையைத் தன் அனுபவங்கள் மூலம் பெற்றிருந்த செல்லம்மா பெண்களிடம் ஒரு வேண்டுகோளை விடுத்தார். "உள்ளூர் அரசியலில் நீங்கள் அனைவரும் தீவிரமாகப் பங்குபற்றுமாறு நான் இந்நாட்டுப் பெண்களைக் கேட்டுக் கொள்ளு கின்றேன்" என்பதுதான் அம்மையாரின் விருப்பமும் பெண்களிடம் அவர் யாசித்து நின்ற ஒரு பாரிய வேண்டுகோளுமாகும். எந்தக் காயை எப்படி நகர்த்தினால் இந்த நாட்டின் கூனலையும் வளைவு களையும் நேராக்கி நேரிய பாதையில் நாட்டை நடத்திச் சென்று மேல்நிலைக்கு உயர்த்த முடியுமென்பதைப் பெரும் ஆய்வுகள் மூலமோ, விஞ்ஞான தொழில்நுட்ப அறிவுப் பரப்புகள் மூலமோ வன்றி, சாதாரண எளிமையான அன்பும், பண்பும் நேரிய ஒழுக்கமும், சமுதாயப் பற்றோடுகூடிய உணர்வும் கொண்ட அம்மையார் தெரிந்து வைத்திருந்ததே பெரும் விடயமாகக் கொள்ளலாம். எனவே, தான் பெண்களை நோக்கிப் பெண்களுடைய ஆற்றல் திறமைகள் யாவற் றையும் மனதில் கணித்துக் கொண்டு இத் தகைய கோரிக்கையை அவர்கள் முன் இட்டுள்ளார்.

இத்தகைய தேசப்பற்றுமிக்க அம்மையாருடைய உயர்ந்த சிந்த னையை நாம் வியந்து நோக்கும் இவ்வேளையிலே இத்தகைய கருத் தோட்டங்களுக்கெல்லாம் அனுசரணையாக இருந்து நெய்க்குத் தொன்னைபோல உதவி வந்த கணவர் திரு.நாகேந்திரனையும் நினைவு கூர வேண்டும். நற்குடிப் பிறந்தார் மாண்பு இப்பெருமகனிடமும் மிகுந்திருந்தமையால்தான், பெண்கல்வி, பெண் விடுதலை என்பன வெல்லாம் வெறும் கனவு நிலையிலிருந்த அக்கால கட்டத்தில் அம் மையார் வலு சுயாதீனமாகச் சிந்திக்கவும் செயலாற்றவும் கூடிய சூழ்நிலையின் ஊன்றுகோலாக இருந்துள்ளார் என்பதை நாம் உய்த் துணர முடிகின்றது.

படகுகளில் கடல்பயணமும் தட்டி பஸ்களில் தரைப்பயணமுமாகப் போக்குவரத்துகள் மிகச் சிக்கலும் அருந்தலுமாக இருந்த அக்கால கட்டத்தில் விஞ்ஞான வளர்ச்சியும் பெரிதாக இடம்பெற்றிராமையால் தொடர்பாடல் மிகவும் குன்றியே இருந்தது. இன்றுபோல் தொலைபேசி, வானொலி வசதிகளற்றிருந்த காலங்களில் தபால் சேவையே பெரிதும் முக்கியமாகக் கருதப்பட்டிருந்தது. நெடுந்தீவு மக்கள் தம் சுற்று வட்டாரத் திற்கு வெளியேயும், ஏனைய இடங்களிலுமுள்ள உறவினர், நண்பர் களுடன் தபால் மூலம் தொடர்பு கொள்வதற்கும் வாய்ப்பாகத் தபால் நிலையங்கள் போன்றவற்றை அமைத்துக் கொடுப்பதிலும் கம்பி யில்லாத தந்திச் சேவையை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் மிகுந்த அக்கறை கொண்டு உழைத்து வெற்றியும் பெற்றார் அம்மையார்.

ஒவ்வொருவரும் தம்வீட்டு முற்றத்தைச் சுத்தப்படுத்தினால் முழுத்தேசமுமே சுத்தமாகிவிடும் என ஜாம்செற்றிஜீ ஜீஜீபாய் என்ற அறிஞர் கூறியது போல ஒவ்வொரு வீட்டுப்பெண்களும் செல்லம்மா அம்மையாருடைய சமூகநலத்தொண்டினை நன்குவிளங்கிக் கொண்டு தாமும் இந்நாட்டின் முன்னேற்றத்திற்காகச் சில தொண்டுகளையாவது மேற்கொள்ளத் துணிந்தால் நாம் ஏன் துரிதமான வளர்ச்சியை எட்ட முடியாது ?

இத்தகைய எழுச்சிமிக்க எண்ணங்களையெல்லாம் எம் மனதில் கிளறிவிட்ட வரலாற்றுப் பெருமை கொண்ட செல்லம்மா நாகேந்திரர் அம்மையார் எமது காலத்திலேயே வாழ்ந்து கடந்த 12.07.1989 ஆம் ஆண்டில் புகழுடம்பை எம்மிடம் விட்டு இயற்கையெய்தினார்.

6

# பண்டிதை பத்மாசனி அம்மாள்

## [1903 – 1978]

சாத்திரங்கள் பலபல கற்பராம்
சவுரி யங்கள் பலபல செய்வாராம்:
மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பராம்:
மூடக் கட்டுக்கள் யாவுந் தகர்ப்பராம்:
காத்து மானிடர் செய்கை யனைத்தையும்
கடவு ளர்க்கினி தாகச் சமைப்பராம்:
ஏத்தி ஆண்மக்கள் போற்றிட வாழ்வராம்

எனப் புதுமைப் பெண்களை வரவேற்றுப் போற்றியுள்ளார் புதுமைக் கவிஞன் பாரதி.

பாரதியினுடைய கனவில் கற்பனையில் உதித்த புதுமைப் பெண்ணைப்பற்றிய எண்ணத்திற்கேற்பவே சாத்திரங்கள் பலவற்றையும் கற்றுத்தேர்ந்து தன் குடும்பத்திற்கும் குலத்திற்கும் சமுதாயத்திற்குமான பல சவுரியங்களை ஏற்படுத்திக் கொடுப்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்த பண்டிதை பத்மாசனி அம்மாள், தாம் பெற்றுக் கொண்ட ஆன்மீக அறிவுத்திரட்சி அனைத்தையும் காத்து தான் பிறந்த ஊரான புலோலியூரில் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தின் மூலமூர்த்தியான பசுபதீஸ்வரர் பாதங்களில் பதிற்றுப்பத்தந்தாதியைச் சமர்ப்பித்துள்ளார். இளமையிலேயே இறை பக்தியும் சமயாசாரங்களை வழுவாது கடைப்பிடித்தும் ஒழுகிய பண்பாடும் மிக்க குடும்பச்சூழலில் பிறந்து வளர்ந்ததன் காரணமே இளம் வயதில் இத்தகைய பணியில் அம்மையார் தன்னை அர்ப்பணிக்க ஏதுவாக அமைந்தது.

நிலவளமும் நீர்வளமும் கல்விப் பண்பாட்டுச் செழுமையும் மிக்க புலோலியூர் பல கல்விமான்களும், புத்திஜீவிகளும், ஆன்மீகவாதி களும், கவிஞர்களும், புலவர்களும், இலக்கிய விற்பன்னர்களும், நியா துரந்தர்களும் எனப் பல்வேறு வகையில் புகழ்பூத்த பெரியார்கள் தோன்றிய ஊர் என்ற சிறப்புமிக்கது. புலோலியைச் சேர்ந்தவர்களே பண்டிதை பத்மாசனி அம்மாளின் பெற்றோரான நமசிவாயம், தங்க ரத்தினம் தம்பதியினர். கல்வி கேள்விகளில் சிறப்புற்றும் கடவுள் வழிபாடு சமயாசார ஒழுக்கங்களை இறுக்கமாக கடைப்பிடித்தும் வந்த இக்குடும்ப பாரம்பரியங்களிலே இதிகாச புராண சமயக் கோட்பாடு களையும், வழிமுறைகளையும் கற்றும் கற்பித்தும் வரும் பண்பாடு அன்று தொட்டே குடும்பச் சூழலில் நிலவிவந்தது. இவர்கள் இவற்றைத் தாய்மொழியான தமிழிலேயே கற்றுவிளங்கிக் கொண்டாலும் இடை யிடையே உபநிஷத புராணக் கதைகளோடு தொடர்பான சுலோகங்கள் வடமொழியில் அமைந்திருப்பதால் ஓரளவு வடமொழியையும் தெரிந்து கொண்டிருந்தனர்.

இன்று போலன்றி அக்காலத்தில் பெண்கள் வீட்டைவிட்டு வெளியே அதிகம் கிளம்பாமல் வீட்டிலேயே அடைபட்டிருந்தமையால் கூடுதலாகக் கிடைக்கக் கூடிய ஓய்வுநேரங்களை வீட்டை அலங்கரிப்ப தோடு கல்வி கேள்விகளிலும் கவனம் செலுத்தினர். ஆணைவிட ஒரு பெண் கல்விகற்றால் ஒரு சமுதாயமே கல்வி பெற்றதற்குச் சமம் என்பதற்கிணங்க ஒரு பெண்ணிடம் பாடம் கேட்க அவ் வட்டாரத்திலுள்ள அத்தனை பெண்களுமே ஒன்று திரள்வர். எனினும், ஒரு சிலருக்கே அக்கல்வி வாய்க்கப் பெறும். தனிப்பட்ட அவர்களது வசதிகளுக்கும் வாய்ப்புக்களுக்கும் உற்றார், உறவினரின் தூண்டுதலுக்கும் ஊக்கு விப்புக்கு மேற்பக் கல்வியில் அவர்களுடைய நிலை உருவாகும். காரணம் இன்றைய நிலைபோலன்றி அன்று ஒரு பெண்ணினுடைய வாழ்க்கை முற்றுமுழுதாகப் பெற்றோர், சகோதரர், பிள்ளைகள் ஆகியோரின் பாதுகாப்பிலும் ஆண்களுடைய எண்ணத்திலுமே அமைந்திருந்தது. இத்தகைய போக்கு சில குடும்பங்களில் சற்று நெகிழ்வாகவும் அமைந்திருக்கலாம். பெண் கல்வி மறுக்கப்பட்டிருந்த அக்காலத்தில் பெண்கள் ஸ்தாபன ரீதியான அமைப்புக்களுக்குப் போய்க் கல்வியைப் பெறாவிட்டாலும் தன்னிச்சையாகவே வீட்டி

லிருந்தும் அண்டை அயலவரிடமும் கேட்டும் படித்திருந்தனர். சில விடயங்களை அறிந்தும் இருந்தனர்.

கல்வி கேள்விகளில் பெரும் புலமையும் புகழும் மிக்க கல்விமான்களும் வடமொழி, தமிழ் என்பவற்றில் விற்பன்னரும் பலநூல்களை யாத்தவர்களுமான வ.கணபதிப்பிள்ளை, குமாரசுவாமிப்புலவர் என்போரின் உடன்பிறந்த சகோதரியானவர் பார்வதி அம்மையார். இவருடைய ஆரம்பக்கல்வி திண்ணைக்கல்வியாக அமைந்தும் மேற்கொண்டும் இவர் தமது சகோதரர்களைப் போலவே தமிழ், சமஸ்கிருதம் என இருமொழிகளிலும் வித்துவத்தைப் பெறுவதற்காக உடுப்பிட்டி சிவசம்புப்புலவரிடம் பாடங்கேட்டார்.

'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதற்கமையப் பார்வதி அம்மையார் தான் கற்றுத் தேர்ந்தவற்றைத் தனது மனதில் வெறும் நிழற் கோபுரங்களாக்கி எளிதில் மறையவிடாமல் தனது அனுபவங்களையும் கலாசாரத்துடன் இணைத்துத் தனது பேரக் குழந்தைகளான பத்மாசனி, பாலாம்பிகை என்ற இருவருக்கும் சொல்லிக் கொடுத்தார். பாட்டியாரிடம் தாம் பெற்றுக் கொண்ட கல்வியறிவின் வளத்தால் இவ்விருவருமே 'வடமொழியிலுள்ள வான்மீகி இராமாயணச் சுலோகங்களை வாசித்துத் தமிழில் விளக்கம் சொல்வதிலும் தொல்காப்பிய இலக்கணத்தை கதை சொல்வது போலக் கற்பிப்பதிலும் வல்லவர்களாக பத்மாசனி, பாலாம்பிகை ஆகிய இருவரும் காணப்பட்டனர்' என ம.பா. மகாலிங்கசிவம் ('ஈழத்தின் முதற்பெண் கவிஞரும் முதற் மொழி பெயர்ப்பாளருமான பண்டிதை பத்மாசனி அம்மாள்' என்ற கட்டு ரையிலே) குறிப்பிட்டுக் கூறியுள்ளார்.

கல்வி எட்டாக்கனியாக, இலகுவில் யாருமே பெற்றுக் கொள்ள முடியாத அருந்தனமாக இருந்த வேளையில், தான் பெற்ற கல்வியைத் தன்னோடுமாத்திரம் பொத்தி வைத்துக்கொள்ளாமல்.

> தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
> காமுறுவர் கற்றறிந் தார்

என்பவராகப் பண்டிதை பத்மாசனி அம்மையார் தான் பெற்ற கல்விச் செல்வத்தை பிறருக்கும் ஊட்டி மகிழ்ந்த பெருந்தகையாகத் திகழ்ந்தார்.

1903 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஆறாந் திகதி பிறந்த அம்மையார் மிக இளம் வயதிலேயே இலக்கண இலக்கியங்களையெல்லாம் தெளிந்து கற்றுத் தேர்ச்சி பெற்றார். தன் முன்னோரிடமிருந்து தான் பெற்ற இறைவழிபாட்டையும் கல்வி அறிவையும் தன்னோடு மாத்திரம் ஒட்டவைத்துக் கொள்ளாமல் பிறரும் தரிசித்து அனுபவிக்கக்கூடிய விதத்தில் இதுவரை இங்கொன்றும் அங்கொன்றுமாகக் கற்றறிந்த வெகுசில பெண்கள் கூட முயற்சிக்கத் துணியாத புதிய பிரதேசத்தில் நுழைந்து தன்திறமையைப் பதிவு செய்துள்ளார். ‘கல்வியில் கம்பன்’ என்பதுபோல் பைந்தமிழிலே பண்டிதைப் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட பத்மாசனி அம்மாள் தான் இறைவன் மீது கொண்டுள்ள பெரும்பக்தி காரணமாக தன் மன உணர்வுகளை உள்ளீடாக்கி எல்லாம் வல்ல பரப்பிரம்மமான பசுபதீஸ்வரரின் அருட்கொடையின் அற் புதத்தைப் பாடல்களாக மலரச் செய்தார். திருக்கடவூரில் கோயில் கொண்டிருந்த அம்பாள் மீது அபிராமிபட்டர் பாடிய அபிராமி அந்தாதி போல பாடலின் இறுதிவரியின் அந்தத்தில் வரும் சொல்லை அடுத்து வரும் பாடலின் தொடக்கமாக வைத்து காப்புச் செய்யுளோடு 101 அந்தாதிப் பாடல்களை இயற்றிப் பாடிப் பரவினார். இப்பாடல்களின் உட்பொருளாக இறைவனுடைய கருணைமிகுந்த அருளும், அத்தகைய பெருமைமிக்க ஈஸ்வரன் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தின் பெரு மையும் இவ்வாலயம் அமைந்துள்ள சுற்றாடலும் எழில்மிக்க நகரமான புலோலியின் புகலரு நாட்டுச் சிறப்பையும் பொழிந்து தந்துள்ளார்.

‘புலோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத் தந்தாதி’ என்ற நூலை ஆக்கித் தந்தமையால் பண்டிதை பத்மசானி அம்மாளே சீர், தளை, எதுகை, மோனை, யாப்பு, அணி என்ற செய்யுளியற்றுலுக்குரிய இலக்கண விதிப்படி நின்று பாடல்கள் யாத்த ஈழத்தின் முதற்பெண் கவிஞர் என அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளார்.

பாடல்கள் இயற்றுவதில் மாத்திரமல்ல நல்ல கருத்தாழம் மிக்க கட்டுரைகள் எழுதுவதிலும் ஓலைச்சுவடியில் இருந்த செய்யுட்களை நூல்வடிவில் வெளிக்கொணர்வதிலும் ஈடுபட்டிருந்த அம்மையாரின் பொறுப்புகள் பாராட்டிற்குரியவை, விதந்து போற்றுதலுக்குரியவை.

பல அருள்வாக்குகளை நல்கிய யோகர் சுவாமிகள் மீதும் அம்மையார் பெரும் பக்தி பூண்டிருந்தார்.

அநேகமான பெண்கள் தாம் கற்றிருந்தாலும் தானுண்டு தன் குழந்தை, கணவன் குடும்பமுண்டு என்றளவில் தம்மைச் சுருக்கிக் கொள்வர். ஆனால், பண்டிதை பத்மாசனி அம்மாள் பொதுவாழ்வில் சமுதாய அக்கறைமிக்கவராக இருந்தார் என்பதை முன்னர் குறிப் பிட்டுள்ள ம.பா.மகாலிங்கசிவம் அவர்களுடைய கட்டுரையில் ‘எங்கள் குருமணி யோகசுவாமிகளின் பெருங்கருணைத் திறத்தால் அடி யேனுக்குக் கிடைத்துள்ள திருவருட் பிரசாதத்தின் மகிமையை மற்றவர்களும் அறிந்து நன்மை பெற வேண்டும் என்னும் நன்நோக் கால் இதனை எழுதத் துணிந்தேன்’ என்ற அம்மையாரின் வரிகளையும் ‘இது செய்யுளுக்குரிய பத்துவகைப் பொருத்தத்தை உணர்த்துகின்றது. பழந்தமிழ் நூல்கள் செல்வாய்ப்பட்டழிந்து போகாமல் அவைகளைப் போற்ற வேண்டுமெனும் நோக்கங்கொண்டுள்ளேன். ஆதலில் ஒரு பழைய ஏட்டுப் பிரதியிலிருந்த இந்நூலை என் சிற்றறிவுக் கெட்டிய வரை ஆராய்ந்து வெளியிடுகிறேன்’ என்ற வரிகளையும் நேரடியாகவே எடுத்தாண்டுள்ளமையை இங்கு தருகின்றேன். இவையெல்லாம் அம்மையாருடைய கல்வி ஆற்றலோடு கூடிய பரந்துவிரிந்த நன் நோக்கத்தையும் மக்கள் மீதுள்ள அபிமானத்தையும் துல்லியமாகத் தெரிவிக்கின்றதன்றோ?

தமிழ், வடமொழி ஆகிய மொழிகளில் மட்டுமன்றி ஆங்கில மொழிப் புலமையும் மிக்கவராக அம்மையார் திகழந்துள்ளார் என்பதை “Elergy Written in a Country Churchyard” என்ற கவிதை நூலைத் தமிழில் மொழிபெயர்த்திருப்பதன் மூலம் அறிகின்றோம். கவிதையை மொழி பெயர்ப்புச் செய்வதற்கு ஆழமாக இலக்கியப் புலமையும் இரு மொழி வளமும் மிக மிக அவசியம். எனவே, அம்மையாருடைய அறிவுப் பரப்பும் முயற்சியும் வெகு பாராட்டுக்குரியதென்றே கூறலாம்.

தனது ஊரைச் சேர்ந்த இராசேந்திரா என்பவரை தன் வாழ்க்கைத் துணைவனாக ஏற்றுக் கொண்ட பண்டிதை பத்மாசனி அம்மாள் இரவீந்திரன், இந்துமதி என ஆணொன்றும் பெண்ணொன்றுமாக இரு குழந்தைகளைப் பெற்றெடுத்தார். மகன் இரவீந்திரன் அவுஸ்ரேலியாவில் மருத்துவராகப் பணிபுரிவதாக அறிகிறோம். அம்மையார் தனது வாழ்வின் பவளவிழாக்காணும் வயதான 75 இல் 1978 ஆம் ஆண்டு ஒக்டோபர் பதினொராந்திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார். பெண்ணி னத்திற்கே பெருமை சேர்க்கும் இவர் பணிகள் என்றென்றும் பாராட்டுக் குரியவை.

7

## இராசம்மா கனகசபை
## [1904 – 1992]

'இராசம்மா' என்பது இவரது சொந்தப் பெயராக இருந்தாலும், 'இரா சக்கா' என்ற இந்த செல்லப் பெயரில் இவர் மிகப் பிரபலமாகியிருந்தார். சின்னஞ்சிறுபாலகர் குழந்தைகள் மாத்திரம் அன்பு பொழியப் பெரியம்மா என்றே அழைத்தாலும் ஏனைய முதியோர், பெரியோர், கல்வியாளர், அரசியல்வாதிகள் என யாவருக்குமே இராசம்மா, இராசக்காவேதான். அந்தளவு தூரம் எல்லோர் மனதிலும் பாசத்தாலும் நேசத்தாலும் நிறைந்திருந்தவர் எங்கள் பெரியம்மா.

யாழ் நகருக்குப் பெருமை சேர்க்கும் தீவுகளில் நயினாதீவு திலகம் போன்றது. நயினையில் நாகம்மாள் கோவில் கொண்டிருக்கும் மகிமை மாத்திரமன்றி அங்கு வாழும் மக்கள் சைவப்பற்று மிக்கவர்களாகவும் பாரம்பரிய மரபுகளை ஒழுங்காகக் கடைப்பிடித்துப் பேணும் பண்பு மிக்கவர்களாகவும் வாழும் பண்பாட்டுச் செழுமை அங்கு மண்டிக் கிடப்பதையும் காணலாம். ஒழுக்கசீலர்களாகவும் ஆசாரம் மிக்கவர் களாகவும் வாழும் அம்மக்களில் பெரும்பாலானோர் இறைபக்தி, அன்பு, கருணை, காருண்யம், ஒற்றுமை, விருந்தோம்பல் என்பவற் றையும் தம்மாலியன்றவரை கடைப்பிடித்து வாழும் தன்மை மிக்க வர்கள்.

நயினையில் பிறந்த இவர் பல ஆண்டுகளுக்கு முன்பு இத்தரைப் பாதை கண்டிராத கடல் பாதையிலே பயணித்து யாழ்ப்பாணப் பட்டணம் வந்தார். முற்றுமுழுதாகப் பெண் கல்வி மறுக்கப்பட்டிருந்த



இராசம்மா கனகசபை

காலத்திலேயே தந்தையார் கந்தப்புவின் ஆசீர்வாதத்தோடும் தனது ஆர்வத்தினாலும் கல்விகற்றார்; அறிவைப் பெருக்கினார்; சிறந்த ஆளுமையை உருவாக்கிக் கொண்டார். சேர்.பொன்.இராமநாதன் பெரியார் ஆற்றிய புண்ணியத்தால் மருதனார் மடத்தில் உருவான இராமநாதன் கல்லூரி பல பெண்களுக்குக் கல்விக் கண்களைத் திறந்துவிட்டது. அவர்களுள் கல்வி மாத்திரமன்றி, அன்பு, கருணை, மனித நேயம் யாவரையும் பாசத்தோடும் நேசத்தோடும் அணைத்துச் செல்லும் பண்பு என்பனவும் மிக்கவராக இராசம்மா விளங்கினார்.

அன்றைய சமுதாய ஒழுக்கத்தின்படி ஒரு பெண் ‘எண்ணும் எழுத்தும்’ அறிந்து குடும்பத்திற்கு ஒளிநல்கும் விளக்காக பால் கணக்கும், சலவைக்கணக்கும் பார்க்கத் தெரிந்தாலே போதுமென்ற நிலையில் இராசம்மா அவர்களுக்கு திருமண ஏற்பாட்டைத் தந்தையார் மேற்கொண்டார். கனகசபை என்பவர் இராசம்மாவைத் திருமணம் செய்து கொண்டு, தன்னோடு இவரைச் சிங்கப்பூருக்கே அழைத்துக் கொண்டார். அம்மையாரின் கணவர் கனகசபையும் விசாலித்த பெருமனங் கொண்ட பண்பாளர்.

இத்தம்பதியின் மகிழ்ச்சிகரமான மணவாழ்க்கையிலே 3 மகன் களையும் ஒரு மகளையும் இவர் பெற்றெடுத்தார்.

எதிர்பாராதவிதமாகக் இவரது கணவர் கனகசபை சாலை விபத்தொன்றில் சிக்கி உயிரிழந்ததால் 4 குழந்தைகளோடும் கனத்த இதயத்தோடும் இலங்கை வந்த இராசம்மா யாழ் நல்லூரிலே கந்தன் நீழலில் தஞ்சமடைந்தார். அன்றைய புகையிரதப் பகுதியில் மிக உயர்ந்த பதவியை வகித்த சமயப் பெரியார் க.இராமச்சந்திரா இவரது சகோதரியொருவரின் துணைவர். இராமச்சந்திரா அரவிந்தர், ரமணர் போன்ற ஞானிகள் யோகிகளோடு நெருங்கிய உறவு கொண்டவர். பித்துக்குளி முருகதாஸ் அவர்களை இலங்கைக்கு அழைத்துப் பக்திப் பாடல்களைப் பாட வைத்து மக்களைப் பக்திப் பிரவாகத்தில் ஆழ்த்திய பெருமைக்கும் உரியவர். இவர் போன்றோருடைய வழிகாட்டலில், பெரியோருடைய ஆதரவு, துணை என்பன இராசம்மாவுக்கு ஆறுதலைக் கொடுத்தது. பிள்ளைகள் நால்வரும் நன்கு கல்வி கற்றுத் தேறினர்.

பெண்கள் துணைவன் இழந்து குடும்பத்தைச் சரியாக நிர்வகிக்க முடியாமல் அல்லாடும் போது அவர்கள் கற்றகல்வியே உதவும் என்பதன்படி இராசம்மாவும் மேல்மாகாணக் கவர்னராகவிருந்த பிரபல சட்டநிபுணர் டி.எம்.சுவாமிநாதனின் தந்தையார் திரு எம். சுவாமிநாதனின் முகாமையில் இருந்த நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் உதவியாசிரி யராக நியமனம் பெற்றுத் தலைமையாசிரியை நிலைக்கு உயர்ந்தார்.

நல்லூரிலுள்ள இப்பெண் பாடசாலை சுவாமிநாதனின் தாயாரான மங்கையர்க்கரசியின் பெயரிலே அவர் நினைவாக ஸ்தாபிக் கப்பட்ட பெண்களுக்கான பாடசாலை. முன்னர் இது பிராமணப் பள்ளிக் கூடமாக இயங்கியது. இப்பெண்கள் பாடசாலை காலத்தால் இராமநாதன் கல்லூரிக்கும் முற்பட்டது.

எல்லோருடனும் மகிழ்ச்சி பொங்கச் சிரித்து வரவேற்கும் முகம், அறிவு பளிச்சிடும் கண்கள், அன்பும் அரவணைப்பும் கூடிய இதமான வார்த்தைகள், துன்பமுறுவோருக்குத் தானாகவே துணிந்து முன்வந்து ஆறுதல் கூறி அணைக்கும் கரங்கள், உலகைப் பற்றிய பழுத்த அனுபவம், சாதுரியம் ததும்பும் பேச்சும் செயல்களும், முதல் சந்திப் பிலேயே மனிதரை அளவிட்டு நினைவில் இருத்திவைக்கும் ஞாபகம், திட்டவட்டமான தெளிவான பேச்சு இவையெல்லாவற்றின் திரட்சிதான் இராசக்கா.

பி.ஏ., எம்.ஏ., பி.எச்.டி. எனக் கல்வியில் பெரிதான பயிற்சியோ அறிவோ அநுபவமோ அற்று, சந்தர்ப்பம் சூழ்நிலையால் ஆசிரியராகிப் பட்டறிவையும், பக்தி இலக்கியங்களையும் இராமாயண, பாரத, சங்க இலக்கியங்களையும் தேடி வாசித்துத் தனது ஆளுமையை நிறைவு செய்து கொண்டார். அதனால் பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் திறன் இவருக்குக் கைவந்த கலையாக மிளிர்ந்தது. சுவாமி சிவானந்தர், திருவிளங்கம் ஐயா, யோகர் சுவாமிகள் போன்றோருடைய தொடர்பு, பெரியார்களுடைய நட்பும் ஆதரவும், தானாகவே கற்றுக் கொள்ளும் திருக்குறள், பாரதிபாடல், நாலடியார், திருமந்திரம், மூதுரை, நல்வழி என்பனவெல்லாம் ஆசிரியரை அறிவும் ஆற்றலும் சேவைப் பண்பும் மிக்க ஒரு சிறந்த தலைமையாசிரியராக, ஒரு வழிகாட்டியாக இனம் காட்டின. இவருடைய முயற்சியால் மங்கையர்க்கரசி வித்தியாசாலை அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டது.

சுற்றாடலில் சிறப்பாக அரசடியில் வாழ்ந்த பிற்படுத்தப்பட்ட மக்களையெல்லாம் கூட பாடசாலையில் அனுமதித்து எல்லோருக்குமே கல்வி வழங்குவதில் பாரபட்சம் காட்டாத முற்போக்கு எண்ணம் கொண்ட தலைமையாசிரியையாக விளங்கினார். மூடப்பழக்க வழக்கங்கள், பிற்போக்குச் சிந்தனைகள் என்பவற்றை உடைத்தெறிந்த முற்போக்குவாதி இவர். அறிவுத்தாகம் நிறைந்த இவர் கற்றோர் சூழலில் நல்லோர் உறவுடன் சிறந்த அறிஞரின் நூல்களே இவரோடு பேசத் தொடங்கிவிட்டதால், அவரது வயதோடொத்த பெண்களைப் போலன்றி வாசிப்பதிலும், விவாதிப்பதிலும், அறிவுத் தேடலிலும் ஈடிணையற்று விளங்கினார். என்ன சந்தேகமோ, துன்பமோ, இடர்ப் பாடுகளோ ஏற்படும் போதெல்லாம் இராசக்காவிடம் போனால் ஒரு வழி சொல்லுவா என்று நம்பி இவரைச் சந்திப்போர் அநேகர். இளை யோரும் பாடசாலைச் சிறுவரும் 'பெரியம்மா' என்றே இவரை உரி மையுடன் அழைப்பர்.

கணவனை இழந்த விதவைகள் மங்கலமான காரியத்திற்கு வருவதை ஒதுக்கிவைத்த காலத்திலேயே எந்த மங்கலகரமான விட யத்திற்கும், ஆரம்பத்திற்கும் முன் நிற்பவராக வாழ்த்துத் தெரிவிப்பவராக இராசக்கா இருப்பார். காரணம் மக்களின் நேசிப்பு அவரை ஒரு அன்புருவமாகவே ஏற்றுக் கொண்டது. இவர் கலியாணம் பேசி முடித்து வைத்த திருமணங்களோ ஏராளம்! ஏராளம்!! இவர் அத்தி வாரமிட்டுக்

கட்டப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் பல. பிணக்குகளைத் தீர்த்து வைப் பதில், பிரிந்தோரைச் சேர்த்து வைப்பதில் சமர்த்தரான இவர் சமூகத்தில் நிலவும் பல பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண்பதில் முன்னணி வகிப்பார். கொதிக்கும் நெஞ்சை குளிர் மொழிபேசியும் கோபமுறுவோரைச் சாந்தப்படுத்தியும் ஆற்றும் வல்லமை மிக்கவர். மனித நேசிப்பும் பிறர்துன்ப துயரங்களை விளங்கிக் கொண்டு அவர்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் அதற்கான வழிகளைக் காணும் உபாயங்களை மிக இலகுவில் கண்டு சொல்லுவார். எல்லோரையும் தன் வழியில் கட்டிப்போடும் திறமை அவருக்குக் கைவந்த கலை. இதனால் இவர் பலருடைய மனதிலும் உட்கார்ந்திருப்பதை யாராலும் தடுக்க முடியாது.

கதியற்ற ஏழைப் பெண்களுக்கு சிக்கனம், சிறுசிறு சேமிப்பு, சீட்டுப் போடுதல் போன்றவற்றை அறிமுகப்படுத்தி பொருளாதாரத்தில் மோதும் வாழ்க்கைச் சிக்கல்களை போக்குவிக்க உதவி செய்வார். தேவார திருவாசகங்களோடு பக்திப்பாடல்களையும் இசைத்து இறைவனை வழிபாடு செய்யும் இவருக்கு நல்லூர்க் கந்தன் மீதும், நயினை நாகம்மாள் ஆச்சி மீதும் மிகுந்த ஈடுபாடு உண்டு.

பிறர் பிள்ளை தலை தடவத் தன் பிள்ளை தான் வளரும் என்ற கிராமிய சொல்லடைக்கேற்ப ஏனையோருக்கு இவர் செய்த உதவி இவரது நான்கு பிள்ளைகளையும் சிறப்பாக்கியது. மிக உயர்ந்த பதவிகளை அவர்கள் வகித்து பேரப்பிள்ளைகள் சகிதம் நன்றாகவே வாழ்ந்து வருகின்றனர்.

பொலிஸ் பிரதிமா அதிபராயிருந்த இ.சுந்தரலிங்கம் இவரது ஒரு சகோதரியாரின் மகன். இவரது இளையசகோதரி செல்வி சௌந்தரம் சந்தனநங்கை கந்தப்பு என்பவர் கோப்பாய் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நீண்டகாலம் விரிவுரையாளராகப் பணிபுரிந்தவர்.

12.05.1904 ல் நயினையில் பிறந்த இராசம்மா அவர்கள் கொழும்பில் 1.10.1992 ஆம் ஆண்டு இயற்கையெய்தினார்.

8

# கண்மணி ஸ்ரீஸ்கந்தராஜா
## [1909 – ? ]

இலங்கையை திருமூலர் சிவபூமி என சிறப்பித்துக் கூறியமைக்கான பல காரணங்களுள், அங்கு வாழும் பெண்களின் இறைபக்தியும் கோவிலும் அங்குள்ள விக்கிரகங்களும் புடைசூழும் பக்தர்களும் போலக் குடும்பத்தையும் குழந்தைகளையும் உறவினர்களையும் பேணிக் காத்த பெண்களின் பெருமையும் காரணங்களாக இருக்கலாமென எண்ணத்தோன்றுகிறது. அத்தகைய மரபிலே பிறந்து மிகவும் பக்தியான வாழ்க்கை வாழ்ந்து குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் பல சேவைகளைச் செய்த சிறப்பைக் கொண்டவர் கண்மணி ஸ்ரீஸ்கந்தராஜா.

இவர் 1909 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலே தொண்டமானாறு என்ற இடத்திலே உள்ள செல்வச் சந்நிதியில் முருகுப்பிள்ளை விஸ்வலிங்கம் என்பவருக்கும் தங்கம்மா என்ற பெண்மணிக்கும் குழந்தையாக பிறந்தார். இவர் பிறந்து 20 வருட இடைவெளிக்குப் பின் இவருக்கொரு தம்பியும் பிறந்தார். பெற்றோர் இரு குழந்தைகளையும் கண்போல வளர்த்தனர்.

பெண்கள் அதிகமாகக் கல்வி கற்பதை விரும்பாத அக்காலத்திலும் மிஷனரிமாரின் கல்வி நிர்வாக ஒழுங்கினால் இவர் அமெரிக்கா மிஷன் தமிழ்ப்பாடசாலையிலும் பின்னர் உடுப்பிட்டி மிஷன் ஆங்கிலக் கலவன் பாடசாயையிலும் கல்வி கற்றார். ஏனைய பெண்கள் மதம்மாறிக் கிறிஸ்தவப் பெண்களாகிக் கற்கவும் இவர் ஒருவரே இந்துப் பெண்ணாக உடனிருந்த அந்தப் 10 பெண்கள் கொண்ட குழுவில் இருந்தார். பின்னர் உடுவில் பெண்கள் கல்லூரியில் தன் கல்வியைத் தொடர்ந்து

கொண்டிருந்தபோது, சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் நிர்மாணப் பணிகள் நிறைவுபெற, தனது சமயம், சைவச்சூழல் என்பவற்றை யெல்லாம் மேலும் வளர்த்துக்கொள்ளும் நோக்கில் இராமநாதன் கல்லூரியில் சேர்ந்தார்.

அங்கே நிலவிய சைவப் பழக்கவழக்கங்கள் நடைமுறைகள் என்பன மனதிற்கு இதமாகவும் சிவபக்தியை மேலும் தூண்டுவதாகவும் சைவ பாரம்பரியத்தை நன்கு விளங்கிக் கொள்ளும் மையமாகவும் அமைந்திருந்ததால் மேலும் ஆர்வத்தோடு கற்றார். இவரது முறை மைத்துனியான இராணி என்பவரும் இவரது வகுப்பில் இணைந்து கொண்டது, இவருக்குத் துணையாக அமைந்தது. இவையெல்லாம் கண்மணி கல்வியில் முதலிடம் வகிக்கவும் இசையையும் அதற் கிசைந்த வாத்தியமாக வயலினையும் விரும்பிக் கற்று முதல் மாணவி யாகத் திகழவும் உதவின. வகுப்பிலே விவேகம்மிக்க மாணவியாகப் பிரகாசித்த இவரை ஆசிரியர்களும் ஊக்குவிக்க எதிர்காலத்தில் தான் ஒரு வைத்தியராகத் தேற வேண்டுமெனவே கனவு கண்டார்.

பருவ வயதிலே பலகனவுகளோடு வெடித்துக் கிளம்பி வெளிவரும் அநேகமான பெண்களுக்கு ஏற்படும் இயற்கை விதி இவரையும் விட்டுவைக்கவில்லை. பெற்றோர், உற்றார், உறவினர் யாவரும் இணைந்து பெண்ணைத் திருமண பந்தத்துள் இணைக்கவே இவர் கல்லூரியினின்று விலகி ஸ்ரீஸ்கந்தராஜா என்பவரை 1926 இல் திரு மணம் செய்தார்.

குடும்ப வாழ்க்கையைச் சுகமான சுமையாக ஏற்றுக் கொண்ட கண்மணி சும்மா இருக்கவில்லை. அவரது இயல்பான சுறுசுறுப்புமிக்க சுபாவம். இராமநாதன் கல்லூரிப் படிப்பு போட்டுக் கொடுத்த அடித் தளம் என்பனவும் இணைந்து உற்சாகமாக உழைக்கத் தூண்டியது. சாடிக்கேற்ற மூடி போல அவருக்கு வாய்த்த கணவரும் சமய ஈடு பாட்டிலும் பொது நலப்பணிகளிலும் ஆர்வமுள்ளவராக இருந்ததால் இவர்களது இணைவு ஒரு சிறந்த இலட்சிய வாழ்க்கை வாழ வழி சமைத்துக் கொடுத்தது. பலவேலைச் சுமைகளின் மத்தியிலும் நேரத்தை ஒழுங்குசெய்து சங்க இலக்கிய நூல்கள், இதிகாச புராணச் செய்திகள், திருவாசகம், திருக்குறள் என்பவற்றையெல்லாம் தானாகவே ஆர்வத் தோடு படித்தார். புராண இதிகாசப் பெண்மணிகளான சீதை, தமையந்தி, சாவித்திரி, திலகவதியார், மங்கையர்க்கரசியார் போன்ற பெண்மணி



கண்மணி ஸ்ரீஸ்கந்தராஜா

களின் முன்மாதிரிகளையே தனது வாழ்வின் வழிகாட்டு நர்களாக ஏற்றுக் கொண்டார். வாசிப்பின் மூலம் தனது அறிவாற்றலை விருத்தி செய்து கொண்டார்.

புகழ்பூத்த நீதியரசராகப் பிற்காலத்தில் விளங்கிய இவரது துணைவர் பொ.ஸ்ரீஸ்கந்தராஜா தனது பட்டப்படிப்பை முடித்து யாழ்ப்பாணக் கல்லூரியிலும் கொழும்பு வெஸ்லிக் கல்லூரியிலும் ஆசிரியராயிருந்த பின்னர் சட்டக் கல்லூரியில் கற்று வழக்குரைஞராகப் பணியாற்றிய போது இவருடன் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் ஒரு சேரத் தொழிலாற்றினார்.

தானே காரோட்டிக் குழந்தைகளைப் பாடசாலைக்கு ஏற்றி இறக்குவதும் தமது குடும்பத்துக்குத் தேவையான துணிமணிகள், உடைகளைத்தானே தைத்துக் கொள்வதும், சிறு சிறு ஆயுதங்களைப் பயன்படுத்தி வீட்டுத் தேவைக்கான தச்சுவேலைகளைக் கூடத் தானே மேற் கொள்வதும், கணவரது உத்தியோகப் பணிகளிலும் பிரத்தியேகச் செய லாளராகத் தானே அமர்ந்து கடிதத் தொடர்புகளை மேற்கொள்வதும் தட்டச்சில் கடிதங்களைப் பொறிப்பதும் என எல்லாவற்றையும் தானே செய்து முடிப்பார்.

ஒவ்வொரு ஞாயிறும் கணவரையும் குழந்தைகளையும் உட்கார வைத்து பெரிய புராணக் கதைகளிலிருந்து ஒவ்வொரு கதையாகச் சொல்லுவார். இப்படி வீட்டில் தொடங்கிய பழக்கத்தால் ஞாயிறு சமயப் போதனைகளை 1945 இல் மாத்தறை, மட்டக்களப்பு, திருகோணமலை என இவர்கள் வாழ்ந்த இடங்களில் தொடக்கியதுடன் இந்துசமய வகுப்புகளையும் இந்து சபைகளையும் பொது மக்களுக்கும் சிறுவர்களுக்குமாகவும் தொடக்கி வைத்தனர்.

செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் சுற்றாடலே இத்தம்பதியின் பிறப்பிடமாக அமைந்ததனாலோ என்னவோ இருவருமே முருக பக்தியில் நன்கு திளைத்தவர்கள். வருடந் தவறாமல் சந்நிதி முருகன் திருவிழாவுக்குச் சென்று விரதமனுஷ்டித்து வழிபடுவர். 1934 தொடக்கம் சந்நிதி முருகன் ஆலயத்தில் கந்தசஷ்டி விரதத்தைக் கடைப்பிடித்ததோடு, அம்மையார் கந்தபுராணம் படித்து பயன் சொல்வதும் உண்டு. ஏனைய ஆலயங்களில் இக்கந்தபுராணப் படிப்பு நாவலர் காலந்தொட்டு நடத்தப்பட்டு வந்தாலும் ஒரு பெண்மணி உபவாசமிருந்து ஆழ்ந்த பக்திபூர்வமாக மக்களையும் அத்துறைக்கு இட்டுச்சென்ற பெருமை அம்மையாரின் தனிச்சிறப்பையே எடுத்துக் காட்டுகிறது.

கதிர்காமக் கந்தனின் உற்சவத்தின் போதும், பக்தி சிரத்தையோடு விரதமிருந்து திசமகரகமவிலிருந்து அங்கேயிருந்த நீர்நிலையில் நீராடி கால்நடையாகவே கதிர்காமம் சென்று வழிபடுவது இவர்களது வழக்கமாகும்.

முருகன் அருளால் தமது வாழ்க்கையில் பல அற்புதங்கள் நிகழ்ந் துள்ளதாக அம்மையார் குறிப்பிடுவார். ஒரு தடவை மாத்தறைப் பகுதியிலுள்ள மலையொன்றின் மீது காரில் இவர்கள் பயணித்துக் கொண்டிருந்தவேளை வண்டி பின்நோக்கிச் சறுக்கிவரத் தொடங்கியதும் எல்லோரும் பயந்து கதற, அம்மையார் "கதிர்வேலா வேலா" எனச் சத்தமிடவும் அங்கிலிருந்த தென்னை மரமொன்றில் வண்டி சிக்கி நிற்க, பொது மக்கள் விரைந்து வந்து காப்பாற்றினார்களாம். இப்படிப் பல சம்பவங்கள் அவனருளால் தமக்கு நிகழ்ந்ததாக அவர் பயபக்தி யோடு குறிப்பிடுவார்.

சேர்.கந்தையா வைத்தியநாதன் 1947 வரையில் தொடக்கிவைத்த இந்துக் காங்கிரசுக்கு அத்திபாரமிட்ட பெருமை இத்தம்பதிகளுக்கே உரியது.

1951 இல் அறிஞர் தனிநாயகம் அடிகளாருடன் இணைந்து தமிழ்க் கலாசார சங்கம் என்ற அமைப்பை ஏற்படுத்த இருவரும் ஓயாது உழைத்தனர். கொ/உருத்திராமாவத்தையில் தற்போது இயங்கும் தமிழ்ச்சங்க இடத்திலேயே இச்சங்கத்தின் ஆரம்பக்கூட்டம் இடம் பெற்றது.

கொ/கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தின் காப்பாள ராக இவரது துணைவர் பொறுப்பிலிருந்தபோது இவர் அச்சங்கத்தி னூடாகப் பல உறுப்பினரைச் சேர்த்து சமய அறிவைப் புகட்டுவதிலும் ஒழுக்க ஆசாரங்களைக் கடைப்பிடிப்பதிலும் உற்சாகமாகத் தொழிற் பட்டார். பல வகையான சமய சமூகப் பணிகளை இவர் மேற்கொண்ட தால் சங்கம் உன்னத நிலையடைந்தது. இவருக்கு நான்கு குழந்தைகள். இரண்டாவது புதல்வி டாக்டர் இந்திரா சிவயோகம் பல வருடங்களாக இச்சங்கத்தின் தலைவியாக இருந்து நல்வழிகாட்டினார். தமிழ் நாட்டி லிருந்தும் உள்ளூரிலிருந்தும் ஏராளமான அறிஞர்கள் வந்து உரை யாற்றி, பண்ணிசை பொழிந்ததோடு மாணவர் மத்தியிலே காலங் காலமாக சமய அறிவுப்போட்டி, பேச்சுப் போட்டி, தேவாரப் போட்டி எனப் பலவற்றை நிகழ்த்தி சமய எழுச்சிபெறச் செய்தார். இத்தகைய பணிகளில் இவர்களின் குடும்பம் முழுவதுமே அர்ப்பணிப்புடன் உழைத்தது.

உள்ளூர் சமய நிகழ்ச்சிகள், திருவிழாக்களில் பங்கு கொள்வது மாத்திரமன்றி, வெளியூரிலுள்ள தலங்களுக்குச் சென்று தரிசனம் செய்வதுடன் சொற்பொழிவுகளும் நிகழ்த்தியுள்ளார்.

எமது நாட்டிலிருந்து சமயச் சொற்பொழிவுக்காக வெளிநாடு சென்ற தங்கம்மா அப்பாக்குட்டி, வசந்தா வைத்தியநாதன் போல இவரும் வெளிநாடுகளில் சமயச் சொற்பொழிவாற்றிப் பாராட்டும் கௌரவமும் பெற்றுள்ளார்.

விருது நகரிலே நடைபெற்ற சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 49ஆவது மாநாட்டிலே 1954 இல் அம்மையாரும் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளார். தொடர்ந்து சென்னை இந்துமாமன்றங்களிலும் இவரது சொற்பொழிவுகள் நிகழ்ந்துள்ளன.

இப்படிப் பலவாறாக உற்றார், உறவினர், பேரக்குழந்கைகள் எனப் பலருக்கும் உதவியும் உபதேசித்தும் சிறந்தவழிகாட்டியாக இருந்த இவரைப் பற்றி இவரது கணவன் தன் நாட்குறிப்பில் கண்மணி எப் பொழுதும் தான் தைரியத்தின் கோட்டை என்பதை நிரூபித்துள்ளார். கடவுள் நம்பிக்கையும் எவ்வித சூழ்நிலையிலும் அவர்மேற்கொண்ட பொறுமைத் தன்மையுமே அவரது தைரியத்தின் இரகசியமாகும். பிள்ளைகள் நால்வரினது தொழில்களையும் ஒழுக்கங்களையும் அவரே சரிப்படுத்தினார்". இவ்வாறு நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜா எழுதியுள்ளார். நீதியரசரின் இந்த வார்த்தைகளே அம்மையாரை நம் கண்முன் படம் பிடித்துக் காட்டுகிறது.

அம்மையார் கணவன் மரணித்த 9 ஆம் நாள் மனவேதனை தாங்காது இயற்கை யெய்தினார். இவரது மரணத்தைப் பற்றித் தமிழறிஞர் திருநெல்வேலி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை "பாண்டிய மன்னனைத் தொடர்ந்து பாண்டிமாதேவியைப் போல், தங்கொழு நற்றொழுகு, உடன்சென்று பெண்மையை விளக்கம் செய்துவிட்டார்". என குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

9

# இரத்தினா நவரத்தினம்
## [1910 – 1993]

பல சிறப்புக்கள் மலிந்த பூமி யாழ்ப்பாணம். அங்கே சைவ சித்தாந்த தத்துவங்களும் அதனோடு ஒட்டிய பழக்கவழக்கங்களும் ஆழமாக வேரூன்றிக் கொண்டுள்ளன. இதற்குக் காரணம் யோகசுவாமிகள், செல்லப்பா சுவாமிகள் போன்ற சித்தர்களது அருட்கடாட்சமாகும். இத்தகைய சித்தர்களின் அருட்பொலிவில் தீவிரபக்தியும் நம்பிக்கையும் கொண்டு ஒளிகண்டு மகிழ்ந்த குடும்பங்கள் ஏராளம்! ஏராளம்!! அத்தகைய குடும்பமொன்றைச் சேர்ந்தவர் சுண்டிக்குளியில் வாழ்ந்த திரு.செல்லையா என்பவர். இவருடைய தந்தையார் யோகசுவாமி களிடம் கொண்டிருந்த இடையறாத பக்தியினால் அம்மகானுடைய சுவாசக் காற்றில்-சூழலில் வாழவேண்டுமெனப் பெரிதும் விரும்பிச் சுவாமிகளிருக்கும் ஆசிரமத்திற்கருகாமையில் கொழும்புத்துறை யிலேயே தமது வசிப்பிடத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

செல்லையா கற்பகம் தம்பதிக்கு ஐந்தாவது குழந்தையாகப் பிறந்த பஞ்ச 'ரத்தினம்' தான் இரத்தினா என்ற பெயர்பூண்ட ஆழ்ந்த ஆன்மிக அறிவும் ஆற்றலும் மிக்கவராக விளங்கிய, பெண்களுக்கெல்லாம் திலகம் போன்ற மங்கையர் திலகம். 1910 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ஆம் திகதி பிறந்த இரத்தினாவின் ஏனைய சகோதரர் இளமை யிலேயே நோய்வாய்ப்பட்டு மரணிக்கவும் இவருடன் இரு சகோதரிகள் மாத்திரம் உடன்வளர்ந்து வந்தனர்.

பெண்களுக்குப் பாடநூல் கல்வி அவசியமில்லையென்ற மூடக் கொள்கை முகிழ்த்துவிட்டிருந்த அக்காலத்தில், கல்வி, கலாசாரம்,

கடவுள் பக்தி என்பனவற்றிலெல்லாம் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் கொண்டிருந்த இரத்தினா தனது இளமைக் காலக் கல்வியை யாழ்ப் பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் பெற்றுக்கொண்டார்.

உயர்கல்வி பெற்றும் பெண்கள் தம் அறிவை விரிவுபடுத்திச் சமுதாயத்தில் சிறந்த பங்கினை ஆற்றமுடியும் என்பதை உறுதிப் படுத்துவதுபோல சென்னை 'குவீன்ஸ் மேரிக்கல்லூரி'யிலே மேற் படிப்பைத் தொடர்ந்தார். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் என்னும் மொழிகளையும் துறைபோகக் கற்றார். சென்னை பிறெஸிடென்சிக் கல்லூரியில் ஆங்கில இலக்கியத்தில் பீ.ஏ.ஹொனர்ஸ் பட்டத்தைப் பெற்றதோடு ஆங்கில இலக்கியச் சிறப்புப் பட்டத் தேர்வில் வெகு திறமை கொண்ட மாணவியாக முதற்பிரிவில் தேர்வானார். அதற்காகப் பிறெஸிடென்சிக் கல்லூரி இரத்தினாவுக்கு தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவித்தது.

இளைமையிலேயே தமிழ், ஆங்கிலம் என இருமொழிகளிலும் சபையோரைக் கவரும் வகையில் ஆழமான உள்ளடக்கத்தோடு சுவை யாகவும், தெளிவாகவும் உரையாற்றும் வல்லமைமிக்க இவருக்கு எழுத்தாற்றலும் சிறந்த கைவந்த கலையாகவே அமைந்திருந்தது. பல பக்கங்களும் பட்டை தீட்டப்பெற்ற வைரமாகக் கல்வியிலும் புத்தி சாதுரியத்திலும் ஒளிவிட்டுப் பிரகாசித்த இரத்தினா புலமைப்பரிசில் பெற்று 'இன்ஸ்றியூட் ஒவ் லண்டனில்' கற்று அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற திறமைமிக்க மாணவியாக விளங்கியதோடு எம்.ஏ. பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். இவரது கல்விப் புலமைக்காக அங்கும் இவர் கௌரவம் பெற்றார்.

பின்னர் 1933 இல் யாழ்/சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் ஆசிரிய ராகக் கல்விப் பணியில் தனது சேவையைத் தொடங்கினார். தன்னல மற்ற உழைப்பினாலும் இடையறாத முயற்சியினாலும் 1937 இல் அக்கல்லூரியின் அதிபராகப் பதவி உயர்வுபெற்று 1943 ஆம் ஆண்டு வரை அப்பதவியை அலங்கரித்தார். சேர் பொன். இராமநாதன் சுன்னா கத்திலே எத்தகைய கருதுகோள்களோடு இந்து சமயப் பெண்கள் சமயத்தோடொட்டிய கல்வியைப் பெற வேண்டுமென்ற உன்னத இலட்சியத்தில் பெருமுயற்சி செய்து அக்கல்லூரியை ஸ்தாபித்தாரோ, அப்பெருமகனாரின் அபிலாஷைகள் நிறைவேறும் வகையில் அக் கல்லூரியிலே பயிலும் பெண்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு,



இரத்தினா நவரத்தினம்

கடவுள்பக்தி, கல்வி, ஒழுக்கம், பணிவு எனச் சகல விழுமியங்களையும் தமது கல்வி மூலம் பெற உதவினார். தம் வாழ்வில் அவற்றைக் கடைப் பிடிப்பது மட்டுமன்றிக் தம் எதிர்காலச் சந்ததியும் இத்தகைய தடத்தில் நடைபோட்டு நற்குண நற்செய்கைகளோடு சமய கலாச்சாரத்தை நிலை நிறுத்திவாழ வழிகாட்டினார். இறைவழிபாடு தமிழ்க் கலாசாரத்திற் கேற்ப உடை அணிதல், உணவுண்ணல் என்ற நாளாந்த செயற்பாடு களில் கூடச் சைவமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்பதில் சிறந்த பயிற்சிகளை நல்கினார். இரத்தினா அவர்களது குடும்பத்தினர் யாவருமே யோகர் சுவாமிகளைத் தமது குருவாக, வழிகாட்டும் தெய்வமாக ஏற்றுக் கொண்டு இறைவணக்கம், கோவில்தரிசனம் என்பவற்றோடு விரதங்கள் அனுஷ்டித்தல், தானதருமஞ்செய்தல், ஆசாரத்தைக் கடைப்பிடித்தல் ஆகியவற்றிலும் நன்கு ஊறித்திளைத் தவர்கள். சுவாமிகளுடைய தொடர்பும் ஆசீர்வாதமும் சைவசிந்தாந் தத்தில் ஊறிய ஊக்கமும் இளமைதொட்டே அம்மையாருக்குக் கைகூடியதால், எதிர்காலச் செல்வங்களான மாணவ மணிகளையும் அத்தகைய பாதையில் ஈடுபடுத்துவதில் நாட்டம் காட்டினார்.

கல்லூரி அதிபராகத் திறம்படச் சேவையாற்றியதன் பயனாக அம்மையாருக்குக் கல்வி அதிகாரி என்ற உயர்பதவி தேடிவந்தது.

'தொட்டதெல்லாம் பொன்?' என்பது போல அம்மாமுனியின் அருளும் அம்மையாரின் ஆற்றலும் எப்பதவியை வகித்தாலும் அதிலே திற மையும் பெரும் புகழும் அடையும் சிறப்பு இயல்பாகவே அவருக்கு அமைந்ததொன்றாகும். இதற்குச் சான்றாக 1946-1947களில் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ.லிட் பட்டத் தைப் பெற்றார். முதுகலைமாமணிப் பட்டத்திற்காக இவர் செய்த ஆய்வு A New Approach to Thiruvacakam திருவாசகத்தை அணுக ஒரு புதிய வழி. இவ் ஆய்வுக் கட்டுரை நூல்வடிவில் பதிப்பிக்கப்பெற்று 2ஆம் பதிப்பையும் கண்டது. இவ்வாய்வு நூலைப் பேராசிரியர் தெ.போ. மீனாட்சி சுந்தரனார் உட்பட இன்னும் பல அறிஞர்கள் வியந்து பாராட்டியுள்ளனர். இவரது நுண்மாண் நுழைபுலம்மிக்க ஆற்றலையும் கல்வித்தகைமையையும் கௌரவித்து அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அம்மையாருக்கு 'டாக்டர்' பட்டமளித்துக் கௌர வித்தது. 1984 இல் தமிழ்நாடு பாரதிதாசன் பல்கலைக்கழகமும் சைவ சித்தாந்தம், தமிழ் கலாசாரம் தொடர்பான அம்மையாரின் பணியைப் பாராட்டிக் கௌரவித்து இலக்கியக் கலாநிதிப் பட்டத்தையளித்துப் பெருமை சேர்த்தது.

சிவபக்திமிக்கவரும் சிறந்த பண்பாளருமான காசிப்பிள்ளை நவரத்தினம் சைவசித்தாந்த தத்துவங்களில் மிகுந்த ஈடுபாடும் கொண்டி ருந்தவர். யோகசுவாமிகளின் அருளும் ஆசியும் பெற்றவர். இவர் இலங்கைப் புகையிரத சேவையின் பிரதம கணக்காளராகப் பணி யாற்றியவர். இவரே சுவாமிகளுடைய அருளாசியுடன் இரத்தினா அம்மையாரைத் திருமணம் செய்தார். இவர்களுடைய இனிய இல்லற வாழ்க்கையிலே இத்தம்பதிக்குக் குழந்தைப் பேறு கிட்டவில்லை.

யோகர்சுவாமிகள் இரத்தினா அம்மையாரை 'மா' என அழைப் பாராம். அழகு, செல்வம், பெருமைமிக்க, லட்சுமி, தலைவி எனப் பல்வேறு அர்த்தங்களைத் தனதாக்கியுள்ளது இந்த 'மா'. இதன் பொருளை உணர்ந்து அதற்கமைய உன்னை ஆக்கிக்கொள் என்ற சுவாமிகளின் மறைமுகக் கட்டளை மிகுந்த பொருள் பொதிந்ததே. இதன் பின்னர் அம்மையார் தன் பெயரை மா நவரத்தினம் என்றே மிக அவதானத்தோடு உபயோகப்படுத்திக் கொண்டார். நுட்பமாக அர்த்தங்களையும் ஆழமான பொருள் பொதிந்த பெரும்விடயங் களையும் சுவாமிகள் வெகு அனாயாசமாக அருளிவைப்பார்.

யோகர்சுவாமிகள் அம்மையாரை 'ஞானக் கடை வை', என்றும் கட்டளையிட்டுள்ளார். தம் சிந்தையிலே பேரொளியின் பிரகாசத்தைத் தரிக்கும் ஞானியான சுவாமிகள் இத்தகைய அருள்வாக்குகளை யெல்லாம் வெறும் வேடிக்கையாக வீண்பொழுது போக்காகவோ விதண்டா வாதமாகவோ கூறி வைக்கவில்லை.

யார் யார் எவ்வெவற்றைத் திறம்படச் செயல்படுத்துவார்களோ அவர்களிடமே அப்பொறுப்புக்களை ஒப்படைக்க வேண்டும் என் பதனைப் பரிபூரணமாக உணர்ந்தே சுவாமிகள் அம்மையாரிடம் இத்தகைய அருள்வாக்குகளை உதிர்த்தார் என்பதே சத்தியமான உண்மை.

சுவாமிகளுடைய அன்புக்கட்டளையின் பேரில் நவரத்தினம் 1959 இல் அரசசேவையிலிலிருந்து ஓய்வு பெற்றார். பின்னர் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை கே.கே.எஸ்.வீதியில் அமைந்திருந்த சிவதொண்டன் நிலையத்தின் கௌரவ செயலாளராகப் பொறுப்பேற்றதோடு 'சிவ தொண்டன்' என்ற சஞ்சிகையின் கௌரவ ஆசிரியர் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு சுவாமிகள் கருதிய 'ஞானக்கடை' யை விஸ்தரிப்பது போல சைவகலாசாரம், பண்பாடு, சைவசித்தாந்த தத்துவங்கள் என்ப வற்றின் வளர்ச்சியிலும் பரப்பலிலும் மும்முரமாக ஈடுபடத் தொடங் கினார். இத்தம்பதியினுடைய வாழ்வு முழுவதும் சமயமேம்பாட்டிற் காக உழைப்பதிலேயே அதிக கவனம் செலுத்தப்பட்டது.

பெண்கள் நன்கு கற்றிருந்தாலும் கூட ஆண்களோடு சரிநிகர் சமனாக உரையாற்றவும் தனது நாட்டைவிட்டுப் பிறநாடுகளுக்குப் பயணித்து அங்கும் கருத்துக்களை எடுத்துச் சொல்லவும் சபைக்கு வழிகாட்டவும் கூடிய வகையில் கல்வி, சைவகலாசாரம், மரபுரீதியான விளக்கங்கள், கருத்தரங்குகள், விவாதங்கள் ஆகியவற்றில் பங்கு கொள்ளக் கூடிய சந்தர்ப்பமே இல்லாத அல்லது அப்படி வாய்ப்புக் கிடைத்தாலும் அதனைத் தட்டிக் கழித்துவிடும் அக்காலச் சூழ்நிலையில் அம்மையார் சமயபக்தியோடும்திடகாத்திரத்தோடும் பிற நாடுகளுக் குச் சென்று உரையாற்றி எமது நாட்டிற்கும் பெண் இனத்திற்கும் பெருமை தேடித்தந்த சிறப்பை எப்படிப் பாராட்டுவது...? மேலும், பல உலக சம்மேளனங்களிலெல்லாம் பெண்களின் பிரதி நிதியாகச் சென்று உரையாற்றிப் புகழீட்டியதோடு ஜெனிவாவில் நடைபெற்ற 'சர்வதேசப் புரிந்துணரல்' என்ற தலைப்புத் தொடர்பான மாநாட்டில்

இலங்கையின் பிரதிநிதியாகப் பங்குபற்றி நமது நாட்டிற்கும் பெரும் புகழையும் பெருமையையும் ஈட்டித் தந்துள்ளார்.

1968 ஆம் ஆண்டு அம்மையார் அரசசேவையிலிருந்து ஓய்வு பெற்றார். தாம் கற்றறிந்து உணர்ந்தவற்றைத் தமது எதிர்காலச் சந்ததியும் படித்துப் பயன்பெற வேண்டுமென்ற பெருநோக்கில் எழுத்துத் துறை யிலும் வல்லமைமிக்க அம்மையார் நான்கு நூல்களைத் தமிழிலும் பதினான்கு நூல்களை ஆங்கிலத்திலுமாக மொத்தம் பதினெட்டு நூல்களை வெளியிட்டுள்ளார். யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் இ. குமார வடிவேல் இரத்தினா அம்மையாரைப் பற்றிய கட்டுரை யொன்றில் அவருடைய நூல்கள் பற்றித்தரும் குறிப்புகள் சிலவற்றை இங்கே தருகிறோம்.

கல்வித்துறையில் அம்மையார் எழுதிய ஒருசில நூல்கள் தவிர்ந்த ஏனைய ஆக்கங்களின் கருப்பொருட்களை மூன்று பெரும் பிரிவுகளுள் அடக்கலாம்.

முதலாவது கருப்பொருள் சிவயோகசுவாமிகளின் விளக்கத்தை அடிப்படையாகக் கொண்ட சைவசித்தாந்தம். அவரது Saint Yogaswami and the Testament of Truth (1972) எனும் நூல். அமெரிக்காவிலுள்ள வெயிலுவாதியானப் பல்கலைக்கழகத்தின் முதுமாணிப்பட்டப் படிப் புக்குரிய நூலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்நூலினை சைவசித்தாந்த ஆதீன மகா சந்நிதிதானமாயிருந்த குருதேவர் சிவாய சுப்பிரமணிய சுவாமிகள் பெரிதும் பாராட்டியுள்ளார்கள். இந்நூலின் கருப்பொருளை யொட்டி அமைந்த ஏனைய நூல்களாவன: Luminous Eye(1989) Siva Yogamirtham Ambrosial Sivayoga (1988), Natchintanai the Treasury of lLuminous Love (1991), Siddhanta Saivam in Essenze and Manifestation (1979) என்பன.

இரண்டாவது கருப்பொருள் தனித்தனித் தெய்வங்கள் பற்றிய ஆன்மீக நோக்கு. Karttikeya the Divine Child - The Hindu Testament of Wisdom (1972), Aumganesha the Peasce of God (1978,) The call of Maha Shakthi Mother Divine (1993)

மூன்றாவது கருப்பொருள் பெரியபுராணம், திருவாசகம் போன்ற பழம்பெரும் சைவ இலக்கியங்களில் புதைந்து கிடக்கும் நுண்ணிய சிந்தாந்தக் கருத்துக்கள் பற்றியது: Thiruvacakam: the hindu testament of love (1963), The vision of siva in periyapuranam (1987) என்பன.

தமிழ் மொழியோடு ஆங்கிலம் சமஸ்கிருதம் என மும்மொழி களிலும் பாண்டித்தியம் மிக்க அம்மையார் பிறப்பிலிருந்தே யோக சுவாமிகளின் ஆசிபெற்ற குடும்பச் சூழலினாலும் தாம் வரித்துக் கொண்ட சைவசித்தாந்தக் கொள்கைகளினாலும் சிந்தனை தியானம் ஆகியவற்றின் துணையோடு செய்த ஆழ்ந்த ஆய்வுகளினாலும் பொருள் பொதிந்த ஞானக்கருவூலங்களை நூலாக்கி எமக்கு அளித் துள்ளார். இவர் வெளிக்கொணர்ந்த நூல்களுக்கு முகவுரை அளித்துள்ள மாபெரும் தத்துவவாதிகள், அருள்பெற்ற மேதைகள் யாவருமே அம்மையாரையும் அம்மையார் முன்வைத்துள்ள கருத்துக்கள் அடங்கிய நூல்களையும் வியந்து பாராட்டி மெச்சியுள்ளனர். இத்தகைய அருளும் மேதைமையும்மிக்க பெண்ணொருவரை யாழ்ப்பாணம் கண்டெடுக்க முடியுமா? என நாம் ஆச்சரியமுறும் வகையில் அம்மையாரின் பணிகள் அளவிடற்கரியவை; அற்புதமானவை.

இவர் சிறுவருக்கான சில நூல்களையும் எழுதிவெளியிட்டார். தான் கல்லூரிகள் பல்லைக்கழகங்களில் கற்றவை போக, ஓய்வு கிடைத்த போதெல்லாம் சமயநூல்கள், சமஸ்கிருத சுலோகங்கள், திருக்குறள், இராமாயணம், பன்னிருதிருமுறைகள், வேதநூல்கள் என்பவற்றை யெல்லாம், ஆழமாக வாசித்துப் பொருள் நுட்பத்தை அறிவதுடன் சில நூல்களை மொழிபெயர்த்தும் ஏனையோர் படித்துப் பயனுற வழிசெய்தார்.

யாழ்ப்பாணத்திலே சைவத் தமிழ்ப் பெண்மணிகள் யாருமே இதுவரை வகித்திராத மிக உயர்ந்த பதவிகளில் அமர்ந்து ஞாலம் போற்றும் வகையில் தனது பணிகளைத் திறம்பட ஆற்றிய பலபக் கங்களும் பட்டைதீட்டப்பெற்ற வைரம்போன்ற இரத்தினா அம்மையார் 58 ஆவது வயதில் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் ஏனைய சேவைகளில் தொடர்ந்து மும்முரமாக ஈடுபட்டாரென்று தான் கூற வேண்டும். சமூகப் பணிகளிலும் ஆன்மிகப் பணிகளிலும் அதிகமாகத் தன்னை இணைத்துக் கொண்ட அம்மையார் இந்துசமயத்தில் பொதிந்து கிடக்கும் அருமையான கருத்துக் கருவூலங்களைப் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் பல சொற்பொழிவுகளையும் நிகழ்த் தினார்.

நான் யாழ்.இந்துமகளிர் கல்லூரியிலே கல்விகற்றுக் கொண்டிருந்த காலத்தில் ஒருநாள் செல்வி இராமநாதன் ஆசிரியை கற்பித்துக்

கொண்டிருந்த வகுப்பினுள் தீடீர்ப் பரீட்சகர் குழு ஒன்று நுழைந்தது. அக்குழுவிற்கு அப்போது கல்வியதிகாரியாகக் கடமையாற்றிய அம் மையார் தலைமையேற்றிருந்தார். ஆசிரியரும் மாணவர்களும் பயந்து நடுங்கியபடி பதறிக் கொண்டிருந்தோம். காரணம் அக்காலத்தில் திடீர்ப் பரிசோதனைக்கு வரும் கல்வி அதிகாரிகள் முகத்தில் கோபம் கொப்பளிக்க அதிகார தோரணையுடன் உரத்த குரலில் சத்தமிட்டே பேசுவார்கள். அல்லாமலும் குற்றங்குறைகளைக் கண்டுபிடிக்கும் தோரணையில் நாம் ஏதோ சிறையிலடைக்கப்பட்ட குற்றவாளிகள் போலவே எம்மை நோக்குவர். இத்தகைய நிலைமையை அப்படியே, புரட்டிப் போடுவதுபோல அம்மையாரின் வருகை அமைந்தது. ஆழமும் அமைதியும் அறிவும் நுண்ணுணர்வும் வெளிப்படும் அவரது தோற்றமும் அது ஏற்படுத்திய இனிய அதிர்வுகளும்இன்றும் பசு மையான நினைவுகளை ஏற்படுத்துகின்றன. மென்மையான நடை, மலர்ந்த முகம், இனிய சுபாவம் மிக்க அன்பு ததும்பும் பேச்சு, ஆசிரி யருக்கோ அல்லது மாணவருக்கோ உள்ள குறைகளைக் கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்யும் முறையிலான கலந்துரையாடல் என்ற போக்குகளெல்லாமே ஒரு சில நிமிட நேரத்தில் அம்மையாரின் பக்தியையும் எளிமையையும் செயலாற்றல் மிக்க ஆளுமையையும் வெளிப்படுத்தியது.

இலங்கை நாட்டின் போர்ச்சூழல் காரணமாக அமைதியைப் பேணி வாழமுடியாத நிலையில் தனது முதுமைப்பருவத்தில் கனடாவில் வாழ்ந்து கொண்டிருந்த சகோதரியாருடன் இரத்தினா தம்பதியினர் இணைந்து கொண்டனர்.

அங்கேயுள்ள இந்துக்கோவில் சபைகளிலும் தொலைக்காட்சி களிலும் கூடச் சைவசித்தாந்தத்தின் பேருண்மைகளை விளக்கிக் கடை விரித்தார். இவருக்குத் துணையாக நவரத்தினமும் சமயம் சம்பந்தமான விடயங்களில் ஈடுபட்டு உழைத்தார்.

மக்களுடைய கல்வி, சமய ஒழுக்கங்கள், கலாசார விழுமியங்களை யெல்லாம் வளர்த்தெடுப்பதில் மிகுந்த அக்கறையும் பெரு விருப்பும் கொண்டிருந்த அம்மையார் கொழும்பு சைவமங்கையர் கழகத்தின் தலைமைப் பொறுப்பையும் ஏற்று நீண்டகாலம் பணி புரிந்தார். இத் தகைய கல்வி கலாசாரம் தொடர்பான பல அமைப்புகளின் முக்கிய பதவிகளை வகித்ததோடு அர்ப்பணிப்புடன் தனது கடமைகளைச்

சிறப்பாக நிறைவேற்றியுள்ள இவர் றோயல் ஏசியாற்றிக் சொசைற் றியின் ஆயுட்கால அங்கத்தவராகவும் நீண்டகாலம் பணி புரிந்தார்.

இவருடைய கணவர் நவரத்தினம் 1992 இல் சிவனடி சேர்ந்தார். அவரது விருப்பப்படி The Call of Mahasakthi Mother Divine (தெய்வீக அன்னை) என்ற நூலை அம்மையார் எழுதிமுடித்தார். அதனைப் பிரசுரிப்பதற்காக பாரதி வித்தியாபவன் என்ற அமைப்பிற்கு அனுப்பி வைத்தார். தான் கடைசியாக எழுதி முடித்த நூலின் கையெழுத்துப் பிரதியை அச்சகத்தாரிடம் சமர்ப்பித்து ஒருவாரத்தின் பின் - தனது கணவன் மறைந்த மறுவருடமான 1993 இல் அம்மையாரும் இறைவன் அடி சேர்ந்தார்.

வாழ்வின் இறுதியில் மிஞ்சுவது வாழ்ந்த வருடங்களின் எண்ணிக் கையல்ல. அதில் வாழ்ந்த வாழ்க்கை மட்டுமே - என்ற ஆபிரகாம் லிங்கனின் வாழ்க்கை பற்றிய தத்துவம்போல இரத்தினம் மா நவரத் தினம் அம்மையார் மறைந்த நூறாவது ஆண்டான இவ்வாண்டில் அம்மையாருடைய அரும்பெரும் பணிகளையும் தன்னலமற்ற சேவைகளையும் உள்ளடக்கிய அவரது வரலாற்றை மீள்பார்வை செய்வதோடு, அவர் வாழ்ந்து காட்டிய பாதையில் ஒரு சிலவற்றை யாவது நாமும் கடைப்பிடித்து ஒழுக உறுதி கொள்வோமாக!.

10

# சௌந்தரம் சந்தனநங்கை கந்தப்பு

# [1912–1978]

செல்வி சௌந்தரம் சந்தனநங்கை கந்தப்புவை எல்லோரும் பாராட்டி மகிழ்வர். நிமிர்ந்த ஆஜானுபாகுவான தோற்றம், அதற்கேற்றமிடுக்கான நடை, பாரதியார் போலத் தோற்றத்திலேயே தன்னம்பிக்கை, அஞ் சாமையின் வெளிப்பாடு என்பன செல்வி சந்தனநங்கையின் புறத் தோற்றக் கோலங்கள். பண்பாட்டுச் சிறப்பு மிக்க நயினையம் பதியிலே மரபுவழி சைவமும் தமிழும் பேணி வளர்க்கப்பட்ட குடிச்சிறப்பு மிக்க கந்தப்பு என்ற பெரியார் பெற்ற நாலு பெண்களுள் கடைசி மகளாகப் பிறந்தவரே சௌந்தரம் சந்தனநங்கை கந்தப்பு. அர்த்தபுஷ்டியான பெயர்.

'அடுப்பூதும் பெண்களுக்கு கல்வி எதற்கு?' என்ற எண்ணமே ஆணிவேராக ஓடிக்கொண்டிருந்த வேளையிலே, பெண்கல்வியே பெண்ணையும் குடும்பத்தையும் உயர்த்தும் என்ற ஆதர்சம் மனதில் உந்த, எவ்வித வசதிகளுமற்ற அக்காலச் சூழலில் சமூகத்தின் பலத்த எதிர்ப்பின் மத்தியிலும் நயினாதீவிலிருந்து பாய்க்கப்பலில் பக்கீசுப் பலகைப் பெட்டிகள் மீது உட்கார்ந்திருந்து பயணித்து வந்து யாழ்ப் பாணம் மருதனார் மடத்திலிருந்த மகளிருக்கான கல்லூரியில் கல்வி கற்றார். கற்றது பாதி பெற்றது பாதி என்பது போல ஒரு விடயத்தைத் கற்பித்து விட்டால் அதை வைத்து ஒன்பது விடயங்களையும் பெற்றுக் கற்கின்ற ஆர்வமிக்கவராக சௌந்தரம் சந்தனநங்கை விளங்கியதால், பல நூல்களையும் ஆராய்ந்து தேடிக் கற்றுத் தம் அறிவைப் பெருக்கிக் கொண்டார்.

திட்டவட்டமாக அழகிய இலக்கண நடையில் பேசும் பாணி அக்காலத்தில் கல்விகற்றோரின் அடையாளமாக இருந்ததனாற் போலும் இவரது பேச்சுநடையும் இலக்கண சுத்தியோடு எழுத்து நடைபோலவே இருக்கும்.

தமிழ்மொழி மீது ஆழ்ந்த பற்றும் புலமையும் மிக்க செல்வி சௌ.சந்தனநங்கை இசையிலும் திறமைமிக்கவராக விளங்கினார். வயலின் வாத்தி யத்தை இசைப்பவராகவும் இனிமையான குரலால் கானமிசைத்துப் பாடுந் திறமையும் பெற்றவராகவும் காணப் பட்டார்.

சிறுவர் இலக்கியத்திலும் இவருக்கு மிகுந்த ஈடுபாடிருந்தமையால் இவர் சிறுவருக்கான பாடல்களைத் தொகுத்துத் தானே அவற்றிற்குப் பொருத்தமான இசையை அமைத்து, 'சேர்ந்து பாடுவோம்' என்ற தலைப்பில் ஒரு நூலை வெளிக்கொணர்ந்தார். அருமையான சிறந்த பாடல்கள் அடங்கிய இந்நூலில் அப்பாடல்களைப் பாடக்கூடிய இராகம் அதற்கேற்ற ஸ்வரங்கள் என்பனவற்றையும் கீழே குறித்துள்ளார். இலங்கை வானொலியில் வயலின் இசைத்தும் இவரே சில பாடல் களைப் பாடியுமுள்ளார். இவை சிறுவர்களாலும், ரசிகர்களாலும் பெரும் வரவேற்பைப் பெற்றன.

இவருடைய வழிகாட்டலின் பேரிலேயே இலங்கை வானொலி 'ரேடியோ சிலோனாக' இருந்த காலகட்டத்தில் இவரது சகோதரியின் புத்திரிகளான தனலஷ்மி இராமசந்திரா புவனேஸ்வரி இராமச்சந்திரா என்பவர்கள் பக்திப் பாடல்களை வானொலியில் வாரந்தோறும் பாடி பக்தி இசையைப் பரப்பிய இலங்கைச் செல்விகளக விளங்கினர். இசையென்றால் இலங்கையருக்கு வராது இவற்றை இந்தியாவிலிருந்து தான் இறக்குமதி செய்ய வேண்டுமென அநேகமானோர் கருதியிருந்த காலத்திலே அருமையான தேவார திருவாசகங்களையும் ஏனைய பக்திப் பாடல்களையும் இச்சிறுமிகள் பாடுவதற்கும் புகழடைவதற்கும் பின்னணியிலிருந்து உதவிய பெருமை இச்செல்விக்கே உரியது.

செல்வி சௌந்தரம் சந்தனநங்கை கந்தப்பு ஆரம்பம் தொடக்கம் ஓய்வு பெறும் வரை கோப்பாய் மகளிர் ஆசிரிய கலாசாலையிலேயே விரிவுரையாளராக மிக நீண்ட காலம் பணியாற்றியவர். ஆசிரிய மாணவிகளைக் கல்வியறிவில் மாத்திரமல்ல ஒழுக்கம், பண்பாடு, பழக்கவழக்கங்கள், உடற்பயிற்சி, கவின்கலை என்ற சகலதுறைகளிலும்

அதிநுட்பமான பயிற்சிகளையும் பரீட்சைகளையும் அநுபவங்களையும் கொடுத்துப் பயிற்றுவித்து அதி உன்னதமான ஆசிரிய மாணவர்களாக அவர்கள் வெளியேறிச் சிறந்த மாணவ சமுதாயத்தை கட்டியெழுப்ப வேண்டுமென்பதில் இவருக்கு இருந்த ஆர்வமும் அக்கறையும் கொஞ்ச நஞ்சமல்ல!

அவரிடம் பயிற்சி பெறும் ஆசிரியர்களின் தோற்றப் பொலிவில் கூடத் தனது கவனத்தை ஊன்றுவார். சோர்ந்து, வளைந்து, சுருண்டு நின்றாலே அவருக்குக் கோபம் கொப்பளிக்கும். முதுகைத் தட்டி உசார்ப்படுத்தி ஒரு ஆற்றல் மிகுந்த மிடுக்கான எடுப்பான தோற்றத் தோடே ஆசிரியர்கள் திகழ வேண்டுமென வற்புறுத்துவார். ஆசிரி யைகள் கூந்தலைப் பின்னலிட்டோ, அவிழ்த்தோ தொங்கவிடாமல் கொண்டை போட்டுக் கொள்ள வேண்டுமென்பதிலும் மிகுந்த கட்டுப் பாடாக இருப்பார். ஆசிரியர்களின் உடை, நிற்கும் நிலை, பேசும் சொற்கள், உச்சரிப்பு, தொனி என யாவற்றிலுமே கண்ணோட்டஞ் செலுத்தித் தவறிருப்பின் ஏசி ஏசித் திருத்துவார். அவரிடம் பயின்ற வர்கள் ஏச்சுவாங்கிய அனுபவங்களோடு வெளியேறியபின் தமக்குக் கிடைக்கும் பாராட்டுக்களின் போதெல்லாம், தம்மைக் கஷ்டப்பட்டு ஆளாக்கி உருவாக்கிவிட்ட பேராசான் சௌந்தரம் சந்தனநங்கை கந்தப்பு அவர்களையே எண்ணி எண்ணி நன்றி கூர்வர். சுடச் சுடச் பொன்போல் உருவாக்கிடும் அவருடைய திருத்தல்கள், தண்டனைகள் யாவுமே மாணவர் சுடர்விட்டுப் பிரகாசிக்க உதவின.

ஆசிரிய மாணவர்களை இல்லங்களாகப் பிரித்து நாடகம், இசை, நடனம், பேச்சு, அபிநயம், விளையாட்டு, கற்பித்தல், சமையல் எனப் பல்வேறு போட்டிகளை ஏற்படுத்தி, மாணவர்கள் குழுவாக ஒன்றி ணைந்து செயற்படவும், கூட்டு முயற்சிகளில் பயிற்சிபெறவும், தனிப் பட்ட திறமைகளை வெளிக்கொணரவும், இயல்பூக்கங்களை வளர்த் தெடுக்கவும் பல வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தார்.

தானே தெரிவு செய்து நூல்களை வாசிப்பதிலும், இத்துறையில் மாணவரை தூண்டிவிடுவதிலும் உற்சாகம் மிக்கவராக இருந்ததோடு தனது சேகரிப்பிலும் பல நூல்களை வைத்திருந்தார். பிறகு வாசிக்கக் கொடுக்கும் தாராளம் நிறைய இருந்தாலும் இக்கொடுக்கல் வாங்கல் களில் யாருமே அவருக்குத் தண்ணி காட்ட முடியாது. மிகவும் கண்டிப் பாகவே இருப்பார்.

தமிழ் மொழி மீதும், தனது மாணவர் மீதும், தனது கல்லூரி மீதும் அதீத பற்றும் பாசமும் கொண்டிருந்த செல்வி அவர்கள் தனது வாழ்வின் குறிக்கோளும், வாழும் இடமும் ஆசிரிய கலாசாலையாகவே மனதில் பதித்துக் கொண்டவர்.

கற்பித்தல் முறைகள், பாடக்குறிப்பு, பாடவிதானம், வகுப்பறைக் கட்டுப்பாடு என்பவற்றில் மாத்திரமன்றி மாணவரின் கூடுதலான ஆற்றல்களை வளர்ப்பதற்கான புறக்கிரியைகளிலும் அதிக அக்கறை காட்டி, பல நிகழ்ச்சிகளைத் தயாரித்தும், தயாரிக்கத் தூண்டியும் பயிற்சி கொடுத்த பெருமை இவருக்கே உரியது.

இன்றைய நிலையைப் போலல்லாது, அதாவது ஒரு பாடத்திற்கு ஒரே ஆசிரியர் என்றில்லாமல் ஒரு ஆசிரியர் சகல பாடங்களையும் 8 ஆம் வகுப்புக்குக் கீழுள்ள வகுப்புக்களில் கற்பிக்கக் கூடியவராகவே அன்றைய பயிற்சிமுறை இருந்தது. அதனால், ஒவ்வொரு ஆசிரியரும் அழகான கையெழுத்துட்பட கைவேலை, அபிநயம், பேச்சு, நடனம், நாடகம், இசை, சமையல், உடற்பயிற்சி, விளையாட்டு என சகல துறைகளிலும் புடம்போட்டவராக இருக்க வேண்டியதற்கான ஒழுங்கு முறைகளைப் பயிற்றுவித்தல்களைப் பெரும் சிரமத்தின் மத்தியில் முன்னின்று வழிகாட்டினார்.

சைவாசிரிய கலாசாலை, நல்லூர் ஆசிரிய கலாசாலை, கொழும்புத் துறை ஆசிரிய கலாசாலை, பலாலி ஆசிரிய கலாசாலை என யாழ்ப் பாணத்தில் இயங்கிய ஆசிரிய கலாசாலைகளுள் கோப்பாய் ஆசிரிய கலாசாலையும் பலாலி ஆசிரிய கலாசாலையும் நேரடியாக அரசினர் நிர்வாகத்தின் பயிற்சிக் கலாசாலைகளாகவே இயங்கின. இவற்றுள் செல்வி சந்தன நங்கை பணியாற்றிய கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவர் அதீத புகழோடு விளங்கினர் என்றால் மிகை யில்லை. அத்தனை தூரம் அக்கல்லூரியில் பற்றும் பாசமும் வைத்து உழைத்த ஏனைய விரிவுரையாளர்கள் மத்தியிலும் செல்வி சந்தன நங்கையின் முயற்சி மிகமிகப் பேசப்பட வேண்டிய ஒன்றே. இவரிடம் பயிற்சி பெற்று வெளியேறும் ஆசிரியர்களை ஏனைய முன்னணி வகிக்கும் கல்லூரிகள் விரும்பி போட்டி போட்டுக் கொண்டு தமது பாடசாலைக்கு தெரிவு செய்து கொள்ளும் நிலையும் இருந்தது.

மாணவர்கள் தமிழ்மொழியைச் சரியாகவும் திருத்தமாகவும் பேசவும் எழுதுவதற்குமாக 'செந்தமிழ்ப் பயிற்சி மாலை' என்ற

தொடரில் 4,5,6,7,8 ஆம் ஆண்டுக்கான, பாடவிதானத்தோடு ஒட்டிப் போகக் கூடியதான நூல்களை ஸ்ரீலங்கா புத்தகசாலை ஊடாக வெளி யிட்டார். பெருந்தொகையான மாணவர்கள் இந்நூலை வாங்கிப் பயின்று பலன்பெற்றுள்ளனர். கற்பித்தற்கும் ஆசிரியர்களுக்கு இவை உதவியாயமைந்தன. இந்நூலாக்கத்தில் இக்கட்டுரை ஆசிரியரின் பங்கும் கணிசமானதாகும்.

சாதாரண பேச்சு வாக்கின் போது கூட மணிப்பிரவாள நடையில் இல்லாமல் சுத்தத் தமிழில் பேசுவதே இவருக்குப் பிடித்தமானது. "பேப்பர்" என்றால் "என்ன பத்திரிகையையா சொல்கிறீர்?" என்பார். மாணவர் நடத்தை ஒழுங்கு கட்டுப்பாட்டில் மிக மிகக் கறாரான பேர்வழி இவர். காலைவேளையில் யாராவது 'நைட்கவுண்' போட்டி ருப்பதைப் பார்த்தாலே சகிக்கமாட்டார். 'காலைவேளையிலே நீண்ட அங்கிகளையும் தரித்துக் கொண்டு' என்று சத்தம் போட்டுப் பேசுவார். மாணவரை நெறிப்படுத்துவதற்காகக் கோபித்து கடினவார்த்தைகளால் ஏசினாலும் பாறைபோல உறுதியாகக் காட்சிதந்தாலும் உள்ளத்தின் ஆழத்திலே கனிவும், கருணையும், மானிடமும் பொங்கி வழியும். ஈரம் பனிக்கும். பிறருடைய நல்வாழ்வுக்காகவும் சமுதாயத்தின் முகிழ்ப்புக்காகவும் தமது வாழ்நாளையே அர்ப்பணித்துப் பாடுபட்ட இக்கல்வியாளர்களை, சேவைப்பெருமாட்டிகளை நாம் ஒரு தடவையல்ல பல தடவைகள் எண்ணி எண்ணி மகிழ்ந்து கொண்டாட வேண்டும்.

11

## பண்டிதை கங்கேஸ்வரி கந்தையா
## [1917 – 1993]

"என் குரவன் நல்லான் ஈசன் புகழுரைப்போன்
தென்சொல் வடசொல் செயற்குரிய மேல்புலச்சொல்
தன் சொல்லாய் அவைகற்ற சாமி விழலானந்தன்
பொன்சீரடி போற்றிப் புகழ்கொண்டனம் யாமே"

எனத் தன் குருவான யாழ்நூல் புகழ் சுவாமி விபுலானந்தரின் மேன்மையைப் போற்றித் துதிக்கும் வகையில் இப்பாடலை ஆக்கியவர் தான் பண்டிதை கங்கேஸ்வரி கந்தையா என்ற பேரறிவாளர் ஆவார். இவர் மட்டக்களப்பிலே உள்ள புளியந்தீவு ஆனைப்பந்தி பிள்ளையார் கோவிலின் வெளிவீதியில் இருந்த தமிழ்க் கலவன் பாடசாலையைச் சுவாமிகள் பொறுப்பேற்று நடாத்திய வேளையிலே அவருடைய மாணவியாக இருந்து கல்வி கற்கும் பேற்றைப் பெற்றவர். இச்சந்தர்ப்பம் தனது வாழ்க்கையில் கிடைக்கப்பெற்ற அரும்பெரும் வரப்பிரசாதமென உணர்ந்த கங்கேஸ்வரி அவர்கள் பிற்காலத்தில் சுவாமிகளைப் பற்றி எழுதிய கட்டுரையொன்றில் தான் பெற்ற அனுபவத்தைப் பின்வருமாறு பதிவு செய்கிறார்.

''ஒரு நாள் சுவாமிகள் ஆனைப்பந்திப் பிள்ளையாரை வணங்கிக் கொண்டு மங்கல வரவேற்போடு பள்ளிக்கூடத்தை வந்தடைந்தார். வரிசையில் நிறுத்தப்பட்ட மாணவர்களனைவரும் ஒருவர் பின் ஒருவராய்ச் சென்று நாற்காலியில் அமர்ந்திருந்த சுவாமியின் பாதங்களில் மலர்களைத்தூவி வணங்க அனுமதிக்கப்பட்டனர். எனது முறை வந்ததும் சுவாமிகளின் முன்னிலையில் விழுந்து பஞ்சாங்க நமஸ்காரம் செய்து

அவருடைய திருவடிகளை மலர்களாற் பூசித்துப்பாதங்களைத் தொட்டுக் கண்களிலொற்றி வணங்கி நிமிர்ந்தேன். சுவாமிகள் அருளொழுகும் கண்களால் என்னைப் பார்த்துக் 'குழந்தையுடைய பெயரென்ன என்றதும் நான் கூறிய பெயரை அவரே தமது திருவாயால் திருப்பிக் கூறி, எனது தலையைத் தனது திருக்கரங்களால் தடவிவிட்டு 'வகுப்பு எத்தனை'என்று கேட்டார். ஐந்தாம் வகுப்பு என்று கூறித் திரும்பி னேன். இத்தனை மாணவமாணவியரில் சுவாமி என்னோடு மட்டும் பேசித் தலையைத் தடவிவிட்டதை அந்தச் சிறுபிராயத்திலேயே பெரும் வரப்பிரசாதமாகக் கருதினேன்'' எனக் குறிப்பிட்டுள்ளார். இவரது குறிப்பில் தரும் அப்பாடசாலையே சுவாமிகளின் ஆச்சிரமமாகவும் பின்னர் 'சிவபுரி' என அழைக்கப்பட்டஇடமுமாகும்.

இப்படியே அநுபூதிமான்களின் ஆசிர்வாதமும் வழிகாட்டலுமே தன்னைக் கல்வியுலகில் வழிநடத்தியது எனப் பெருமிதமடையும் பண்டிதை அவர்கள். தனது கல்வி அறிமுகத்தினை இப்பாடசாலையின் தலைமையாசிரியராயிருந்த 'தேசிகமணி' எனும் சைவத்திருவாளர் கா. அருணாசலம் உபாத்தியரே தனக்கு ஏடுதொடக்கியதோடு 5ம் வகுப்புவரை கல்வி கற்பித்தார் எனவும் பின்னர் தான் சுவாமிகளிடம் மேற்கொண்டு கற்றதாகவும் அம்மையார் கூறிச் செல்லுகின்றார். இத்தனை பெரிய அறிவுபெட்டகங்களாக விளங்கிய பேராசான்களிடம் பெற்றுக்கொண்ட கல்வியை நன்முறையில் பயன்படுத்திய நங்கையே பிற்காலத்தில் பண்டிதை எனவும் சிறந்த தமிழறிஞராகவும் தலைசிறந்த ஆசானாகவும் பன்முகங்களும் ஒளிவீச விளங்கிய கங்கேஸ் வரியாவார்.

"சைவம் தழைக்கத் தமிழும் சிறக்க
சைவ நற்பணியாய்ச் சிவப்பணி அம்மை'யாய்
'இலக்கிய பணியாய்'ப் 'பெருஞ்சொல் அமுதாய்'
'அருந்தமிழ் அரசி'யாய் அறிஞர் போற்றிப்
பட்டம் பலவும் பரிவுடன் நல்க"

சிவநெறிபூண்டு மட்டக்களப்பிலேயுள்ள புளியந்தீவு என்ற பகுதியிலே சீரும் சிறப்புடனும் வாழ்ந்த 'செந்தமிழ்ச்செல்வி' என இந்துமகளிர் மன்றத்தினர் அம்மையாரின் மறைவு 13.12.1993ம் ஆண்டு நிகழ்ந்த போது தம் கண்ணீர்த் துளியினால் அம்மையாரின் சிறப்புகளைக் குறிப்



பொது நூலகம்
வலி. வடக்கு பிரதேச ச
தெல்லிப்பளை

கங்கேஸ்வரி கந்தையா

பிட்டுள்ளமை இவருக்குத் தமிழ்மொழிமீதும் சைவத்தின் மீதுமுள்ள பற்றினை நன்கு எடுத்துக்காட்டுகிறது.

சுவாமி விபுலானந்தரின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சமுதாய மக்களோடு அன்பும் நேசிப்பும் கொண்டொழுகிய அம்மையார் பெண்கள் கற்றறிந்தவர்களாக இருந்தாலும் பகிரங்கமாக அதிகம் மேடையேறிப் பேசாத அக்காலத்திலே சிறந்த தமிழ் பேசச்சாளராகத் திகழ்ந்ததோடு பலபொதுச் சேவைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

ஆன்மிகவாதியும் சிறந்த சிந்தனையாளரும் தலைசிறந்த பேச் சாளருமான குன்றக்குடி அடிகளாரிடமும் அன்பும் பக்தியும் மிக்க வரான அம்மையார் மட்டக்களப்பிலுள்ள புளியந்தீவில் நாகலிங்கம் அன்னம்மாள் தம்பதியின் இளையமகளாக மார்ச்மாதம் இருபதாம் திகதி 1917ம் ஆண்டு பிறந்தார். சைவப்பெரியார் திரு. கா. அருணாசல தேசிகர் அவர்களால் ஏடுதொடக்கிக் கல்வியை ஆரம்பித்த இவர் புனித சிசிலியா மகளிர் பாடசாலை தொடர்ந்து கல்முனை மெதடிஸ்ட் பெண்கள் பாடசாலை எனத் தனது கல்வியை மிகக்கவனத்தோடு தொடர்ந்தார்.

இவருக்குக் காவிய இலக்கியங்களையும் சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் ஆகிய காவியங்களையும் ஐந்திலக்கணம் போன்றவற்றையும் சுவாமி விபுலானந்த அடிகளும், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையும் வெகு சிறப்பாகவும் தெளிவாகவும் கற்பித்தனர். இத்தகைய பெரும் கல்வியாளர்களிடம் கற்கும் பேறுபெற்ற இவர் 1935ம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து மூன்று வருடங்களாக யாழ் மருதனாமடத்தில் அமைந்திருந்த இராமநாதன் மகளிர் கல்லூரியில் ஆசிரிய பயிற்சி பெற்றுச் சிறப்பாகத் தேறினார்.

1939லிருந்து சுமார் எட்டுவருடங்கள் மட்டக்களப்பு கார்மேல் பெண்கள் பாடசாலையிலும் ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலையிலும் கல்லடி உப்போடையிள்ள விவேகானந்தா வித்தியாலயத்திலும் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

இவர் தனது இருபத்தொன்பதாவது வயதிலே மண்டூரைச் சேர்ந்த புலவர் விநாசித்தம்பி சின்னாத்தை தம்பதியின் மகனான பண்டிதரும் மகாவித்துவானுமாக விளங்கிய வீ. சி. கந்தையா அவர்களைத் தம் வாழ்வின் துணைவராக ஏற்றுக்கொண்டார். தமிழறிவும் சமயபக்தியும் மிக்க அம்மையாருக்கு, கல்விமானான கணவனின் ஆதரவு அவர் தனது அறிவை மேன்மேலும் விருத்திசெய்ய மிகவும் பயன்பட்டது. இவர்களுடைய இன்பமான இனிய இல்லறவாழ்விலே சிவகுமாரன், இளங்கோவன், மணிவண்ணன் என மூன்று ஆண்குழந்தைகளும் அருள்மொழி என்ற பெண்குழந்தையுமாக நான்கு குழந்தைகள் இன்பமூட்டின. பிள்ளைகள் நால்வரும் உயர்கல்விபெற்று பொறியியலாளர்களாகவும், கலாநிதிகளாகவும் கல்வியில் சிறந்து விளங்குகின்றனர்.

தமிழ் இலக்கியம், இலக்கணம், சமயம் என்பவற்றிலெல்லாம் ஆழ்ந்த அறிவுமிக்க அம்மையார், ஆனைப்பந்தியில் இயங்கிய பெண்கள் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும், பின் பெண்கள், ஆண்கள் இரு இனமும் இணைந்து மாற்றம் செய்யப்பட்ட பின்னரும் தொடர்ந்து ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளராகப் பணியினைத் தொடர்ந்தார்.

சமயத்திலுள்ள ஈடுபாட்டினால் இவர் மட்டக்களப்பு இந்துமகளிர் மன்றத்தில் 1929ம் ஆண்டு தொடக்கம் பல்வேறுவகையான பணிகளைச் செய்து இந்துப் பெண்கள் சமய விழிப்புணர்ச்சி அடையவும்

மூடப் பழக்கவழக்கங்களை நீக்கவும், இந்து சமயக் கோட்பாடுகளை மக்கள் நன்கு புரிந்துகொண்டு அவற்றைத் தம் வாழ்வில் ஏற்றுக் கடைப்பிடிக்கவும் மக்களைத் தூண்டினார். ஒரு சமுதாய எழுச்சிக்கும் மறுமலர்ச்சிக்கும் அதன் ஜீவனாக இருக்கும் பெண்களே முக்கியஸ் தர்களாக அமைகிறார்கள் என்ற உண்மையை நன்கு தெளிந்து பெண்கள் மூலமே இச்செயற்பாடுகளை முன்னெடுத்து இந்துமகளிர் மன்றத்தின் ஆயுட்காலச் செயலாளராக இருந்து ஆகும் பணிகளை ஆற்றினார்.

வெறுமனே மேடையில் பேசுவதோடு மட்டுமன்றி மக்கள் வாசித்து விளங்கியும் கொள்ளக் கூடியவகையில் பல அருமையான சமயக் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டார். “அரசன் ஆணையும் ஆடக சௌந்தரியும்” என்ற தலைப்பிட்ட வரலாற்று நூலொன்றையும் அம்மையார் எழுதி வெளியிட்டுள்ளார்.

மட்டக்களப்பிற்கே மகிமையேற்றும் வகையில் அம்மையாருடைய அறிவும் செயற்பாடுகளும் மேன்மைமிகுந்தனவாய் விளங்கின.

இவருடைய ஆற்றலையும் தமிழ்ச் சமயத்தின் மேன்மைக்காக இவர் முன்னெடுத்த பணிகளையொட்டிய பாராட்டும் வகையிலும் யாழ் நல்லை ஆதின பரமாச்சார்ய சுவாமிகள் ‘அருள்மொழி அரசி’ என்ற பட்டத்தைச் சூட்டி மகிழ்ந்தார். ‘பெருஞ் சொல் அமுதம்’ என்ற அருமையான பட்டமொன்று காஞ்சி தொண்டைமண்டல ஆதினத் தலைவரால் கொடுக்கப்பட்டது. இந்துசமய கலாசார அமைச்சு ‘சைவ நன்மணி’ எனப்பட்டம் சூட்டிக் கௌரவித்தது. ஆயுள்வரை அதன் அங்கத்தவராக இருந்து பல்வேறுவகையிலும் சேவை செய்தவரைப் பாராட்டி மதித்து மட்டக்களப்பு இந்துமகளிர் மன்றம் ‘சிவப்பணி அம்மையார்’ எனப் பட்டமளித்துக் கொண்டாடியது.

நாட்டுக்காகவும் தான் வாழும் சூழலுக்காகவும் நற்பணிகள் பலவற்றில் ஈட்டுழைத்த கங்கேஸ்வரி கந்தையா போன்ற பெண்மணி கள் சாதனைகள் என்றென்றும் வரவேற்கப்பட வேண்டியனவாகும்.

12

## பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம்
## [1922 – 1986]

சபையோரைக் கட்டிப்போடும் சக்திமிக்க இனிமையான குரல்வளம், தலைப்பில் பொருளுக்கேற்ப வேகமாக வந்துவிழும் கருத்துகள், அமைதியாக அடக்கமாகச் சபையோரை விளித்தபடியே உரையாற்றும் பாங்கு என்பன பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் உரையாற்றும் போது பளிச்சிடும் சிறப்புகளாகும். காரணம் பெண்களுட் சிலர் கற்றறிந் திருந்தாலும் தமது அறிவை ஆசிரியர் மட்டத்தில் நின்றே பெரும் பாலும் பிறருக்கு வழங்கியிருப்பினும் தாம் பெற்ற அறிவைத் தமது வாழ்க்கைக்குப் பயன்படுத்துவதோடு அமைதியாகவிடுவர். இத்தகை யோரிலிருந்து சிலர் வேறுபட்டுத் 'தான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்ற ரீதியிலே தமது அறிவைப் பிறரும் பயன்படச் செய்வர். பண்டிதை அவர்களும் தாம் பெற்றவற்றைப் பிறருக்கு அள்ளிக் கொடுப்பதில் முன்னிலை வகித்தார் எனில் மிகையில்லை.

விளைச்சலின் செழிப்பு மண்ணின்வளம் என்பது போல் இவரின் சிறப்பு. பிறந்த மண் யாழ்ப்பாணத்தின் வடபாலுள்ள பல்வேறு சிறப்பு களும் பொருந்திய 'பசுத்தீவு' எனவும் 'பால்த்தீவு' எனவும் விசேடித்து அழைக்கப் பெற்ற நெடுந்தீவுக் கிராமமாகும். இத்தீவிற்கும் கன்னியா குமரிக்கும் அங்கு அமைந்திருக்கும் அம்பாள் ஆலயத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு அக்காலத்திலேயே இருந்தது. நெடுந்தீவிலிருந்தே தமிழகத்திலுள்ள கன்னியாகுமரி அம்பாள் ஆலயப் பூஜைக்கும் அபிஷேகத்திற்குமான திரவியங்கள் பால், தயிர், நெய், பூக்கள் என்பன தினமும் அனுப்பப்பட்டுவந்ததாகப் பெரியவர்கள் செவி வழிச் சொன்ன செய்திகள் பரவலாக யாவரும் அறிந்ததே.



சத்தியதேவி துரைசிங்கம்

தமிழ்மொழியின் செம்மொழிச் சிந்தனைக்கும் உலகத்தமிழ் மாநாட்டிற்கும் வித்திட்ட பன்மொழிப்புலவர் தனிநாயக அடிகளாரின் பிறப்பிடமும் இவ்வூரேயாம். பண்டிதை அவர்கள் அவ்வூரிலே தொண்டை மண்டலத்திலிருந்து வந்து யாழ்ப்பாணத்தில் பல இடங் களிலும் அங்குமிங்குமாகக் குடியேறிய குறுநில மன்னரான தனிநாயக முதலியார் பரம்பரையில் தோன்றிய நாகப்பர், சின்னப்பிள்ளை என்ற தம்பதிக்கு மூன்றாவது குழந்தையாக 06.14.1922 ஆம் ஆண்டு பிறந்தார். பெற்றோர் இவருக்குச் சத்தியதேவி எனப் பெயரிட்ட ழைத்தனர்.

சத்தியதேவிக்கு மூத்தவர்களாக சேதுப்பிள்ளை என்ற சகோதரியும் கணபதிப்பிள்ளை என்ற தமையனாரும் வள்ளியம்மை என்றொரு தங்கையும் குருநாதர் என்ற பெயரில் ஒரு தம்பியாருமாக நான்கு சகோதரர்கள் இருந்தனர்.

பெண் கல்வியின் தேவை அதிகமாக உணரப்படாத அக்காலத்திலே நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆரம்பக்கல்வியைக் கற்ற இவருக்கு குடும்ப பாரம்பரியத்தோடு ஒட்டியிருந்த இயல்பான நற்குண நற்செய்கைகள் ஒழுங்கு, கட்டுப்பாடு, நேர்மை, கண்ணியம், பொறுமை, பணிவு, தன்னடக்கம் என்பனவெல்லாம் இயல்பாகவே

அமைந்துவிட்டிருந்தன. ஆகையால், சிறுபராயத்திலேயே பெரியார்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் நன்மதிப்புக்கும் அன்புக்கும் ஆளாகியமை மென்மேலும் கல்வியிலும் நற்பண்புகளிலும் அதிக ஈர்ப்பை ஏற் படுத்தின. இவருடைய பாடசாலைக்கு அருகிலிருந்த பிள்ளையார் கோவிலில் இடம்பெறும் பூஜை, வழிபாடு, விழாக்களில் எல்லாம் தொடர்ந்து இளம்வயதிலிருந்தே பங்குபற்றிய அனுபவம், கடவுள் நம்பிக்கை, தெய்வபக்தி, சமயவாழ்வு என்பவற்றிற்கு அடிகோல ஆதாரமாக அமைந்தன. தொடர்ந்து மேற்படிப்புக்காக சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் இணைந்து கொண்ட வாய்ப்பு சத்திய தேவியை மேற்கொண்டு தமிழை ஆழமாகக் கற்கவும், சமய வாழ்வைச் சிறிதும் வழுவாமல் வாழவும் புடம்போட்டு உதவியது.

தாய் என்ற பெருந்தகைமையை ஏற்கப் போகும் பெண்கள் யாவருமே கல்வியோடு சமயவாழ்விலும் ஊற்றம் பெற்றிருந்தால் தான் சமயப் பழக்கவழக்கங்கள் சிறப்பாகக் குடும்பங்களில் கடைப் பிடிக்கப்பட்டு வாழ்க்கை பயன்பெறும் என்ற கனவுடனேயே சேர்.பொன்.இராமநாதன் பெண்களுக்கெனப் பிரத்தியேகமாகச் சுன்னா கத்திலே ஒரு கல்லூரியை அமைத்திருந்தார். அக்கல்லூரியிலே தனது படிப்பைத் தொடர்ந்த சத்தியதேவி பெண்கள் அநேகமாக விரும்பித் தேர்ந்தெடுக்கும் ஆசிரியப் பணியையே தேர்வுசெய்தார். அக் கல்லூரியிலேயே ஆசிரியப் பயிற்சியையும் பெற்றார். பயிற்சி பெறும் காலங்களில்கூட இவர் காண்பித்த உற்சாகமும், திறமையும் பயிற்சி கொடுத்த ஆசிரியர்களிடமிருந்து பாராட்டுகளையும் நற்புகழையும் இவருக்கு ஈட்டிக் கொடுத்தன. இசையோடு பாடும் திறமையும் இயல்பிலேயே கிடைத்த கொடையாக அமைந்திருந்தமையால் திரு முறைகளை யெல்லாம் சரியான உச்சரிப்போடு பண்ணுடன் பாடுவது இவரிடம் காணப்பட்ட இன்னொரு சிறப்பு அம்சமாகும்.

ஆசிரியப் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறிய சத்திய தேவியின் உள்ளத்தின் ஆழத்திலே ஏழைகளுக்கு உதவவும் சைவ சமயத்தை வளர்க்கவும் பாடுபடவேண்டுமென்ற நல்லெண்ணம் மேலோங்கவே, பணிக்கென வலைவிரித்துக்கிடந்த, ஏழைப்பிள்ளை களும் அநாதைக் குழந்தைகளும் கற்பதற்கென இந்துபோட் (Hindu Board) இராசரத்தினம் என்ற பெரியாரால் திருநெல்வேலியில் நடத்தப் பட்ட முத்துத்தம்பி வித்தியாசாலையில் தனது ஆசிரியப் பணியை

ஆரம்பித்தார். சேவைசெய்ய வேண்டுமென அவாவி நின்றவருக்குப் பொருத்தமான இடமாக இப்பாடசாலை அமையவே, கற்பித்தல், மாணவர் ஒழுங்கு, கட்டுப்பாடு, ஒழுக்கம் என்பவற்றுடன் சைவப் பெண்கள் விடுதியை நிர்வகிக்கும் பொறுப்பையும் தாமே ஏற்றுச் சிறப்புற நடத்தினார். இப்பள்ளி விடுதியிலேயே தங்கியிருந்து தனது சேவையைத் தொடர்ந்தார். அநாதைக் குழந்தைகளை அன்போடு அணைத்து அறிவூட்டி அவர்களுடைய உடல்வளர்ச்சியில் மட்டுமன்றி உளவளர்ச்சியிலும் அக்கறை காட்டும் தாயாகவும் ஆசானாகவுமிருந்து வழிகாட்டினார்.

1942 இல் இவரது திருமணம் நிறைவேறியது. இவரைக் கைப் பிடித்தவரும் இவருக்குச் சமதையான பாரம்பரியமும் புகழும் பெரு மையும் பிரபலமும் மிக்க குடும்பத்தைச் சார்ந்த பண்டிதர் செல்லையா துரைசிங்கம் என்பவர். நிலவளமும் நீர்வளமும் மிக்க நீர்வேலியைச் சேர்ந்த பண்டிதர் துரைசிங்கம் கல்வி கேள்விகளில் மாத்திரமன்றிச் சத்தியம், தர்மம், இறைபக்தி, சமயவாழ்வு என்பவற்றிலிருந்து சிறிதும் வழுவாதவராகவும் சமுதாய உணர்வும் பொதுச்சேவையில் பெரு விருப்புங் கொண்டவராகவும் அமைந்தமை சத்தியதேவி தன் இலட்சி யங்களை முன்னெடுத்துச் செல்வதற்குப் பெருந்துணையாகவும் வழி காட்டலாகவும் அமைந்திருந்தது. தன் மனைவியின் கல்வியறிவு மென்மேலும் அபிவிருத்தியடைய வேண்டும் என்ற எண்ணத்தில் தமிழ் இலக்கியத்தின் அரும்பெரும் பொக்கிஷங்களான பண்டைத் தமிழ் இலக்கிய இலக்கணங்களையெல்லாம் நன்கு கற்றுத்தேற வழி காட்டினார். பிரம்மஸ்ரீ சதாசிவ ஐயர் ஸ்தாபித்து வைத்த யாழ். ஆரிய திராவிட பாஷாவிருத்திச்சங்கம் நடத்தும் பண்டித பரீட்சையில் சித்தி யெய்திய சத்தியதேவி தனது கல்வியறிவை மென்மேலும் வளர்த்ததோடு ஏனைய பெண்களும் உயர்கல்வியைப் பெறுவதற்கு உறுதுணையாக இருந்தார்.

கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாசாலையிலும் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியிலும் தொடர்ந்து உதவியாசிரியராகப் பணிபுரிந்த பண்டிதை அவர்களுக்கு துணைவரின் இணைப்போடு ஆச்சாரிய வினோபாபாவே, டாக்டர் இராஜேந்திரப் பிரசாத், ராஜாஜி ஆகியோருடைய ஆசிகளும் கிடைக்கப்பெற்றன.

1949இல் ஆரம்பித்த அகில இலங்கை காந்தீய சேவாசங்கத்துடனும் நெருங்கிய தொடர்பை ஏற்றுக் கொண்ட இத்தம்பதி காந்தீயக் கொள்கைகளையே தமது இலட்சியமாகவும் கொண்டு எளிமையான வாழ்வு, உயர்ந்த நினைப்பு, அகிம்ஸா தர்மம் என்ற போக்கையே கடைப்பிடித்து ஒழுகினர். காந்தீயம் என்ற பத்திரிகையை நடத்தவும் காந்தீயக் கொள்கைகளைக் கிராமம்தோறும் சென்று பரப்பவும் சர்வோதய ஆசிரமத்தைத் தொடங்கி நடத்தவும் கல்விவாசனையற்ற ஏழை மக்களுக்கான வருவாய்க்காக நம் நாட்டின் கற்பகதருவான பனையின் பயன்பாடுகளை ஆய்வுசெய்து அவற்றை மேலோங்கச் செய்யவும் அயராது பாடுபட்டனர். இவை தொடர்பான மாநாடுகளுக் கெல்லாம் தம்பதிசமேதராகக் கலந்து கொண்டனர். மேலும், காந்தீயம் க.வேலாயுதபிள்ளையுடன் மிக நெருங்கிய தொடர்புபூண்டிருந்ததோடு அந்த அமைப்பின் பொறுப்புவாய்ந்த உறுப்பினராகவிருந்து நீண்ட காலம் சேவையாற்றினார். கிராமங்கள் தோறும் மகளிர் சங்கங்களை உருவாக்கிப் பெண்களுக்கு அறிவூட்டுவதிலும் காந்தீயக் கொள்கை களைப் பரப்புவதிலும் பண்டிதை பெரும்பணியாற்றினார்.

சர்வோதயத்தின் முக்கிய தூண்களாக விளங்கிய பண்டிதர் செ. துரைசிங்கம், பண்டிதை சத்தியதேவி ஆகியோர் இச்சங்கத்தின் சார்பில் எல்லோருடனும் இணைந்து இலங்கையில் இரு மாநாடுகளை நடத்திப் பெருமை சேர்த்தனர். நீர்வேலியிலும், பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலையிலும் நடைபெற்ற இம்மாநாட்டிற் கலந்து கொள்வதற்காகத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் இலங்கைவந்து பாமரரையும் கவரும் வகையில் கருத்தாழம்மிக்க புரட்சிகரமான கருத்துக்களை யெல்லாம் மாரிமழைபோல அள்ளிச் சொரிந்தார். அடிகளாரின் இன்பத் தமிழைக் கேட்டுச் சுவைக்க திமு திமுவெனக் கூட்டம் பெருந்தொகையாகத் திரண்டது.

காவியுடையிலிருந்து இத்தனை புதுமையான புரட்சிகரமான எண்ணக்குவியல்களா? என மூக்கின் மேல் விரலைவைத்து வியக்கத் தோன்றும். இக்கட்டுரை ஆசிரியர் இளம் வயதில் இவற்றை யெல்லாம் அனுபவித்ததால் எளிதில் மறக்க முடியாத சம்பவங்களாக இவை மனதில் பதிந்துள்ளன. இம்மாநாட்டிற்காக அடிகளாருடன் சர்தார் வேதரத்தினம்பிள்ளை, சங்கரராவ்தேவ் போன்ற காந்தீயத்தில் ஊறித்

திளைத்த அறிஞர்களும் இலங்கை வந்திருந்தனர். இவர்களையெல்லாம் வரவேற்று உபசரித்து அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு இத்தம்பதியினருக்குக் கிட்டியது. காந்தீயத்தைப் பரப்புவதிலும் அதற் கான பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்காகவும் இத்தம்பதி தமது வருவாயில் பெருந்தொகையான பங்கைச் செலவு செய்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர்களது மணவாழ்க்கையில் இரு பெண் குழந்தைகளும் ஒரு ஆணுமாக மூவர் பிறந்தனர். பெற்றோரைப் போலவே சைவப்பண்பும் அடக்கத்தையும் அறம்சார் நெறிகளையும் கொண்டு வாழும் இப் பிள்ளைகள் நன்கு கல்விகற்று உயர்நிலையில வாழ்ந்து வருவது பெற்றோர் செய்த தவப்பேறெனலாம். மனைவி, பிள்ளைகள், உறவினர், தான் வாழ்ந்த சூழல் யாவரும் துயருறப் பண்டிதர் துரைசிங்கம் 24.12.1979 இல் பூவுலகவாழ்வை நீத்தார். மனத்துயரோடும் அம் மையார் தனது கடமைகளை நிறைவாகச் செய்தார்.

பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் அம்மையாருடைய சிறப்பை, துர்க்காபுரம் தெய்வத்திருமகளான தங்கம்மா அப்பாக்குட்டி "தமிழ்ப் புலமையும் சைவப்புலமையும் மிக்குவிளங்கிய பெருமாட்டி பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் சிறந்த ஓர் ஆசிரியராகப் பணியாற்றியதோடு, பலராலும் பாராட்டக்கூடிய பேச்சாளராகவும் விளங்கினார். காந்தீய அடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொண்ட ஒரு திருக்குடும்பம் இவர்களுடையது. கடந்த 50 ஆண்டுகளாக இவருடைய கல்வி வளர்ச்சி, ஆசிரியப்பயிற்சி, ஆசிரியப்பணி, சொற்பொழிவுப்பணி, காந்தீயப்பணி ஆகியவற்றில் காலந்தோறும் கொண்ட ஈடுபாட்டை நான் நன்கு அறிவேன்..... அம்மையார் ஒரு சாந்த சொரூபி, அடக்கம் இவருடைய உயர்ந்த அணிகலம், பெண்மைக்கு இவர் ஒரு எடுத்துக் காட்டு. இத்தகைய மாதரசிகளை நாம் போற்றாமல் இருக்க முடியாது" எனத் தனது அழகிய தமிழிலே குறிப்பிட்டிருப்பதோடு, இத்தகைய பெண்களின் பெருமையை நாம் போற்ற வேண்டும் என்றொரு கருத்தையும் அழுத்தமாகக் குறிப்பிட்டிருந்தார்.

பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் பலரும் போற்ற வேண்டிய பெண்ணுக்குரிய தகுதிகளைக் கொண்டிருந்தவர். 22.10.1986 ஆம் ஆண்டு இவ்வுலகவாழ்வை நீத்தார். ஆயினும் அவரது வாழ்வும் பணிகளும் என்றென்றும் நினைவுகூரத்தக்கவையே.

13

# தங்கம்மா அப்பாக்குட்டி

## [1925 – 2008]

சங்ககாலத்தின் பின்னர் பல்லாண்டு காலமாக இருண்டு கிடந்த தமிழ் மகளிர் உலகில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேதான் சிறிது சிறிதாக ஒளிவீசப் பலசிந்தனையாளர்களும் மறுமலர்ச்சித் தொண்டர் களும் புதுமைவிரும்பிகளும் சீர்திருத்தச் செம்மல்களும் புரட்சிகரமான பல செயற்பாடுகளை மேற்கொண்டனர். அதன் பலனாக இறுக மூடியபடி இருளோச்சிக் கிடந்த பெண்ணுலகின் பாதைகள் மெல்ல மெல்லவாகத் திறபடத் தொடங்கின. அதன் பலனாகப் பெண்கள் மத்தியில் கல்விமான்கள், சமூகசேவகிகள், அரசியல் வல்லுநர்கள், விஞ்ஞானிகள், பல்வகைக் கலைஞர்கள், பல நிர்வாகிகள், சட்டத் தரணிகள், ஆன்மீக வாதிகள் எனப் பல துறைகளிலும் வல்லமையும் ஆளுமையுமிக்க பல வல்லுநர்கள் மேற்கிளம்பத் தொடங்கினர். ‘பெண்களென்றால் வீடு, சமையற்கட்டு, உடலழகு மட்டுமே’ என்ற நிலையைப் புரட்டிப் போட்டு, பெண்களென்றால் வல்லமை, நிதானம், செயல்திறன், அறிவு நிலை, நிர்வாகம் எனப் பல துறைகளிலும் சாதனை புரியக்கூடிய தீரர் என்ற புதிய கருத்தைச் சமுதாயத்தில் பதிவு செய்த பெண்மணிகளின் பட்டியல் மிகமிக நீண்டது; அளவிடற்கரியது. அத்தகைய நீண்ட பட்டியலில் ஈழத்திலே இறைதொண்டும், கடவுள் பக்தியும், கல்விச் செழிப்பும், சமுதாய சிந்தனையுமிக்க தெய்வத் திருமகளாம் கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பெயர் நிச்சயம் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றே.



தங்கம்மா அப்பாக்குட்டி

அம்மையார் தான் பக்திமார்க்கத்திலே நின்று கோவில் அமைப்பு, நித்ய, நைமித்ய பூஜை ஒழுங்குகள், விரத அனுஷ்டானங்கள், அடியார் ஒழுங்குகள், சைவ சமய ஆசார ஒழுங்குவிதிகள் என சமயத்தொ டொட்டிய விடயங்கள் தொடர்பாகக் கருத்துச் செலுத்தியமை மட்டு மன்றி இவற்றினூடாக இவற்றிற்கும் அப்பாற்பட்டுச் சமுதாயப் பணியிலும் தன்னைக் கரைத்துக் கொண்டு நாட்டிலே குழப்பங்களும் வன்செயல்களும் தலைதூக்கிய காலை மக்களெல்லாம் செய்வதறியாது திகைத்துப் போய்ச் செயலற்றிருந்த வேளையிலும் கூட தன் அன்பாலும் அரவணைப்பாலும் அரும்பணியாலும் மக்களைக் காப்பாற்றிய மானுட நேயத்தை என்னென்பது?

சாதாரண தமிழ் ஆசிரியையாகத் தனது தொழிலை ஆரம்பித்த தங்கம்மா யாழ்ப்பாணம் தெல்லிப்பழையிலே வாழ்ந்த கந்தர் அப்பாக்குட்டி என்ற பெரியவருக்கும் தையற்பிள்ளை சின்னப்பா என்பவருக்கும் குழந்தையாக 1925 ஆம் ஆண்டு தைமாதம் ஏழாந் திகதி பிறந்தார். இளம்வயதில் மல்லாகம் அமெரிக்க மிஷன் பாட சாலையில் ஆரம்பக்கல்வியைக் கற்று, மல்லாகம் விசாலாட்சி வித்தியா சாலையில் 6 ஆம் வகுப்பிலிருந்து மேலே கற்றார். எதிர்காலத்திலே பெரும் நிர்வாகியாக வரக்கூடிய தகுதிப்பாடுகளை அந்த இளங்

குருத்தின் துருதுருப்பிலிருந்தும் பேச்சுப்போட்டி, பாடற்போட்டி, மனனப் போட்டி என்பவற்றிலெல்லாம் முதல் இடங்களைப் பெற்றதி லிருந்தும் சிறுமியாக வளரும்போதே வகுப்பில் எல்லாவற்றிலும் பல முதல் இடங்களைப் பெற்றுக் கொள்வதிலிருந்தும் அறியக்கூடியதாக இருந்தது. பின் பெரியவளாக வளர்ந்து இராமநாதன் பெண்கள் கல்லூரியில் மூன்று வருடங்கள் ஆசிரியப் பயிற்சியைப் பெற்ற காலத்திலே திருச்சியிலிருந்து இங்கு வந்து பணியாற்றிய பேராசிரியர் சுந்தரராசன் ஐயங்காரிடம் இராமாயணம் கேட்டமை, பின்னர் இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகரிடம் இலக்கணபாடம் கேட்டமையெல்லாம் தமிழ் மொழி இலக்கண இலக்கிய அறிவு வளத்தையும் மொழிச் செம்மையையும் கூர்மைப்படுத்திக் கொள்ள மிக உதவியாக அமைந்தன. இவற்றை இலகுவாக விளங்கித் தெளிவு பெற்றுக் கற்ற அம்மையார் பால பண்டித, பண்டித பரீட்சைகளை யெல்லாம் வெகு இலகுவாகக் கடந்தார்.

இறைபக்தியிலும் தமிழ்மொழியிலும் அளவிறந்த தாகம் மிக்க வராகத் திருவாசகம், திருக்குறள், திருக்கோவையார், திருவருட்பயன், பன்னிருதிருமுறைகள் என்பவற்றை இன்னும் ஆழமாகக் கற்றதோடு, ஆலயங்கள், சைவ சமயமன்றங்கள், வானொலி ஆகிய ஊடகங்களிலும் இவை சம்பந்தமான பல உரைகளை ஆற்றினார். பல கட்டுரைகளை எழுதினார். அவற்றையெல்லாம் தொகுத்து நூல் வடிவிலும் வெளிக் கொணர்ந்தார்.

தெய்வீகப் பொலிவுமிக்க எழிலார்ந்த இவரது தோற்றமும் இனிமை யான தேன்போன்ற இசைபொருந்திய பாடலுடனான பேச்சாற்றலும் இவர் உரையாற்றும் போது சபையை அப்படியே கட்டிப்போட்டுவிடும். தங்கு தடங்கலற்ற சொல்லாட்சிப் பெருக்கு, உச்சரிப்புத்தெளிவு, இனிய குரல்வளம், ஆழமான கருத்தையும் இலகுபடுத்தி எளிமையாக விளக்கும் பேச்சுத்திறன் என்பனயாவும் ஒன்றிணைந்து இலங்கையின் பல பாகங்களிலும் மட்டுமல்ல தமிழகம், மலேசியா, சிங்கப்பூர், காசி, லண்டன் எனப் பல நாடுகளிலும் சொற்பொழி வாற்றும் வாய்ப்பை ஈட்டிக் கொடுத்தது. திருமுறை மாநாடு, சைவ சித்தாந்த சமாஜமாநாடு, பெரியபுராணச் சொற்பொழிவு, சேக்கிழார் விழா போன்ற சமய இலக்கிய விழாக்கள் மாநாடுகளில் மாத்திரமன்றிப் பல ஆலயங்களிலும் திருவிழாக்களிலும் அம்மையாருடைய சொற் பொழிவு மிக முக்கிய

இடம்பெறுமளவிற்கு உரையாற்றும் இவரது சேவை பிரபலமடைந் திருந்தது.

கணிதம், விஞ்ஞானம், பொருளாதாரம், பல்வேறு கலைகள் போன்றவற்றைத் துறைபோகக் கற்று அவற்றைத் துல்லியமாக ஆய்வு செய்து நிபுணத்துவம் பெறும் வல்லமை போலன்றி, தான் கற்றுக் கொண்டவற்றை, இறைவன் மீது தான் கொண்டுள்ள பக்தியையும் நம்பிக்கையும் மூலதனமாக வைத்துக் கொண்டு ஏனைய மக்களையும் ஒன்று திரட்டி அவர்களும் 'தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதாக மக்களுக்கு வழிகாட்டி, அவர்களும் பக்திநெறியில் ஒழுகிச் சகல இன்பங்களையும் எய்தவேண்டுமென்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். இவ்வழிமுறையால் மக்களிடையே சைவசமய ஒழுக்கம், சமயநெறி, பண்பாடு, கலாசாரம், மானிடநேயம், ஒற்றுமை, சமாதானம், அறம்பல செய்யும் பண்பு என்பன வளர்ந்து பெருகும் என முற்று முழுதாக நம்பினார். இத்தகைய இவருடைய நிலைக்கு முன் உதாரண மாக விளங்கியவர் இன்னொரு பெண்மணி. அவர்தான் சிவநாயகி தியாகராஜா. சிவநாயகி அம்மையார் பயிற்றுவிக்கும் பாடங்களை ஆயத்தம் செய்யவும் கட்டுரைகள் வரையவும் இவர் உதவினாரென அறிகிறோம். அல்லாமலும் சிவநாயகியும் இவரைப் போலவே ஒரு சிவ பக்தை. எந்நேரமும் அவர் சிவபுராணத்தை ஓதியபடியே மற்ற வேலைகளில் ஈடுபட்டிருப்பாராம். தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் தலைவராக இருந்த தியாகராஜா என்ற பெரியார் ஆங்கில மொழிப் புலமையாளராயிருந்தும் தமிழ்மொழிப் பற்றும் சைவசமய ஈடுபாடும் கொண்டவர். இவருடைய துணைவியாரே சிவநாயகி. இத் தம்பதிகளின் மகள் சகிதேவி ஈழத்தின் மூத்த எழுத்தாளர். இவருடைய சிறுகதைத் தொகுப்பொன்றும் வெளிவந்தது. இவர் இராமநாதன் கல்லூரியின் மாணவியாகப் படித்துப் பின் அங்கு ஆசிரியராகவும் பணிசெய்தவர். தற்போது இங்கிலாந்தில் வசிப்பதாக அறிகிறோம். இவர்கள் கொழும்புத்துறை யோகர் சுவாமிகளிடம் மிகுந்த பக்தியும் நம்பிக்கையுமுடையவர்கள். அவருடைய போதனைகளால் மிகவும் ஈர்க்கப்பட்டவர்கள். இத்தகைய பெரியோர்களுடைய ஆதரவும் நட்பும் பெற்றோரை இழந்த அம்மையாருக்கு இருந்தது.

தனது தமிழ் புலமையை வளர்த்துக் கொள்வதிலும் ஆர்வங் கொண்டிருந்த அம்மையார் சென்னை சைவசித்தாந்த சமாஜம் நடத்து

கின்ற சைவப்புலவர் தேர்வில் 1958 ஆம் ஆண்டு சித்தியடைந்தார். அடுத்த ஆண்டு இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் பொருளாளராகப் பொதுப்பணியில் இறங்கினார். பாடசாலைகளில் ஆசிரியப் பணியில் ஈடுபட்டிருந்த வேளையும் ஏனைய சிறுசிறு பொறுப்புக்களை வகித் தாலும் ஒரு அமைப்பில் இணைந்து பலரோடும் ஊடாடிப்பழக வும்வீட்டிற்கு வெளியிலான சில விடயங்களை அனுபவத்தில் பெற்றுக் கொள்ளவும் இத்தகைய பொறுப்புக்கள் உதவின.

1962 இல் தெல்லிப்பழையை உலகுக்கெல்லாம் நினைவூட்டிக் கொண்டிருக்கும் துர்க்காதேவி ஆலயத்தின் திருப்பணிச் சபை உறுப் பினராகத் தெரிவு செய்யப்பட்டார். அம்பாள் பணிசெய்ய ஆளாகி விட்ட அம்மையார் இருவருடங்கள் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் தனது ஆசிரியப் பணியைத் தொடர்ந்தார்.

பண்டைய தமிழரின் பண்பாட்டை அடியொற்றி தமிழ் மொழிப் புலமையிலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்கிய செந்தமிழ்ச் செல்வி, துர்க்கையம்மன் ஆலயத்திற்குத் தனது அன்பளிப்பாக திருமுறை மடம் என்றொரு கட்டிடத்தைக் கட்டிக்கொடுத்தார். இத்திருமுறை மடத்திற்கு ஆலயத்தின் திருவிழாக்காலங்களிலும் ஏனைய விசேட நாட்களிலும் ஏராளமான இறைபக்தர்கள், சமயநெறியாளர்கள், விரதம் அனுட்டிப்போர் வருகைதருவர். அவர்களுடைய பக்தியை மேம் படுத்தவும் சமய வரலாறுகளைத் தெரியப்படுத்தவும் புராண படனங் களைப் படிக்கவும் தேவாரதிருவாசக இசைகளை இசைக்கவும் பஜனை, கதாகாலட்சேபங்களை நடத்தவும் என இப்படிப் பலசமய, கலை, கலாசார நிகழ்ச்சிகள் இடம்பெறும் மையமாக இம்மண்டபத்தைப் பயன்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் அமைத்தார். இத்திருமுறை மடம் இலங்கையின் சுதந்திரதினமான 4 ஆம் திகதி மாசி மாதத்தில் 1972 இல் திறந்து வைக்கப்பட்டது. இங்கு ஒழுங்காகக் குருபூசை, திருமுறை வகுப்புகள், புராண படனம் என்பன நிகழ்வதற்கான ஒழுங்குகளை இவர் மேற் கொண்டிருந்தார். ஏனைய பொருளாதார வசதிபடைத்த ஆலயங்களின் திருப்பணிச் சபையின் தலைவர்களோ செயலாளர்களோ சிந்திக்காதிருக்க சாதாரண உறுப்பினராக மட்டுமே இருந்த இப்பெண்மணி ஆலயத்திற்கும் அதன் சூழலுக்கும் சைவசமயா சாரத்தோடு ஒழுகு வோர்க்கும் உறுதுணையான இத்தகைய விடயங்

களில் கருத்தூன்றி யமை அவருடைய சமுதாய உணர்வைச் சமயப் பற்றின் ஆளுமையைத் தெட்டெனை விளக்குகிறதன்றோ!.

சமயப் பற்றினாலும் இறைபக்தியாலும் இடையறாத புனிதமான தொண்டினாலும் பக்குவப்பட்டு மேன்நிலையெய்திய அம்மையார் 1977 ஆம் வருடம் தேவஸ்தான நிர்வாகசபைக் கூட்டத்தில் தலைவ ராகத் தெரிவு செய்யப்பட்டார். எத்தனைதான் பக்தி உள்ளமும் தொண்டு மனப்பாங்கும் கொண்டு விளங்கினாலும் பெண் என்ற காரணத்தால் ஆலயத்தில் பூசகராகவோ திருப்பணிச் சபைத் தலைமைப் பதவியையோ அலங்கரிக்க எமது மரபில் இடமற்ற காலகட்டத்திலே, அம்மையார் இத்தகைய பதவிக்குத் தெரிவானது உண்மையான அவரது உழைப்பும் ஊக்கமும் உயர்ந்த மனப்பாங்கையுமே எடுத்துக் காட்டுகிறது. மக்கள் தன்மீது கொண்டுள்ள மதிப்பையும் அவர்கள் தமக்களித்த பெருமை யையும் நன்கு உணர்ந்து கொண்ட அம்மையார் தன்னம்பிக்கையுடனும் தற்றுணிபோடும் துர்க்கை அம்பாளை வழிபட்டு மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற தத்துவத்தையும் மனதில் உருப்போட்டுக் கொண்டு என்கடன் பணிசெய்து கிடப்பதே என்பதற்கு இலக்கண மானார்.

கல்விப்புலமை, பொருளாதார வசதிகள், ஆளணி என்பன இருந்தால் மாத்திரம் தலைமைப் பண்பின் பூரணத்துவத்தை எய்தி விடலாம் என எண்ணுவதே தப்பானது. எமக்குச் சமமாகவும் எமக்குக் கீழேயும் உள்ளவர்கள் எப்படியிருக்க வேண்டுமென நாம் எதிர் பார்க்கிறமோ, அதற்கேற்றபடி நாமும் உண்மையானவர்களாக, கடமையுணர்வுள்ளவர்களாக, நேர்மையானவர்களாக இருந்தால் தான் அவர்களும் நம்மைப் பின்பற்றுவர். ஆலயம் தொடர்பான தலைமைப் பதவிமட்டுமல்ல, எந்தவொரு நிலையிலும் தலைமையை ஏற்போர் ஏனையோருக்கு எடுத்துக்காட்டாக, முன்னோடியாக விளங்கினால் தான் அந்நிறுவனமே ஒளிவிட்டுப் பிரகாசிக்கும். அம்மையார் தமது தனித்துவமான ஆளுமையால், அகில உலகமுமே துர்க்கா துரந்தரி ஆலயத்தின் நிர்வாகச் சிறப்பை, அங்குவருகைதரும் அடியார் கூட் டத்தின் பக்திச் செழிப்பை, ஆசார ஒழுக்கத்தை, சைவப்பண்பாட்டை, பண்டைய விழுமியங்களைத் தழுவி நடக்கும் ஏற்பாடுகளையெல்லாம் ஆலயத்துள்ளும் அதன் சுற்றாடலிலும் மட்டுமன்றி, நாடுகடந்த இடங் களிலெல்லாம் கூட வியந்துவியந்து பாராட்டுவதையும் பக்தி பரவ

சத்துடன் வணங்கித் துதிப்பதையும் அறிகிறோம். அம்மையாரின் வழி நடத்தலால் ஆலயத்தின் நெறிமுறைகள் கட்டுப்பாடாக நடை பெறுவது மாத்திரமன்றி, ஆலயத்தோடு தொடர்பான ஏனைய, அற நிலையங் களும் செயற்பாடுகளும் கூட வியந்து போற்றக் கூடிய வகையில் இடம்பெற்றிருந்தன.

பல பெண் குழந்தைகளுக்கு அம்மையார் அன்னையாக இருந்து உண்டி, உடை, உறையுள் மாத்திரமன்றிக் கண்போன்ற கல்வியைப் பெறச் சகல வசதிகளையும் செய்து கொடுத்தார். பல பெண்கள் உயர்தரக் கல்வியை முடித்துப் பல்கலைக்கழகத்தில் கற்றும் வெளியேறி ஆசிரியர்களாகச் சேவை செய்கின்றனர்.

பிள்ளைகள் பருவமடைந்தால் கூட, தாயின் இடத்திலிருந்து சகல விடயங்களும் அம்மையாரின் அறிவுறுத்தல் பிரகாரம் எல்லா விடயங் களுமே மிகச் சிறப்பாக இடம்பெற வழிவகுத்துக் கொடுத்தார். பெண் குழந்தைகள் திருமண வயதை அடைந்ததும் பொருத்தமான கணவனைத் தேடித் திருமணம் செய்வித்தும் வழிகாட்டியுள்ளார். சாதாரணமாக ஒரு மனுசி சாதிக்கமுடியாத அற்புதமான அபாரமான வேலைகளை யெல்லாம் கிஞ்சித்தும் சோர்வின்றிச் சமுதாயச் சிந்தனை யோடு செய்து முடித்தாரென்றால் இதற்கெல்லாம் காரணம் அவரது திட சித்தமான மனநிலை, துன்புற்றுவாழும் மக்களிடத்தேயுள்ள இடை யறாத பற்றுதல், அம்பிகையின் அருள் கடாட்சம் என்பவையே, என நாம் நம்பலாம்.

குண்டுவீச்சும், துவக்குச் சூடும், யுத்த விமானங்களின் இரைச் சலும்மிக்க போர்ச் சூழலில், துர்க்கா மகளிர் இல்லப் பெண் குழந்தைகள், ஏதிலிகள், இன்னும் அநாதைகள், குழந்தைகள் எனப் போக்கிடமின்றி உதவிகேட்டு அம்பாளை நம்பி வந்தோர்களுடன் அம்மையாருக்கு ஏற்பட்ட சோதனைகள், கவலைகள் கொஞ்சநஞ்சமல்ல! இவற்றோடு அம்மாவினுடைய முதுமை, உடல் நலக்குறைவு இத்யாதி.... இத்யாதி..... இவற்றுக்கெல்லாம் ஈடுகொடுத்து வாழ்வதென்பது அதிபயங்கர மான அனுபவமே!

சைவநாயன்மார்களும், ஆறுமுகநாவலர் ஆகிய அநுபூதிமான்கள் போன்றோரும் மிக நெருக்கடியான வேளைகளிலெல்லாம் துணிந்து நின்று சகல துன்பங்களுக்கும் ஈடுகொடுத்துச் சமய நெறிகளை

அணுவளவும் தவறவிடாது இறுக்கிப் பிடித்தபடி மக்களை நெறிப்படுத்தி, வழி காட்டியதுபோலவே அம்மையார் பல தொல்லைகள், மிரட்டல்கள், இன்னல்கள் வந்துற்றபோதெல்லாம் மனஞ்சிறிதும் சோராமல் பல சுமைகளைத் தனது தலையிலேயே போட்டபடி அம்பிகையைச் சரண டைந்தால் அருள்மழை பொழியாமலாபோவாள்? என நம்பியே வாழ்ந்தார். இல்லை! வழிகாட்டியாயிருந்தார்.

ஆகமவிதிப்படியான முறையான ஆலய நிர்மாணப் பணிகள், நித்திய நைமித்திய பூஜை முறைகள், விசேட தினங்கள், திருவிழாக்கள், வரவு - செலவுக் கணக்குகள், அந்தணர், உதவி அர்ச்சகர்கள், பணி யாளர் எனப் பல்வேறு விடயத்தையும் சமய நெறிமுறைகள் சிறிதும் வழுவாது கடைப்பிடித்து நடாத்துவதற்கேற்ற திறமை இருந்தால் மாத்திரம் போதாதே. பொருளாதார வசதியும் அவசியமல்லவா! அவற்றையும் ஒழுங்காகச் சமாளித்து யாழ்.வைத்தியசாலையின் சுத்தத்தைப் பேண, கண்மருத்துவ சிகிச்சைக்கென, தமிழ்மொழி புலமைப் பரிசில்களுக்கென, தெல்லிப்பழை அரசினர் வைத்திய சாலைக்கென, நூல்வெளியீடுகளுக்கென, நூல்நிலையங்களுக்கென, மாணவர் கல்வி வளர்ச்சிக்கென, சமய மேம்பாட்டிற்கெனப் பன்முகப் பட்ட பணிகளுக்கெல்லாம் கூடப் பெருந்தொகையான பணத்தைக் கொடுத்து உதவி செய்த பெருந்தொண்டை எப்படிப் புகல்வது? புகழ்வது? இதற்கான வாய்ப்புகள், வசதிகள் எவ்வாறு ஒரு பெண் ணுடைய தலைமைத்துவத்தின் கீழ் வலுப்பெற்றிருந்தது என்பதிலே தான் அம்மையாருடைய தியாகம், திறமை அருட்கொடைப்பணிகள் என்பன தொக்கி நிற்கின்றன. இவைதான் ஒளிவீசும் அம்மையாருடைய உள்ளக் கிடக்கையின் மகிமை.

ஈழத்தில் மாத்திரமன்றிப் பிற நாடுகளுக்கும் கூடச் சென்று சைவ மணம் கமழப் பெரும் புகழீட்டிய அம்மையார் 1965 இல் சிதம் பரத்திலே நடைபெற்ற சைவசித்தாந்த சமாச வைரவிழாவிலே வெள்ளை வாரணார் தலைமையில் 'மணிவாசகரின் ஞான உள்ளம்' எனும் தலைப்பில் உரையாற்றிப் பலரது பாராட்டுதல்களுக்கும் ஆளானார். 1966 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கோ.சுப்பிரமணிய பிள்ளை தலைமையில் 'இளங்கோ போற்றிய பெண்மை' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். 1973 இல் திருவாவடுதுறை ஆதீன ஏற்பாட்டில் முதல்வர் அம்பலவாணதேசிகர் தலைமையில்

உரையாற்றி ஏகோபித்த வரவேற்புகளைப் பெற்றுக் கொண்டார். 1976 இல் கும்பகோணத்திலும், 1977 இல் திருவிடைமருதூரிலும், 1978 இல் சிவகங்கைச் சைவசித்தாந்த மாநாட்டிலும் இவர் ஆற்றிய உரைகள் எல்லோர் மனதையும் கவர்ந்தன. 1979 இல் புதுக்கோட்டையிலும் 1982 இல் சென்னை சைவசித்தாந்த மாநாட்டிலும் நிகழ்ந்த பேச்சு நிகழ்ச்சிகளால் பலரது பாராட்டுக்கும் ஆளான அம்மையார் 1971 இல் மலேசியாவுக்கும் சென்று உரையாற்றிய அனுபவத்தையும் உடையவர். இப்படித் தொடர்ந்து பல நாடுகளுக்கும் பயணித்துத் தனது பேச்சுத் திறமையால் வையத்தை வாழ வைத்த பெருமாட்டிக்கு, பொதுப்பணிக்கெனப் பெருந் தொகையான பணமும் கிடைக்கும் வாய்ப்பும் கைக்கெட்டியது.

பக்தர்கள், நண்பர்கள், அன்பர்கள் எனப் பலரும் எமது தாயகத்தில் எழுந்தருளியுள்ள துர்க்காதுரந்தரி ஆலயத்திற்கெனப் பணமாகவும் பொருளாகவும் அள்ளி அள்ளிக் கொடுத்தனர். வெளிநாடுகளில் அம்மையார் செய்த சைவப் பணி ஈடிணையற்றதெனலாம். உள்ளூர் பக்தர்கள் மட்டுமன்றி வெளிநாடுகளில் வாழும் சைவசமயத்தோர் அம்மையாரின் இறைபணிக்குப் பெருந்தொகையான பண உதவி நல்கித் தமது பங்கையும் நிறைவேற்றுவதில் ஊக்கம் காட்டினர். அம்மையாரின் சொற்பொழிவுகளையும் பணியின் சிறப்புக்களையும் அறிந்த வெளிநாட்டு வள்ளல்கள் அம்மையார் முன்னெடுக்கும் செயல்களையெல்லாம் பாராட்டி, கௌரவித்துத் தம்மாலான பொருளுதவிகளையும் செய்து அம்மையாரின் பொதுநலத் தொண்டான இப் பணிகள் வெற்றிகரமாக நிறைவேற அருந்துணையாக இருந்து ஆக்கமும் ஊக்கமும் நல்கினர்.

பாமரர் தொடக்கம் பண்டிதர் வரை பல்லாயிரணக்கணக்கில் அம்மையாரின் சொற்பொழிவைக் கேட்பதன் இரகசியமென்ன? என்பதைச் சித்தாந்தசாகரம் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் 1. பேச்சின் பொருளை நிரைப்படுத்திப் பேசுதல், 2. நேரத்திற்கமைவாகக் சுருக்கியும் விரித்தும் பேசுதல், 3. யாழ்ப்பாணத்தமிழின் உச்சரிப்புத்தெளிவும் இனியகுரல் வளமும், 4. சொற்களைச் சிதைக்காது விழுங்காது சரியாக உச்சரித்தல் ஆகிய சிறப்புகளே முக்கிய காரணங்கள் என விதந்துரைப்பார்.

இத்தகைய சகல சிறப்புகளும் பொருந்திய இப்பெண்மணியின் ஆளுமையை வியந்து போற்றிப் பாராட்டிய ஏராளமான மன்றங்கள், சபைகள், அமைப்புகள், ஆலயங்கள், அறிஞர்கள் என்போர் அம்மை யாருக்குப் பொருளை மட்டுமல்ல, பணத்தை மாத்திரமல்ல, பொன்னை மட்டுமல்ல, தகைமையும் புகழுமிக்க பெரும் கௌரவங்களைச் செய்து மிகப் பொருத்தமான பட்டங்களையும் அளித்துள்ளனர்.

1966 இல் மதுரை ஆதீனம் செஞ்சொற் செம்மணி' என்ற பட்டத் தினையும் 1970இல் ஈழத்துச் சிதம்பரம் என்ற காரைநகர் சிவன்கோவில் ஆதீனம் 'சிவத்தமிழ்ச் செல்வி' என்ற பட்டத்தினையும் 1972 இல் மதுரை இராஜேஸ்பதிபீடம் 'சைவதரிசி' என்ற பட்டத்தையும் அதே ஆண்டில் மலேசியா சிலாங்கூர் இலங்கைச் சைவர் சங்கம் 'திருவாச கக் கொண்டல்' என்ற பட்டத்தையும் 1973 இல் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம் 'துர்க்கா துரந்தரி' என்ற பட்டத்தையும் 1974 இல் வண்ணை வைத்தீஸ்வரன் ஆதீனம் 'திருமுறைச் செல்வி' என்ற பட்டத்தையும் 1974 இல் அகில இலங்கை இந்துமாமன்றம் 'சிவஞான வித்தகர்' என்ற பட்டத்தையும் 1978 இல் மாதகல் இந்துசமய அபிவிருத்திசங்கம் 'செஞ்சொற் கொண்டல்' என்ற பட்டத்தையும் திருக்கேதீச்சர ஆதீனம் 'சிவசமயச் செல்வி' என்ற பட்டத்தையும் 1983 இல் இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் ஆதீனம் 'திருமொழி அரசி' என்ற பட்டத்தையும் 1991 இல் இலங்கை அரசு 'கலாசூரி' பட்டத்தையும் 1998 இல் யாழ் பல்கலைக்கழகம் கலாநிதி பட்டத்தையும் 1999 இல் கனடா சைவசித்தாந்தமையம் 'துவிஞோத்தமி' என்ற பட்டத்தையும் 2002 இல் கொழும்பு கம்பன் கழகம் 'கம்பன் புகழ்' விருதினையும் வழங்கிக் கௌரவித்தன.

சர்வதேச ரீதியில் கூட அம்மாவின் புகழ்பல இடங்களிலும் ஓங்கிவியாபித்திருந்தது. அமெரிக்க ஹவாயிலுள்ள சிவன்கோயில் ஆதீனம் வருடாவருடம் ஆன்மீக மறுமலர்ச்சியாளரைக் கௌரவித்துப் பாராட்டுவதும் தமது நிகழ்ச்சிகளுள் ஒன்றாகத் திட்டமிட்டிருக்கிறது. அந்த ரீதியிலே இக்கௌரவத்துக்குரியவர்களாக பகவான் சத்திய சாயி பாபா, சுவாமி சச்சிதானந்தாஜி, மாதா அமிர்தானந்தமஜி, ஸ்ரீ பிரமுகச் சுவாமி போன்ற ஆன்மீகப் பெரியார்கள் இடம்பெற்றுள்ளனர். இவ் விருதையளிக்கும் நிகழ்ச்சியில் ஹவாய் சிவன்கோயில் ஆதீனமும் அதனுடன் இப்பணியில் இணைந்துள்ள ஹிண்டூசியம் ருடே (Hindu-

ism Today) என்ற சஞ்சிகையும் 2007 ஆம் ஆண்டின் ஆன்மீகப் பெரியாராகத் தெய்வத்திருமகள் தங்கம்மா அப்பாக்குட்டியைத் தெரிவு செய்து அக்கௌரவத்தை அளித்துப் பெண் உலகிற்கும் ஈழத்துக்கும் அளப்பரிய பெருமையை ஈட்டித் தந்துள்ளன. ஹவாய் ஆதீனத்தின் தவத்திருதொண்டநாதன் சுவாமிகள் இதற்கென ஈழத்திற்கு வருகை தந்து அம்மையாரிடம் இக்கௌரவத்தைச் சமர்ப்பித்தபோது அவர் மிகுந்த நன்றியுடனும் புன்முறுவலுடனும் கைகளைக் கூப்பியபடி "யாவும் எம்பிராட்டி துர்க்கை அம்பாளுக்கே உரியது" என மிக்க பணிவுடனும் தன்னடக்கத்தோடும் கூறி அக்கௌவரத்தினை ஏற்றுக் கொண்டார்.

1997 ஆம் வருடம் துர்க்கை அம்பாள் ஆலயத்தின் பாலஸ்தாபனம் நடைபெற்றுக் குடமுழுக்குவிழா பலகோடி ரூபா செலவில் வெகு சிறப்பாகவும் சாஸ்திர சாம்பிரதாயப்படியும் அம்பாள் அருளால் இனிதே நிறைவெய்தியது. இத்தகைய பெரும் கைங்கரியத்தையெல்லாம் கூட அம்மையார் தலைமையேற்று மிகுந்த சிறப்புடன் நடத்திவைத்த பெருமையை என்னென்று உரைப்பது?

வெறும் ஆன்மீக வாதியாக இறையருள் பெற்று இறையழகைப் பேசியும் எழுதியும் மாத்திரம் தன்னைச் சுருக்கிக் கொள்ளாமல் கோடானு கோடி மக்கள் பயன்பெற சைவம் வளர ஆலயத் திருப்பணிகளுக்கும் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த அன்னையின் அரும்பணி சைவ சமயம் உள்ளவரை ஈழம் உள்ளவரை பேசப்படும்.

'தெய்வத்திருமகளாம்' 'தங்கம்மா' அப்பாக்குட்டியின் தெய்வீகத் திருப்பணிக்கான ஆர்வமும் ஆற்றலும் அர்ப்பணிப்பான சேவையும் பெண்ணின் சக்திக்கும் ஆளுமைக்குமான ஓர் எடுத்துக்காட்டு.

14

# பத்மா இராமநாதன்
## (1926 – 1987)

"எங்களின் சிறார்கள் இந்தக் கவிதை ஈழத்தில் மட்டுமன்றிப்
பொங்கொலி உலகமெங்கும் புகழ்பெற வளர்த்தெடுத்தோய்
உங்களின் சுகத்தை வேள்வி ஆகுதியாய்ச் சொரிந்து
இங்குளோர் அமுதம் மாந்த எழுந்த நற்சுடரே வாழி!"

என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா வின் வாழ்த்து அடங்கிய மடல் பத்மா இராமநாதன் அதிபர் பதவியி லிருந்து ஓய்வுபெற்ற போது யாழ்/இந்து மகளிர் கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தினரால் அவரது சேவையைப் பாராட்டி அளித்த பாமாலையில் இடம் பெற்றது தான் இக்கவிதை. இக்கவிதையின் தாற்பரியமே செல்வி. பத்மா இராமநாதனின் உழைப்பை, உணர்வை, மனப்பாங்கை, பணியின் பரப்பைத் துல்லியமாக எடுத்துவிளக்குகிறது.

பெண் கல்வி மறுக்கப்பட்டிருந்த காலமொன்றிலே ராவ்பகதூர் வேதநாயகம் பிள்ளை, பாரதியார், மகாத்மா காந்தி, திரு.வி.க போன்ற தேசத் தியாகிகள், கல்விமான்கள், சீர்திருத்தச் செம்மல்கள் ஆகியோர் பெண்கல்வியை வற்புறுத்தினர். இத்தகைய கல்வியையே கருந்தன மாகக் கொண்ட பத்மா இராமநாதன் அவர்கள் பிள்ளைகளின் கல்வியில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தாலும் பெண்கள் கல்வியில் இன்னும் பல படிகள் மேலாக ஆர்வமும் அக்கறையும் கொண்டிருந்ததோடு கல்வி தொடர்பான தன் எண்ணங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் அளவுகடந்த பிடிவாதமும் கொண்டிருந்தார். அதற்காக எல்லை கடந்து உழைத்தார்.

யாழ்ப்பாணத்து மானிப்பாய் என்ற ஊரிலே கட்டுடை என்ற கிராமத்தில் இராமநாதன் என்பவரின் செல்லமகளாகப் 1926ஆம் ஆண்டு ஆனி மாதம் 24ஆம் திகதி பிறந்த இவரைத் தாலாட்டிச் சீராட்டிப் பேணிப் பள்ளிக்கு அனுப்பக்கூடிய வயதில் தாயாரின் வாழ்க்கை முடிவுற்று அவர் இவ்வுலகை நீத்ததனால் தாயற்ற சேயா கவே தந்தையின் பற்றிலும் பாசத்திலும் மாத்திரமே வளர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

தந்தையார் குழந்தையின் மலர்ச்சிக்காக அன்னலெட்சுமி என்ற இன்னொரு பெண்ணை இரண்டாந்தாரமாகக் கைப்பிடித்து மண வாழ்வைச் சிறப்பாக்கிக் கொண்டார். குழந்தை பத்மாவின் குறுகுறு விழிகளும் தளர்நடையும் குறும்பும் வேடிக்கையும் இராமநாதனின் தாயாரைப் பெரிதும் கவரவே பேர்த்தியார் குழந்தையைத் தன் மடியில் ஏற்றுக் கொண்டார். குழந்தையும் பாட்டியின் சொகுசில் தாயில்லையே யென்ற ஏக்கம் சிறிதுமின்றி மகிழ்வாகவே வளர்ந்தது. ‘கட்டுடை சைவ வித்தியாசாலையில்’ ஆரம்பக்கல்வியைப் பயின்றார். இடைத்தர வகுப்புகளை சண்டிலிப்பாய் இந்துப் பாடசாலையில் கற்ற பத்மா ஒன்பதாம் வகுப்புத் தொடக்கம் பொதுத்தராதரப் பத்திரம் பெறும்வரை கல்வியை உடுவில் மகளிர் கல்லூரியிலே கற்றுத் தேறினார். ஒழுங்கும் கட்டுப் பாடும் மிக்க கல்லூரிச் சூழல், பாரம்பரியமாகவே சைவப் பண்பாட்டுக் கலாசாரத்தை இளமை தொட்டே கடைப்பிடித்து வாழ்ந்த வாழ்வுமுறை, வாழ்வில் வேறெவ்விதமான சிக்கல்களோ சிந்தனைகளோ குறுக் கிடாத மனநிலை என்பனவெல்லாம் இளமை தொட்டே கடவுள் பக்தியையும், சைவ ஒழுக்கத்தையும் கல்வியையுமே முன்னிறுத்தி அதிலேயே கூடுதலான ஊற்றம் பெற வழி வகுத்தது.

தொடர்ந்து பத்மா.இராமநாதனுக்கு சென்னை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே பட்டதாரிக் கல்விபெறுவது பெரும் கடினமாக அமையவில்லை. அல்லாமலும் கண்டி பேராதனை வீதியிலுள்ள இந்து சிரேஷ்ட பாடசாலையின் ஸ்தாபன அதிபராகவும் அக்காலத்திலே இலங்கை ஆசிரிய சங்கத்தின் தலைவராகவும் பதவி வகித்த சண்முக தாஸன் என்பவர் பத்மாவின் சிறிய தந்தையார். அவருடைய வழி காட்டலிலும் மேற்பார்வையிலுமே அம்மையார் உயர்கல்வியை மேற் கொண்டார்.



**பத்மா இராமநாதன்**

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தத்துவங்களில் மிகுந்த ஊற்றம் கொண்ட பத்மா கடவுள் வணக்கம், கற்றலில் அதீத கவனம் என்பவற்றோடு பல அறிஞர்கள், கல்விமான்கள், மேதாவிகள், பெரியவர்கள் எனப்பலருடைய நூல்களையும் பெற்று வாசிப்பதிலும் வாசித்தவற்றைப் பற்றி அலசி ஆராய்வதிலும், கலந்துரையாடுவதிலும் தனது பொழுதுகளை மிகப் பயனுள்ள வகையில் செலவழித்தார்.

தான் வாசிக்கும் புனைகதைகள், நாவல்களில் சந்திக்கும் பெண் பாத்திரங்களின் துன்ப துயரங்கள் அவலங்களைப் பற்றியெல்லாம் பல மணிநேரம் சிந்திப்பார். தனது மனதைத் தைத்த விடயங்களை மற்றவர்களிடம் கூறி ஆறுதல் பெறுவார். வாசிப்பை அறிவு வளர்ச்சியாகவும் சிறந்ததொரு பொழுது போக்காகவும் கொண்டு நல்ல வாசகியாகவும் திகழ்ந்தார். இவையெல்லாம் பிற்காலத்தில் இவரது பொறுப்பான பதவிகளுக்கான மனவிரிவையும் அறிவூட்டலையும் கொடுத்தன எனத் திடமாக நம்பலாம்.

பட்டப்படிப்பைச் சிறப்பாக நிறைவு செய்து கொண்ட பின் இவரது ஆசிரிய சேவை முதன்முதல் 1950 ஆம் ஆண்டு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமானது.

உயர்ந்து நிமிர்ந்த தோற்றம், பரபரக்கும் விழிகள், கட்டுமட்டான உடை, அள்ளி அப்பிவிட்டது போன்ற வட்டக்கொண்டை, 'மிஸ். இராமநாதன்' வகுப்பெடுக்கிறா என்றாலே அவ்வகுப்பில் வேறு ஜீவன்கள் ஒன்றுமே இல்லையென்று சத்தியம் செய்யக்கூடியளவுக்கு நிசப்தம் கோலோச்சும். அவ்வளவுதூரம் மாணவிகள் பாடத்தில் ஒன்றிப்போய் அமைதியாகவும் அடக்கமாகவும் இருந்து தொழிற் படுவர். ஆசிரியரின் குரல்கூட 'ஒலிபெருக்கி' போலன்றி அளவாகவும் அழகாகவும் தொனிக்கும். மாணவிகளுக்கும் ஏதாவது தவறு ஏற்படின் கைகால் நடுக்கமெடுக்கும் என்ற உண்மையையும் மறைத்துவிட முடியாது.

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பல்வேறு நிகழ்ச்சிகள், போட்டிகள், இலக்கிய சங்கம் எனப்பல நிகழ்வுகளில் ஏனைய ஆசிரியர்களோடு இணைந்து கல்லூரியின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்குமாகப் பெருந் தொண்டாற்றிய பத்மா. இராமநாதன் தனது சேவையில் இருபத்தாறு வருடங்களைக் கடந்தபின்னர் உப அதிபராகப் பதவியேற்கும் வாய்ப்புத் தானாகவே கிட்டியது.

பாடசாலை முன்னேற்றத்தையும் நற்பெயரையும் பெறுவதற்கு மாணவர்களின் ஒழுக்கம், கல்வி, கட்டுப்பாடு, கீழ்ப்படிவு, திறமை என்பவற்றோடு புறக்கிரியைகளான நடனம், நாடகம், விளையாட் டுக்கள், உடற்பயிற்சி, இசை என்பவற்றிலும் கூட அதிக கவனம் செலுத்தி உரிய முறையில் பயிற்சி கொடுப்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்து உழைத்த பெருமை பத்மா இராமநாதனுக்கேயுரிய தனிச் சிறப்பாகும்.

பாடசாலைக்குத் தேவையான கட்டிட வசதிகளை ஏற்படுத்து வதில் கூட திருமதி.சரோஜினிராவ் கல்லூரியின் அதிபராகப் பணி செய்த போது இடம்பெற்ற கட்டிட நிதிசேகரிப்பதற்கான களியாட்ட விழாவின் பொறுப்பை ஏற்று மிகுந்த உற்சாகத்தோடு பாடுபட்டு உழைத்ததனால் பாராட்டையும் பரிசையும் பெற்றுக்கொண்ட பெருமையை உடையவர் இவர்.

மாணவருடைய அறிவு வளர்ச்சிக்குத்துணையாகப் பாடநூல்கள் இருந்தாலும், மேலும் ஆழமாகக்கற்று அறிவை விருத்தி செய்வதற் காகக் கல்லூரி வாசகசாலைக்கு ஏராளமான நல்ல நூல்கள், புதுபுதுச் சஞ்சிகைகளையெல்லாம் கூட ஒழுங்காகப் பெற்றுக் கொடுத்து மாண

விகள் வாசிப்பதில் ஊக்கப்படுத்திச் செயல்பட வைத்தார். இவருடைய அதீதமான கவனத்தாலும் அக்கறையாலுமே அநேகமான மாணவிகள் சோம்பலை அறவே ஒழித்து கலை, இலக்கிய, இசை, நடன, விளை யாட்டுத்துறைகளிளெல்லாம் பெற்றோரும், மாணவரும், கல்வி உத்தி யோகத்தரும் வியப்புறும் வண்ணம் மேற்படி துறைகளில் மிகுந்த திறமையும் முன்னிலையும் பெற்று விளங்கினார்கள். வட்டார மாவட்டப் போட்டிகளிலெல்லாம் தமிழ், ஆங்கில, விஞ்ஞான, விளையாட்டுத் துறைகளில் மாணவர் ஈட்டிக் கொடுத்த வெற்றிகள் கல்லூரியின் பெயரை மேல்நிலைக்கு உயர்த்தியது.

'கடமையே சுவர்க்கத்தின் திறவுகோல்' என்பர். இதற்கு இலக் கணமாகவே விளங்கிய பத்மா இராமநாதன் தன்னைப் போலவே தன்னிடம் கல்விபயிலும் மாணவர்களும் கடமையுணர்வு மிக்கவர் களாகவே வாழ வேண்டுமென்ற பெருவிருப்பில் ஒரு சில விடயங் களில் வெகுகண்டிப்பாகவும், கடுமையாகவும் இருந்தாலும், பிள்ளை களைத் தனது சொந்தக்குழந்தைகள் போல அன்புகாட்டி, அரவணைத்து, ஆதரவோடு இதமாகவும் நடந்து கொள்வார். ஆகையால், மாண விகளும் அவரை அன்போடு வணங்கி மகிழ்ந்து இணைந்து கொள்வர். இயல்புக்கு மீறிய வகையில் மிக அதிகமான ஞாபகசக்தி கொண்டிலங்கிய இவருக்குக் கல்லூரியில் கற்கும் மாணவிகள் அவர்களது பெற்றோர்கள், அவர்களது குடும்பச்சூழ்நிலை, அவர்கள் வாழும் இடம் என சகலதுமே அத்துப்படி. படித்துக் கொண்டிருக்கும் மாணவிகளின் இத்தனை விபரங்களும் மாத்திரமல்ல, பல வருடங்களுக்கு முன்படித்துக் கல் லூரியை விட்டுவிலகிய மாணவிகளின் சகல விபரங்களும் இவரது விரல்நுனிகளிலே பதியப்பட்டிருக்கும். இத்தகைய அமானுஷ்யமான நினைவாற்றல் அம்மையாரின் திறமைக்கும் ஆளுமைக்கும் வளம் சேர்த்தன எனலாம்.

ஒரு உயர் பதவியிலிருப்பவர் அப்பதவிக்குள்ள தன்மைகளி லிருந்து சிறிது குறைவாக இருக்கும் போக்கை சில இடங்களில் நாம் அவதானிக்கலாம். ஆனால், பத்மா அம்மையாரைப் பொறுத்தளவில் இவர் உப அதிபராகப் பொறுப்பேற்றிருந்த வேளையிலேயே அதி பருக்குரிய ஆளுமையும் தனித்துவமும் கொண்ட தலைவியாக விளங் கியதைப் பலரும் அவதானித்திருப்பர்.

கல்லூரியையும் அங்கு பயிலும் மாணவிகளையும் தனக்கு மிக உரித்தானவை என்ற உணர்வோடு தவறுநேரின் கோபித்துக் கண்டிப் பதும், நற்பெயர் புகழ் எய்தும் போது படாடோபமின்றி அடக்கமாகப் பாராட்டி மகிழ்வதும் இவரது இயல்பான குணசித்திரமாகும். மாணவிகள் பிரத்தியேக நிகழ்ச்சிகளில் பங்கேற்று வெற்றியீட்டும் போதெல்லாம் மகிழ்ந்து ஆசீர்வதிப்பார். இத்தகையதொரு அனுபவம் இக்கட்டுரை யாளருக்குக் கடந்த ஐம்பதுகளில் ஏற்பட்டதுண்டு. கல்லூரி முதன் முறையாக 'இலங்கை வானொலியில் தமிழ்ப்புலமைக்கு ஆங்கிலம் அவசியமா?' என்ற விவாதத்தில் நாம் கலந்து கொண்டு வெற்றியீட்டிக் கல்லூரிக்குத் திரும்பியபோது அதிபருட்பட எல்லா ஆசிரியர்களுமே காலை இறைவணக்க நேரத்தில் எமது வானொலி உரை பற்றிய அறிவித்தல் கொடுத்துப் பாராட்டினர். அவற்றுள் பத்மா அம்மையாரின் பாராட்டு இன்று நினைத்துப் பார்த்தாலும் நெஞ்சைக் குளிரவைக்கும் அற்புதமானது; என்றுமே மறக்க முடியாதது. அப்படியாக ஒவ்வொரு மாணவியையும் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்துவார்; உரிமை கொண்டாடுவார்.

குடும்பப் பொறுப்புமின்றிச் செல்வியாக வாழ்ந்தமையால் கல் லூரியே தன் குடும்பமாகவும் மாணவிகளே தன் குழந்தைகளாகவும் வரித்துக் கொண்டு பிள்ளைகளைச் சைவப் பண்பாட்டில் பழக்கும் நோக்கமாக இறைவணக்கம், பூஜை வழிபாடுகள், விரத அனுட்டிப்பு முறைகள் இவற்றிற்கான பயிற்சிகள் பழக்கவழக்கங்களையெல்லாம் சொல்லிக் கொடுத்தார். பூஜைக்கான ஆயத்தங்கள் செய்தல், கோலமிடல், பூக்கள் பறித்தல், பூமாலை கட்டுதல் என்பவற்றையெல்லாம் மாண விகள் கற்றுக்கொள்ள வாய்ப்பாகக் கல்லூரி வளாகத்திலேயிருந்த பிள்ளையார் கோவிலை நன்கு பயன்படுத்தினார். பூசைக்கான பூக்கள் பறிக்க மாணவிகளே பூந்தோட்டமமைக்கவும் தூண்டிவிட்டார். இவர் காலத்திலேயே பூப்பந்தாட்டமும் அறிமுகமாகியது.

ஓய்வான வேளையில் பூப்பறித்து மாலைகட்டவும் பழக்கிவிடுவார்; சுத்தம் சுகாதாரத்தைப் பேணவும் ஊக்குவிப்பார்.

விநாயகர் ஆலயத்தையும் தினமும் சென்று வணங்குவதோடு பூஜைகள் ஒழுங்காக இடம்பெறவும் உதவிகள் செய்தார். ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகமும் நடத்திவைத்தார்.

ஏ.எல்.வரையிலான வகுப்புக்களுக்கு சமயம், அரசியலும் என்ற பாடங்களுக்கானபொறுப்பைத் தானே ஏற்று நடத்தினார்.

கல்லூரி இயக்கத்தில் இவருக்கிருந்த ஈடுபாடும், தன்னலமற்ற இடையறாத உழைப்பும், தகுதிப்பாடுகள் நிறைந்த இவரது ஆளு மையும் ஒன்றிணைந்து 1976 தொடக்கம் யாழ்.இந்துமகளிர் கல்லூ ரியின் அதிபர் பதவி இவரைத் தேடிவந்தது. மகிழ்ச்சியாக இம் மாபெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டே அம்மையார் முன்னரை விடமேன்மேலும் கூடிய கவனமும் அக்கறையும் கொண்டு கல்லூரியின் முன்னேற்றத்திற்காகப் பல திட்டங்களைத் தீட்டி ஓய்வொழிச்சலின்றிப் பாடுபட்டார்.

விஞ்ஞான ஆய்வு கூடம், 10 அறைகளைக் கொண்ட மேல் மாடிக்கட்டிடம், விடுதிக்கும் பாடசாலைக்குமிடையிலான மதில், சுற்று மதில் எனப் பல விடயங்களைக் கருத்திலெடுத்து சகலரதும் ஒத் துழைப்பைப் பெற்று பாடசாலையின் தேவைகளை ஓரளவு நிறை வேற்றினார். குடும்பவாழ்வில் சிக்கனமும் கருத்திலெடுக்க வேண்டிய விடயமென்பதை மாணவிகளுக்கும் உணர்த்துவதுபோல, கல்லூரி வளாகத்திலுள்ள மாமரத்தின் மாங்காய் போன்றவற்றை விற்றும் கட்டிடத்திற்கு உபயோகித்த சீமேந்துபையின் உறைகைளச் சேர்த்து விற்றும் அப் பணத்தைப் பாடசாலைத் தேவைகளுக்குப் பயன் படுத்தினார்.

விடுதியிலுள்ள மாணவிகளோடு அன்பாகத் தாய்போல நேசித்தும், புத்திமதிகள் சொல்லியும், விழுமியங்களைக் கடைப்பிடித்தொழுக வழிகாட்டியும் சமயம் சார்ந்த வாழ்வுக்கு அடிகோலியும் விட்டார்.

மாணவிகளுக்கு எந்தெந்தத்துறைகளில் ஆர்வம் வெளிப்படுகிறதோ அவற்றை அவதானித்து அத்தகைய ஆர்வத்தை வெளிக்கொணரத் தூண்டிவிடுவதில் பெரும்பங்கு கொண்டார். இத்தகைய பண்பினால் சிறுமிகள் இவரைத் தாயாக அன்புசெலுத்திப் பாராட்டினார். பாலர் களுக்கான ‘பாலர் பா அமுதம்’ என்ற நூலொன்றையும் வெளியிட்டார். (இளஞ்சிறுசுகள் இயற்றிய பாக்களைக் கொண்ட தொகுப்பே இந்நூல்.) - இதனை வெளியிட்டதும் பிள்ளைகளுடைய மகிழ்ச்சியோ சொல்லி மாளாது. இப்படியாக அவரவர் இயல்புக்கேற்ப அவர்களோடு இணைந்து அவர்களது சிறப்புகளுக்கு வளம் சேர்த்து விடுவதில் வல்லவராக உதவினார்.

ஒரு சமூகத்ததை முன்னோக்கி வளர்த்தெடுப்பதில் பெண்களின் பங்கு பெரும்பங்கென்பதை முற்றுமுழுதாக உணர்ந்த அம்மையார் மாணவிகளுக்கு ஏட்டுக்கல்வியை மாத்திரம் புகட்டிவிடுவதில் கவனம் செலுத்தாது உடல்கல்வி சுகாதாரம், மனவளர்ச்சி, அரசியலறிவு, சமூக பொருளாதார நிலைமைகள், சமய வழிபாட்டு முறைகள், அவற்றின் அர்த்தங்கள், எமது பண்டைய வரலாறு, தமிழின் இனிமையும் மேன் மையும் எனப் பலவழிமுறைகளிலும் மாணவச் செல்வங்களின் சிந்தனையை விரிவடையச் செய்து அவற்றில் பயிற்சிகளும் பாடங்களும் போட்டிகளும் இடம்பெறச் செய்து விறுவிறுப்பாக ஒவ்வொரு வரும் பங்குகொண்டு விவேகமுற வழிவகுத்தார். சைவத் துக்கும் தமிழுக்குமாக உழைத்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெரு மானை அடியொற்றி எப்படித் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயப் பரிபாலக சபைத்தலைவர், சொல்லின் செல்வியும் தெய்வத் திருமகளுமான செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் இறை பக்தியையும் சைவத்தொண்டையும் சமயச் சூழலையும் மேம்படுத் தினாரோ அத்தகைய நிலையில் பத்மா இராமநாதன் அம்மையாரும் பெண் குழந்தைகளைக் கல்விப் பணியிலும் அறிவிலும் முன்னணியில் இருக்கப் பலவாறும் உழைத்தார். சமயம் தமிழ்க்கல்விப் போதனை களோடு மட்டுமன்றி நாளாந்தக்கடமைகள் சைவாசாரமான பழக்க வழக்கங்களுடன் நடைபெற வழிகாட்டினார். சிவாராத்திரி, நவராத்திரி, ஐப்பசி வெள்ளி, புரட்டாதிச் சனி போன்ற விசேட விரதநாட்களிலெல்லாம் விரதங்களை மேற்கொண்டு புனிதமான தினங்களாக அவற்றை அனுட்டிப்பதில் தானே முன்னுதாரணமாக நடந்து பிள்ளைகளையும் பங்கேற்கச் செய்தார். சைவம் என்றால் 'மங்கலம்' என்பர் பெரியோர். பெண் குழந்தைகளெல்லோரும் சைவமாக சமயத்தை கடைபிடித்தே வளரவேண்டு மென்பதே இவரது ஆசை. ஏழை எளிய மாணவிகளிடமும் குறைபாடுகளுள்ள குழந்தைகளிடமும் திறமை ஆற்றல் இருப்பதை அவதானித்து இரண்டாம் பேர்வழிக்குத் தெரியாமலே இரகசியமாக அவர்களுக்கு உதவிசெய்து அவர்களை மேம்பாடடைய வளர்த்து விடுவதில் கருணை கொண்டு உதவுவார்.

பழமையிலேயே திடமான நம்பிக்கையும் ஊற்றமும் மிக்க இவர் புதுமையையும் இரு கரங்கூப்பி வரவேற்று மகிழ்வார். ஆகையினால் தான் பழைய மரபில் ஊறித்திளைத்த யாழ்ப்பாண இந்துப்பாரம்

பரியச் சூழலிலும் மாணவிகளை நவீன முறையோடு கூடிய நடனம், நாடகம், விளையாட்டுத்துறை என்பவற்றிலெல்லாம் பங்குகொண்டு கல்லூரிக்கு நற்பெயரும் புகழும் ஈட்டிக் கொடுக்கும் வகையில் உற்சாகப்படுத்தினார். இக்கல்லூரி மாணவிகள் நடித்து வெற்றியீட்டிய 'கற்புக்கனல்', 'நளதமயந்தி' எனும் நாடகங்கள் குறிப்பிடக்கூடியவை. மாணவருடைய கற்பனை ஆக்கத் திறன்களையெல்லாம் வியந்து பாராட்டி மகிழ்வார். இத்தகைய அனுபவங்களை இக்கட்டுரையாசியர் நேரடியாகப் பெற்றசந்தர்ப்பங்கள் பல உண்டு.

இவர் யாழ். இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட காலத்திலிருந்து கல்லூரி, கல்வி, புறக்கிரியைகள், விளையாட்டு, கல்வியமைச்சு நடத்தும் போட்டிகள் எனச் சகல துறைகளிலும் பங்கு கொண்டு பல வெற்றிகளை அடுக்கிப் பரிசுக் கிண்ணங்களைச் சேர்த்ததோடு துரிதமான வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் கண்டது. கல்லூரியின் இத்தகைய வேகமான வளர்ச்சிக்கு இராமநாதன் அம்மையாரின் திறமையான நிர்வாகம், கட்டுப்பாடு, ஒழுங்கு என்பவற்றோடு நீண்டகாலம் ஒரே பாடசாலையிலேயே அவர் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருந்தமையால் ஒவ்வொரு மாணவியின் பிறப்பு, வளர்ப்பு பெற்றோர், வீட்டுப் பொருளாதாரச் சூழல் என்பவற்றோடு மாணவிகளின் விரல்கீற்று இறைகளைக் கூடப் பெற்றோரை விட இவரே அதிகமாகத் தெரிந்து வைத்திருந்த தன்மையும் தான் ஒரு காரணமெனத் துணிவாகக் குறிப்பிட முடியும்.

'நேரந்தவறாமை, ஒழுங்கு, கட்டுப்பாடு, கல்வியில் கண்' என்பன எப்படியும் வெற்றிக்கனியைக் கரங்களில் திணிக்கும் என்பதில் சந்தேகமேயில்லை என்பதற்கிணங்க அம்மையாரின் நிர்வாகச் சிறப்பால் கல்லூரியின் இறுதிப்பரீட்சை முடிவுகளே வருடாவருடம் ஏராளமான மாணவிகளைப் பல்லைக்கழகக் கல்விக்கு இணைத்துக் கொண்டது. கல்வியில் முன்னணியில் நின்றால் மாத்திரம் வாழ்வின் வெற்றி நிலையடைந்து விட்டோம்என்ற தவறான எண்ணத்திற்கு இடமேயின்றி நாளாந்தம் நமது நடவடிக்கைகளில் ஒவ்வொறு சிறு சிறு விடயங்களிலும் நேர்மை, நிதானம், கட்டுப்பாடு, ஒழுங்கு என்பவற்றைக் கடைப்பிடிக்க வழிகாட்டிய பெருமையை என்னென்பது! தினமும் ஆயிரக்கணக்கான மாணவிகள் சைக்கிள்களில் கல்லூரிக்கு வருவர். கால் நடையாக வருவோர் ஏனைய வாகனங்களில் வருவோர் பலரும் தினமும் வந்து

சங்கமிக்கும் வாயில்களில் சைக்கிளில் வரும் பிள்ளைகள் யாவரையும் பொறுமையாக ஒருவர் பின் ஒருவராக வந்து தரிக்கும் ஒழுங்குகளை யெல்லாம் நன்கு கவனித்துக் கட்டளைகளை வழங்குவார். இப்படி யாகக் கல்லூரியின் முன்வாசல் தொடக்கம் பின்புறம் வரை ஒவ்வொரு அங்குல நிலத்திலும் இடம்பெறும் விடயங்களை வெகு கச்சிதமாகவே கையாளும் வல்லமை மிக்கவராக அம்மையார் விளங்கினார்.

இத்தகைய பல சிறப்புக்களையும் கல்லூரியைப் பல வழிகளில் விரிவுபடுத்தியும் பல வெற்றிகளையும் முன்னிலைகளையும் ஏற் படுத்திக் கொடுத்த அம்மையாரின் நிர்வாக காலத்தைக் கல்லூரியின் பொற்காலமெனப் பலரும் புகழ்ந்து பாராட்டி மகிழ்வர்.

சேர்.பொன் இராமநாதன் துரைபோலவே யாழ்.மாநகர எல்லைக் குள் பெண்களுக்கான கல்விநிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டு மென்ற ஆலோசனைக் குழுவில் முன்நின்று உழைத்த வண்ணார் பண்ணை 'சான்டோ' முத்துச்சாமிப் பிள்ளை, யாழ். இந்துக் கல்லூரி அதிபர் குமாரசுவாமி, இந்துபோட் இராசரெத்தினம், சிவகுருநாதர் ஈ.பி இராசையா போன்ற கல்விமான்களும் இந்து சமயப் பெரியார் களும் ஒன்றிணைந்து இந்து மகளிர் கல்லூரியின் தேவை யொன்றினை மன ஆழத்தில் பதித்துக் கொண்டனர். கல்வித் தேவைக்காக உடனடியாக மதம்மாறிக் கல்வியைப் பெற்றுக் கொண்டோரில் சிலர் அம்மதத்திலேயே ஊறிப்போன சங்கடங்களும் சைவசமயத்தை வெகுவாக உறுத்தியது. இதன் காரணமாகவே இந்து மகளிருக்கான கல்விக் கூடம் யாழ் இந்துகல்லூரியின் கிளையாகக் கஸ்தூரியார் வீதியிலிருந்த வீடொன்றில் ஆரம்பமானது.

சைவப் பெரியாரும் பல நல்ல காரியங்களுக்குக் கைகொடுத் துதவியருமான பேராசான் சிவகுருநாதரும் அவரது பாரியாரும் சைவமகளிரைக் கல்வியோடு கைதூக்கிவிட முன்வந்ததன் விளைவே நடுத்தோட்டத்தில் இருந்த இவ்வினிய தம்பதிகளின் சில ஏக்கர் நிலங்களைக் கல்லூரி வளாகத்திற்கெனப் பெருமனத்தோடு கையளித்தது. பெரியார் சிவகுரு நாதர் தம்பதியின் எழிலார்ந்த காணியின் மையத்தில் கம்பீரமாகக் காட்சிதரும் கட்டிடமே இந்து மகளிர் கல்லூரியாக இத்தனை காலமும் பரிணமித்து விளங்குகிறது.

இக்கல்லூரியின் அதிபர் குழாமில் முதல்முறையாகப் பணி யாற்றியவர் திருமதி முத்து சோமையா. 'அச்சயா' எனச் செல்லமாகவும்

இவரை அழைப்பர். தொடர்ந்து திருமதிகள் சிற்றம்பலம், கிளாரா மோட்வாணி, சரோஜினி ராவ், விமலா ஆறுமுகம் என நீண்ட வரிசையில் பத்மா இராமநாதன் அம்மையாரின் காலமே மிக நீடித்த காலமாகவும் ஏராளமான செயற்பாடுகள் அமைந்த காலமுமாக அமைந்தது. ஏனைய அதிபர்களும் பாடசாலையின் நந்நோக்கம் கருதிப் பல செயற்பாடுகளில் துணிகரமாகக் காலூன்றி உழைத்தமை கல்லூரியின் வளர்ச்சிக்கும் மாணவிகளின் முன்னேற்றத் திற்கும் பெருந்துணையாக அமைந்ததோடு, அம்மையார் மேற்கொண்டு கல்லூரியை வளர்ச்சிப் படியில் இட்டுச்செல்வதற்கும் உதவியாக அமைந்தது என்பதை நாம் கவனத்திற்கொள்ளாமலில்லை. அம்மையாருடைய சேவைகளை நினைவுகொள்ளும் இவ்வேளையில் ஏனைய அதிபர்களுடைய தியாகத்தையும் பணிகளையும் பாராட்டிக் கௌரவப் படுத்த வேண்டிய கடமைப்பாடு மாணவிகளான எமக்கு என்றென்றும் நினைவிலுண்டு என்பதையும் நாம் குறிப்பிடுவதோடு எமது பணிவான நன்றியையும் நல்லெண்ணங்களையும் அவர்களது பாதங்களில் சமர்ப் பிக்கின்றோம்.

காஞ்சியில், காசியில், மதுரையில் இருந்து அருளாட்சி நடத்தும் ஆதிபராசக்தியின் அன்புப் பிரவாகம் போல, அதிபரின் காரியாலய அறையில் உட்கார்ந்தபடி கல்லூரியின் நாலாபக்கங்களிலும் நடைபெறும் விடயங்களில் கருத்துடன் கண்ணோட்டம் செலுத்தும் பத்மா இராமநாதன் அம்மையார் 24-6-1986 ல் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். ஓய்வு நாட்களெல்லாமே கல்லூரி பற்றிய கனவாகவே கழிந்தது அவருக்கு.

சில நாட்கள் நோயுற்றிருந்த இவர் 1987 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஐந்தாம் திகதி இவ்வுலகிலிருந்தே நிரந்தர ஓய்வுபெற்று மறைந்தார்.

## பின்னிணைப்பு

# டாக்டர் மேரி ரட்ணம்

## [1873 – 1962]

இந் நாட்டில் சமூக சேவைத் துறையில் இவருடன் போட்டியிடத்தக்கவர் எவருமில்லதாவாறு, தான் புகுந்த நாட்டில் எத்தகைய சன்மானத்தையும் எதிர்பார்க்காது டாக்டர் மேரி ரட்ணம் தீவிரமாகச் சேவையை ஆற்றினார். கனேடியரான இவர் நகர்ப்புறவறியோர், கிராமமக்கள், ஆகியோரது பிரச்சினைகள், தேவைகள் பற்றி ஏனைய இலங்கையரை விட ஆழ்ந்த விளக்கம் கொண்டிருந்தார். இவரது பெரும்பணி பெண்கள் நிறுவனங் களை இலங்கையில் அறிமுகப்படுத்தியமையாகும். 'லங்கா மஹி சமிதி கிராமங்கள் தோறும் பரந்துவளர இவரது அயராதமுயற்சிகள் காரண மாகின. பல வருடங்களாக வறியோர் வாழ்வு நிலைமைகள் முன்னேறத் தொடர்ந்து, அயராது உழைத்தார். ஏனைய பெண்கள் பின்பற்றக்கூடிய மேன்மையான உதாரணமாக மேரி ரட்ணத்தின் வாழ்க்கை அமைந் துள்ளது. அவர் ஆரம்பித்த பணிகள் இளம் தலைமுறையால் அதே தீவிரத்துடன் தொடரப்பட வேண்டும் என இலங்கையின் முன்னணி ஆங்கிலப் பத்திரிகையான 'சிலோன் ஒப்சேவர்' 1949 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3 ஆந்திகதி ஒரு மேன்மையான உதாரணம் என்ற தலைப்பில் டாக்டர் மேரிரட்ணத்தின் 76 வது பிறந்த தினத்தையொட்டி ஒரு கட்டுரை வெளியிட்டுப் பாராட்டியது.

அந்த 'ஒப்சேவர்'பத்திரிகையின் கட்டுரையில் குறிப்பிட்டுள்ள விடயங்களே டாக்டரின் அளவற்ற சேவையையும் பொதுநலத் தொண்டின் பாரிய கண்ணோட்டத்தையும் துலாம்பரமாக விளக்கு கின்றது.



மேரி ரட்ணம்

கனடாவிலுள்ள வளமும் செழிப்பும் மிக்க ஒன்ராறியோ மாகாணத்தில் 'பிரஸ்பெற்றியன்' திருச்சபையைச் சேர்ந்த எலிஸபெத் பார் என்பவருக்கும் ஜோன்வில்லியம் ஏர்வின் என்ற தந்தையாருக்கும் குழந்தையாக இவர் 1873 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 2 ஆம் திகதி பிறந்தார். இவருடன் கூட ஒரு சகோதரியும் இரு சகோதரர்களும் இருந்தனர். கற்றறிந்த, சமூகப்பணியில் ஈடுபாடு மிக்க, நல்ல சூழலில் வளர்ந்த மேரி ஏர்வின் ரொரன்றே பல்கலைக்கழகத்தில் இணைந்த ரினிட்டிக் கல்லூரியில் மருத்துவக் கல்வி பயின்று பட்டமும் பெற்றார்.

கிறிஸ்தவ மிஷனறிகள் பெண்களின் கல்வி வளர்ச்சிக்காகவும், ஒழுங்குகட்டுப்பாடுடனான சீரான வாழ்வின் மேன்மைக்காகவும் பாரிய பணிகளில் ஈடுபட்டிருந்தபோது உலக சகோதரத்துவம் என்ற அவர்களது கருத்துக்கள் மேரி ஏர்வினை மிகவும் கவர்ந்தன. இத்தகைய பணிகளில் தம்மைக் கரைத்துக் கொள்வதற்காக நியூயோர்க்கில் இடம் பெற்றிருந்த பயிற்சிப்பயிலரங்குகளில் இவரும் பங்குபற்றி வைத்திய சேவை, பெண்களுக்கான விஷேட பணிகள் என்பவற்றிலெல்லாம் கருத்துச் செலுத்தி நன்கு கற்றுக் கொண்டார்.

நியூயோர்க்கில் இருந்தபோதே யாழ்ப்பாணம் வேலணையைச் சேர்ந்த ஒருவர் இவர் மனதில் இடம்பிடித்துக் கொண்டார். அவர் வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தாலும், அங்கிருந்த அமெரிக்க மிஷன் கல்லூரியில் கல்விகற்று சென்னையில் மேற்படிப்பை மேற்கொண்டு மெய்யியல் பட்டதாரி ஆனபின், மும்பையில் ஆசிரிய சேவையில் ஈடுபட்டிருந்தார். மக்களைக் கவரும் பேச்சாற்றலும் அர்ப் பணிப்புமிக்க சேவையையும் அவதானித்த பிரித்தானியர் அவரைப் பணியிலமர்த்தி இருந்தபோதே நியூயோர்க் செல்லவும் அவருக்கு வாய்ப்புக் கொடுத்தது. யாழ்ப்பாணம் அமெரிக்க மிஷனைச் சார்ந்த பாதிரியார் வண.ஜே.எஸ். கிறிஸ்மஸ் என்பவருக்கும், பள்ளி ஆசிரியை யாயிருந்ததோடு உலகவரலாற்றுப் பாடநூல் ஒன்றை எழுதி சிறப்பு பெற்ற ஒரு பெண்ணுக்கும் பிறந்த குழந்தையென்ற பெருமை இவருக் குரியது. கனகரட்ணம் மெய்யியலிலும் தர்க்கவியலிலும் எம்.ஏ. பட்டத்தைப் பெற்றவர். இந்து சமயத்துறவியான சுவாமி விவே கானந்தரின் சிக்காகோ சொற்பொழிவுக் கெதிராகச் சில கருத்துக் களையும் இவர் முன்வைத்தவர்.

சமயத்தால் மேரி ஏர்வினும் கனகரட்ணமும் ஒன்றுபட்டாலும் காலனித்துவ, சமூகமரபுகளால் வேறுபட்டிருந்தனர் எனினும் அவற்றைப் பொருட்படுத்தாமல் அன்பாலும் சமூக நேசிப்பாலும் சேவை ஈடுபாட் டாலும் இருபெரும் கலாசாரங்களான கிழக்கும் மேற்கும் இணைவது போல திருமணத்தால் இருவரும் ஒன்றிணைந்தனர். இப் பந்தத்தினைப் பலர் எதிர்த்தனர்; அவதூறு பேசினர். ஆனால், கனகரட்ணம் தம்பதியோ அவற்றிற்குச் செவிசாய்க்கவில்லை. நாலு ஆண்குழந்தைகளும் ஒரு பெண்ணுமாக இவர்களுக்கு ஐந்து குழந்தைகள் பிறந்தனர். மூத்தவர் அலன் ரட்ணம். இவரொரு மருத்துவ நிபுணர். அடுத்தவர் டொனால்ட் ரட்ணம் சிவில் அதிகாரியாகப் பட்டம் பெற்றுப் பல உயர்பதவிகளை அலங்கரித்தவர். மூன்றாமவர் றொபின் ரட்ணம். இவர் உளவியல் முதுமாணிப்பட்டம் பெற்று பல உயர் பதவிகளிலமர்ந்து சேவை யாற்றியதோடு எல்.எஸ்.எஸ்.பி இயக்கத்தின் ஆரம்ப கர்த்தாக்களுள் ஒருவராகவும் திகழ்ந்தார். நான்காவது மகன் வால்டர் ரட்ணம். முதுமாணிக் கல்வி பெற்ற இவர் தொழில்நுட்ப நிறுவனங்களின் அதிபர் பதவியை வகித்தவர். ஐந்தாவதாகப் பிறந்த பெண் குழந்தை கொழும்பு பெண்கள் கல்லூரியில் கற்றவர். இவரது பெயர் ஹெலன்

ரட்ணம். இவர் மொழியியல் பட்டம் பெற்றுக் கொழும்பின் முன்னணிக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றியவர். மேரி ரட்ணம் தம்பதியின் பிள்ளைகள் யாவரும் துறைதோய்ந்த கல்விகற்று மிக உயர்ந்த பதவி களை வகித்த பெருமை மிக்கவர்களே!

மேரி ஏர்வின் யாழ்ப்பாணம் அமெரிக்கமிஷன் வைத்திய சாலையில் வேலைசெய்தபோது மக்களோடு நெருங்கிப்பழகவும் உறவாடவும் உரையாடவும் இலகுவாகத் தமிழ்மொழியைக் கற்றுக் கொள்ள விரும்பினார். அதனால் தன் கணவர் கனகரட்ணத் திடமே ஓரளவு தமிழையும் கற்றுக் கொண்டார்.

இணுவிலில் இன்றும் பிரபலமாக இயங்கிக் கொண்டிருக்கும் பெண்களுக்கான மகப்பேற்று-பிரசவ வைத்தியசாலை, அப்போது மக்லியாட் வைத்தியசாலை என்ற பெயருடன் விளங்கியது. அதனை ஆரம்பித்து வைத்த பொறுப்பும், புகழும் டாக்டர் மேரி ரட்ணத்தையே சாரும்.

சமூக சீர்திருத்தத்தையும், மாற்றத்தையும், மேம்பாட்டையும் நோக்கிப் பயணிப்போர் பல எதிர்புக்களுக்கும், தடைகளுக்கும், முரண்பாடுகளுக்கும் முகம் கொடுக்க வேண்டி ஏற்படும் என்ற விதிக் கிணங்க ஆங்கிலேய ஆட்சியின் கீழிருந்த இலங்கையில் கனேடிய பட்டத்துடன் உள்ள டாக்டர் மேரி ரட்ணத்தை நிரந்தரப் பணியில் அங்கீகரிக்கவில்லை. எனவே, இவர் தற்காலிகப் பணியில் அமர்ந்து வேலை செய்து கொண்டு பல்வேறு வகைகளில் முயற்சித்தும் பயனின்றிப் போகவே தனியார் மருத்துவத் தொழிலை ஆரம்பித்து நடத்தினார். ஏழைமக்களுக்கும், அறியாமை இருளில் அமிழ்ந்து கிடக்கும் அறிவிலிகளுக்கும் வாழ்வில் ஒளியேற்றி அவர்களை உன்னத நிலைக்கு இட்டுச் செல்லவேண்டுமென்ற நோக்கில் பல அமைப்புக்களை ஏற்படுத்தினார். அவற்றில் மிக உயர்ந்ததும் பல சேவைகளை ஆற்றியதுமான 'லங்கா மஹி சமிதி' என்பதைக் குறிப் பிடலாம். இவ்வமைப்பு சாதி, சமய, இனம், மொழி கடந்த அமைப்பாக கிராமிய மக்களை மேம்படுத்துவதற்காக சுகாதாரம், முதலுதவி, வீட்டு நிர்வாகம், அலங்காரம், சுத்தம், நோய்த்தடுப்பு, சிறுவர் பராமரிப்பு, சமையல், உணவு பேணுதல், சிறுவர் கல்வி, விவசாயம், ஓய்வு நேர உபயோக மாகக் கால்நடை வளர்த்தல், தையல், கைப்பணி, பின்னல் வேலைகள், ஓவியம், நடனம், நாடகம், இசை என்பவற்றிலெல்லாம்

இலகுவான பயிற்சிகள் அளித்து மக்கள் வாழ்வை உயர்த்த வழி செய்தது. இவ் வமைப்பின் முதலாவது தலைவராகப் பொறுப்பேற்ற மேரி ரட்ணம் தொடர்ந்தும் சுமார் 13 ஆண்டுகள் அப்பணியிலிருந்து அளப்பெருஞ் சேவையாற்றினார். அறிவுபூர்வமான பல விடயங்களை கிராமியப் பெண்களுக்கு ஊட்டியதோடு சமூக சேவை செய்வதில் ஆர்வத்தையும் தூண்டிவிட்டார். லங்கா மஹி சமிதியின் ஆரம்ப கர்த்தாவும் இலங்கையின் முதன் முதல் செனட்டர் பதவியேற்ற வருமான சி.சி.குரே என்பவர் "கிராமப் பெண்கள் மத்தியில் பெரும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய பெருமைக்குரியவர் டாக்டர் மேரி ரட்ணம்" என இவரை மனதாரப் பாராட்டி மகிழ்ந்ததுண்டு.

பல சிறுவர் பராமரிப்பு நிலையங்களும், சிறுவர் பாடசாலை களும் முளைவிட ஏதுவாக இருந்த டாக்டர் மேரி ரட்ணம், குடும்பத் திட்டக்கொள்கையையும் வற்புறுத்தித் கிழக்குலகிலே முதன்முதலாகக் குடும்பத்திட்ட கிளினிக்கொன்றை ஆரம்பித்து வைத்தசராவார்.

மானுடவாழ்வின் வெற்றிரகசியம் குடும்பத்தை மையமாகக் கொண்டதென்பதிலும், குடும்பத்தைச் செம்மையான முறையில் வழி நடத்த வேண்டியவள் பெண் என்ற வகையிலும் உறுதியான எண்ணங் கொண்ட டாக்டர் மேரி ரட்ணம் சிறுவர் நலம், பராமரிப்பு, பிரசவம் என்பன தொடர்பான பல கண்காட்சிகளை நடத்தியதோடு 1924 இல் பெண்களுக்கான கல்வி, தொழில், வேலை சம்பந்தமான பிரச்சினைகள், உடல்நலம், விடுமுறை போன்றவற்றை ஆராய்வதற்கென சமூக சேவையாளரின் மாநாடொன்றைக்கூட்டி பலருடைய ஆலோசனை களையும் கருத்துக்களையும் பரிமாறக் களம் அமைத்தார். தொடர்ந்து சுமார் 25 ஆண்டுகள் வருடத்தில் இரு தடவைகள் பல்வேறுவகையான சமூக சேவையாளரையும் அழைத்து இம் மாநாட்டைத் தொடர்ந்து நடத்திவந்தார்.

அறியாமை காரணமாக மது அருந்துதலே பொழுதுபோக்காகவும், உழைத்த பணத்தை குடும்பத்திற்குச் செலவழிக்காது மதுவுக்காகச் செலவு செய்தும் வந்த மக்களைக் கண்டித்து தடுத்து நிறுத்தினார். ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் இப்பழக்கத்தை மேற்கொண்டி ருப்பதைக் கவனித்து இளநீர், பால், சர்பத் போன்றவற்றைப் பருகுவதற்கு வழிகாட்டியதோடு, பால்சாலையையும் முதன் முதலில் கொழும்பில்

நிறுவினார். குழந்தைகளுக்கு, சிறுவர்களுக்கு என யாவருக்கும் பூரண சத்துள்ள பாலின் மகிமையைப் பிரசாரஞ் செய்து பால் பருகவேண்டியதன் அவசியத்தை இடித்துரைத்தார்.

இப்படி மக்களின் உன்னதவாழ்வியலுக்கு மிக மிக அத்தியா வசியமான பல விடயங்களைத் தொட்டுக்காட்டி, விளக்கம் கொடுத்தார். மருத்துவ வைத்தியர் என்றளவில் தனது சிந்தனைகளையும் சேவை களையும் மட்டுப்படுத்தாமல் மனிதம் மேன்மையுற வாழ்வதற்கான சகல துறைகளிலும் தனது அக்கறையைச் செலுத்தி அரும்பாடு பட்டார். பாடசாலை கல்வியில் பாலியல் கல்வியின் அவசியத்தை வற்புறுத்தினார். பெண்கள் பள்ளி சென்று கல்வி கற்பதையே சமூகச் சீரழிவென எண்ணும் பலர் மத்தியில் பள்ளியில் பாலியல் கல்வி அறிமுகம் செய்தலென்றால் அதன் விளைவு எப்படியாகுமென நாம் அனு மானிக்கலாம்.

மருத்துவத்தையே தனது பிரதான தொழிலாகக் கொண்டிருந்த இவர் சிறந்த சீர்திருத்தக் கருத்துக்களை உதிர்க்கும் பேச்சாளராகவும், புதிய புரட்சிகரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் செயற்பாட்டாள ராகவும் சிறந்த நூலாசிரியராகவும் இருந்துள்ளாரென்பதை அவர் வெளிக்கொணர்ந்த இரு பாடநூல்கள் விளக்குகின்றன. ஒன்று 1923 இல் எழுதிவெளியிட்ட ‘பாடசாலைகளுக்கான சுகாதார உடல் நலக் கைநூல்’. மற்றையது 1933இல் வெளியான ‘இலங்கைப் பாடசா லைகளுக்கான வீட்டுப்பணிக் கைநூல்’. இந்நூல்களின் முன்னு ரையிலும் எளிமை, ஒழுங்கு, சிக்கனம், சுகாதாரம், சுத்தம், என்பவற் றோடு சுதேசிய வாழ்வின் சிறந்த அம்சங்களையும் கடைப்பிடியுங்கள் என வற்புறுத்தியுள்ளார்.

பலவழிகளிலும் இந்நாட்டுமக்களை முன்னேற்றிவிட வேண்டு மென்ற பேரவாக் கொண்டிருந்த டாக்டர் மேரி ரட்ணம் அரசியலிலும் கண்ணோட்டஞ் செலுத்தப் பின் வாங்கினாரில்லை. ஆணாதிக்க சமுதாயமான இச்சமூகம் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையைப் பற்றிப் பேசவே இல்லை. எனவே 1927 இல் கல்விகற்ற மேல்தட்டு வர்க்கப் பெண்கள் ஒன்றிணைந்து பெண்கள் வாக்குரிமைக்குப் போராடு வதற்கான ஒரு சங்கத்தை ஏற்படுத்தினார். அதன் தொடக்ககால அங்கத்தவர்களுள் முக்கியமானவராக டாக்டர் மேரி ரட்ணமும் பங்கு

வகித்தார். 1927 டிசெம்பர் மாதம் 7 ஆந் திகதி இலங்கையின் முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்காகவின் தாயார் லேடி டயஸ் பண்டாரநாயக்காவின் தலைமையில் இக்கூட்டம் நடந்தது. அதிலே தேர்தலில் வாக்களிக்கும் உரிமை பெண்களுக்கும் அளிக்கப் பட வேண்டுமென்ற பிரேரணையை டாக்டரே முன்மொழிந்து உரையாற்றினார். பெண்களுடைய இக்கோரிக்கையை அன்று வெளி யான எல்லாப் பத்திரிகைகளுமே உற்சாகப்படுத்தி வரவேற்றன. பல தலையங்கங்களையும் செய்திகளையும் வெளியிட்டன; ஊக்கப் படுத்தின. மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதைப்போல மக்கள் நலனே தனது சொந்த நலனாகக் கொண்ட டாக்டர் மேரி ரட்ணம் பெண்கள் சகலதுறைகளிலும் முன்னேறினால் மாத்திரம் போதாது அரசியலிலும் பெண்கள் பங்கு கொள்ள வேண்டுமென்பதில் மிகுந்த ஆர்முள்ளவராக இருந்தார். இவர் பல பெண்களையும் அரசியலில் குதிக்குமாறு ஊக்கமூட்டினார். தானும் சுமார் 20 வருடங்களாக வசித்துவந்த பம்பலப்பிட்டி தொகுதியில் போட்டியிட்டு 1937 இல் முனிசிபல் சபையின் முதல் பெண் கவுன்சிலராகத் தெரிவு செய்யப் பட்டார். மக்களை மறந்து, நாற்காலியைப் பெற்றுக் கொண்டு அதை நிரப்புவதே தாம் கொண்ட தலைமைக்கொள்கையாக வாழும் அநேக அரசியல் போக்காளர் மத்தியில் முற்று முழுதாக மாறுபாடான பிரதிநிதி யாக மக்கள் நலனையே மனம் முழுதும் நிறைத்துக் கொண்டு, தன்னைத் தெரிவு செய்த மக்களுக்காக பணியாற்றினார். முனி சிப்பல் சபையிலும் மக்களின் வாழ்வியல் நலன்களான சுகாதாரம், வீட்டு வசதிகள், போக்குவரத்து, பொதுநூலகம், சனசமூக நிலையம், சந்தைகள் என்ப வற்றைக் கருத்தூன்றிக் கவனித்ததோடு குடும்பத்திட்ட நலன் அமைப்புக் களையும் ஏற்படுத்திச் சேவையாற்றுவதில் முனைப்புக் கொண்டார்.

1944 இல் அகில இலங்கை மாதர் சங்கத்தை ஆரம்பித்த உறுப்பினருள் ஒருவராக இயங்கிய இவரே இதன் முதலாவது தலை வராகவும் பொறுப்பான பதவியில் அமர்ந்து பெண்களின் அரசியல் உரிமைக்காகவும் தொழில், சட்டங்கள் சம்பந்தமாகவும் நடவடிக்கை களை மேற்கொள்ளும் பணிகளில் இணைந்து கொண்டார். இச்சங்கம் இன்றுவரை பல்வேறு சமூகப்பணிகளில் தன்னை ஈடுபடுத்திச் சேவை புரிந்து வருகிறது.

பல துறைகளிலும் தனது ஆளுமையைக் கூர்மைப்படுத்திக் கொண்ட இம்மாது பிரித்தானிய அரசால் வழங்கப்பட்ட அரச விருதினை முன்னர் தனது மருத்துவப்பட்டத்தினை அங்கீகரிக்காத ஆத்திரத்தினால் பெற்றுக் கொள்ள மறுத்த துணிச்சலும் மிக்கவராகவே வாழ்ந்தார்.

இலங்கையில் இவர் ஆற்றிய சேவையைப் பாராட்டிய 'ராமென் மக்ஸய்ஸே' என்ற விருதுக் குழுவினர் இவருக்கு 1958 ஆம் ஆண்டில் பத்தாயிரம் அமெரிக்கா டொலர் பெறுமதி வாய்ந்த இப்பரிசினை அளித்துக் கௌரவித்தது. பரிசு வழங்கப்பட்டபோது அவரது வயது 85. பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து வழங்கப்பட்ட இப்பரிசினை மிக்க மகிழ்ச்சியோடு சென்று பெற்றுக் கொண்டார்.

1962 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி இவர் மரணமான செய்தி எல்லோர் மனதையும் நோகடித்தது.

"கனடா தனது புதல்வியர் பலரை இலங்கைக்கு அனுப்பியுள்ளது. அவர்கள் வைத்தியர்களாக, மருத்துவ மாதர்களாக, கிறிஸ்தவ இளம் பெண்கள் சங்கச் செயலாளர்களாக இங்குவந்து அருஞ்சேவையாற்றியுள்ளனர். அவர்களில் மிகச் சிறந்தவர் இலங்கைப் பெண்களிடையே விழிப்புணர்வைத் தோற்றுவித்த டாக்டர் ரட்ணமாவார்" என 'டைம்ஸ் ஒப் சிலோன்' பத்திரிகை 1962 ஆம் ஆண்டு செப்டெம்பர் 20 ஆம் நாள் வெளியிட்ட செய்தியில் லங்கா மஹி சமிதியின் தலைமைப் பொறுப்பில் 1956 களிலிருந்த மர்ஜேயரி டி.மெல் தெரிவித்த குறிப்பை குமாரி ஜெயவர்தன தான்எழுதிய 'டாக்டர் மேரி ரட்ணம்' என்ற தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

(இக் கட்டுரையின் ஆரம்பப் பந்தியும் இறுதிப்பந்தியுமான பத்திரிகைச் செய்திகள் பேராசிரியர் சித்திரலேகா மொழி பெயர்த்த டாக்டர் மேரிரட்ணம் என்ற நூலிலிருந்து பெறப்பட்டவை. நன்றி)

4457

பொது நூலகம்
வலி. வடக்கு பிரதேச சபை
தெல்லிப்பளை

# நூல் இரவல் வழங்கும் நூலகம்

நூல்களை இரவலாகப் பெற்றுச் செல்வதற்கு முன்னர் தெரிவு செய்யப்பட்ட நூலின் நிலை பற்றி நன்கு பரிசீலித்துப் பார்த்து அவற்றின் பக்கங்களோ, அல்லது படங்களோ இல்லாதிருந்தால் அல்லது அந்நூலில் வேறு ஏதாவது விதத்தில் சேதம் ஏற் பட்டிருந்தால் அதுபற்றி நூலகருக்கு அறிவிக்க வேண்டும்.

இந்நூலை கீழ்க்காணும் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 02.11.19/156 | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

# ஈழத்துத் தமிழ்ப் பெண் ஆளுமைகள்

## பத்மா சோமகாந்தன்

அறியப்படாத நிலையிலும், அறிந்தும், ஆவண வெளிக்குக் கொண்டுவரப்படாத நிலையிலுமுள்ள ஆளுமைகள் இந்நூலிற் பதிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. ஆன்மீகம், சமூகம், கல்வி, சமூக சேவை முதலாம் துறைகளிலே ஊறியெழுந்த ஆளுமைகளின் எழுத்துக்கு வராத பரிமாணங்கள் இந்நூல் வழியாக எழுகோலம் பெறுகின்றன...... நூலை வாசிக்கும் பொழுது பல கருத்துக்களும் வினாக்களும் துளாவி எழுதலைக் குறிப்பிட வேண்டியுள்ளது.

அவ்வாறான அருட்டல்களைத் தூண்டும் எழுத்தையும், தொகுப்பையும் மேற்கொண்ட நூலாசிரியரது முயற்சி பெண்ணிய நோக்கிலே வினையூட்டும் பதிவுக்குரியது.



பத்மா சோமகாந்தன்: மரபு வழியான வைதீகப் புலத்திலிருந்து நேர்நிலை மாற்ற நெடுவழியில் முற்போக்கு எழுத்தாக்கப் புனைவுகளை முன்னெடுத்தவர் பத்மா சோமகாந்தன் அவர்கள். முற்போக்குக் கருத்தியலின் பிறிதொரு நீட்சியாக அமையும் பெண்ணியத்தைப் புனைவு வெளிக்குக் கொண்டுவருபவர்களுள் தனித்துவமானவர். அவரது ஆக்கமலர்ச்சி ஆளுமை பன்மை நிலைகளில் பரந்தும் விரிந்தும் நெடுமலர்ச்சி கொள்கின்றது. என்றும் எழுதுதல் என்ற தொடர்ச்சியோடு அவரின் ஆக்க நெடுவழி தொடர்கின்றது.

- பேராசிரியர் சபா. ஜெயராசா

குமரன் புத்தக இல்லம்

விடயம்: பெண்ணியம் / வரலாறு / இலக்கியம்

ISBN 978-955-659-331-0

விலை ரூபா 400.00

# 517